Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு
தினப்பதிப்பு
THINAMURASU


முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 பங்குனி 05 திங்கட்கிழமை (18.03.2013) பக்கங்கள் 20 ஓசை – 169
















# பொருளாதார ஸ்திரத்தன்மையை சீர்குலைக்கவே பிரேரணை

## அரசாங்கம் குற்றச்சாட்டு



(ஜெனிவா)

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்படும் போர்க்குற்றச்சாட்டுக்கள், இலங்கையின் அரசியல், சமூக, மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையைத் தகர்க்கும் நோக்கம் கொண்டவையென அரசாங்கம் குற்றஞ்சுமத்தியுள்ளது.

ஜெனிவா மனித உரிமைக்கான ஜனாதிபதியின் சிறப்புத் தூதுவரும், அமைச்சருமான மகிந்த சமரசிங்க பி.பி.சி. சந்தேசியவுக்கு வழங்கிய செவ்வியில் இவ்வாறு கூறியுள்ளார். சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஆகிய அமைப்புக்கள் விடுதலைப்புலிகளுடன் கைகோர்த்துச் செயற்படுகின்றன.

(19) ஆம் பக்கம் பார்க்க

## கடத்தப்பட்ட சிறுவன் யாழ். பொலிஸ் நிலையத்தில்

கடத்தப்பட்ட்தாகக் கூறப்படும் சிறுவனொருவன் யாழ். பொலிஸ் நிலையத்துக்கு நேற்றுக்காலை வந்துள்ளதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த முத்துலிங்கம் கோகுலன் (வயது-11) என்ற சிறுவனே நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கடத்திச் செல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நேற்று முன்தினம் நடை பெற்ற வடக்கின் கிரிக்கெட் போரை இச்சிறுவன் பார்வையிட்டு விட்டு வீட்டுக்குச் செல்வதற்காக யாழ். பஸ்நிலையத்தில் பேருந்துக்காகக் காத்திருந்துள்ளான். இதன்போது, மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இச்சிறுவனின் அண்ணா அழைத்துவரச்

(19) ஆம் பக்கம் பார்க்க

## அமெரிக்க பிரேரணைக்கு ஆதரவு அமைச்சர் சிதம்பரம் உறுதியளிப்பு



(காரைக்குடி)

கடந்த வருடம் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கெதிராக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை இந்தியா ஆதரித்ததுபோல், இம்முறையும் ஆதரிக்குமென தான் நம்புவதாக இந்திய மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்தார். காரைக்குடியில் நடைபெற்ற மத்திய அரசின் பட்ஜெட் விளக்கக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசும்போதே இவ்வாறு அவர் தெரிவித்தார். அங்குஅவர் மேலும் தெரிவித்ததாவது,

(19) ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேச விசாரணைக்கு அரசாங்கமே பொறுப்பு

### ஐ.தே.க. குற்றச்சாட்டு

ஐ.நா.வின் மனித உரிமைகள் பேரவையில் கடந்து ஆண்டு தீர்மானத்தை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் என்பதே இலங்கையின் முக்கிய எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு என்று அந்தக் கட்சியின் மூத்த உறுப்பினரான ஆர். யோகராஜன் தெரிவித்துள்ளார். மனித உரிமைகள் பேரவை கடந்த ஆண்டில் இலங்கை குறித்த தனது தீர்மானத்தில், இலங்கை தனது நல்லிணக்க ஆணைக்குழுவின்

(19) ஆம் பக்கம் பார்க்க

## இலங்கைக்கு எதிரான பிரேரணை தி.மு.க.வுடன் ஆலோசித்த பின் முடிவு

### இந்திய வெளியுறவு அமைச்சர் தகவல்

(லக்னோ)

இலங்கைக்கெதிரான பிரேரணை தொடர்பாக தி.மு.க.வுடன் ஆலோசனை நடத்திய பின்னர் முடிவு எடுக்கப்படுமென இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐ.நா.வின் மனித உரிமை மாநாட்டில் அமெரிக்கா இலங்கைக்கு எதிராக கொண்டுவரும் தீர்மானத்தில் மாற்றம் கொண்டு வர இந்தியா நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசுக்கு கொடுத்துவரும் ஆதரவு வாபஸ பெறப்படும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கருணாநிதி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த நிலையில் உத்தரப் பிரதேச மாநிலம் லக்னோவில் செய்தியாளர்களிடம் பேசிய இநதிய வெளியுறவுத்துறை அமைசசர் சல்மான் குர்ஷித், இலங்கைக்கு எதிரான தீர்மானம் மீது வாக்கெடுப்பு நடத்த இன்னும் கால அவகாசம் உள்ளது. இப்போதைக்கு எந்த முடிவும் எடுக்க

(19) ஆம் பக்கம் பார்க்க

## இன்று திறக்கப்படுகிறது மத்தள விமானநிலையம்

இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையமான "ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையம்" இன்றுகாலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

அம்பாந்தோட்டை மத்தளவில் அமைந்துள்ள இவ்விமான நிலையத்தை ஜனாதிபதி திறந்து வைப்பதுடன் இலங்கை விமானி ஒருவரினால் செலுத்தப்படும் எயார் அரேபியா விமான சேவைக்குச் சொந்தமான ஜீ 9508 ரக பயணிகள் விமானம் முதல் விமானமாக தரையிறங்குகிறது. திறப்பு விழாவில் கலந்து கொள்வதற்காக இந்த விமானத்தில் வெளிநாட்டு இராஜதந்திரிகளும் வருகை தரவுள்ளதாக சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிரியங்கர ஜயரட்ண தெரிவித்தார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேச தலையீட்டின் மூலமே அனைத்து மக்களுக்குமான தீர்வு

### நம்பிக்கை கொள்ளும் சம்பந்தன்

(கொழும்பு)


சர்வதேச தலையீட்டின் மூலமே இலங்கையிலுள்ள அனைத்து மக்களுக்குமான உரிய தீர்வு கிடைக்குமென தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அரசாங்கம் தான் வழங்கிய வாக்குறுதிகளை செயற்படுத்தாமை காரணமாகவே ஐக்கிய நாடுகள் சபையில் கேள்விக்கு முகங்கொடுத்துள்ளது. அரசாங்கத்தின் பொறுப்புக்கூறல், உறுதிப்பாட்டை நிறைவேற்றுதல் போன்றவற்றில் நம்பகத்தன்மையின்மை ஏற்பட்டுள்ளது.

(19) ஆம் பக்கம் பார்க்க

## பிரேரணையில் திருத்தம் வேண்டும் தவறின் கூட்டணியிலிருந்து "அவுட்"


### நிபந்தனை விதிக்கிறார் கருணாநிதி



இலங்கைக்கு எதிரான தீர்மானத்தில் திருத்தம் கொண்டுவரப்பட வில்லை என்றால் மத்திய அமைச்சரவையில் இருந்து மட்டுமல்ல காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் இருந்தே வெளியேற வேண்டிவரும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி எச்சரிக்கை விடுத்துள்ளார். சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய கருணாநிதி, இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்ற திருத்தத்தை அமெரிக்காவின் தீர்மானத்தில் கொண்டுவர வேண்டும், இலங்கைப் போர்க் குற்றம் தொடர்பாக சர்வதேச சுதந்திரமான விசாரணை நடத்தப்படவேண்டும். குறுகியகால வரமபுக்குள் விசாரணை நடத்தி முடிக்கப்பட வேண்டும். இது தொடர்பாக நேற்று முன்தினம் இரவு பிரதமருக்கும், கூட்டணித் தலைவர் சோனியாவுக்கும் கடிதம் எழுதி இருக்கிறேன். மேலும் எங்களுக்கும் இந்தக் கூட்டணிக்கும் உள்ள உறவு

(19) ஆம் பக்கம் பார்க்க

# மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்த
# அமைச்சர் டக்ளஸின் பங்களிப்பு அளப்பரியது



கடந்த யுத்தகாலத்தின் போது யாழ்ப்பாணத்தின் கல்வியில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டிருந்த நிலையில் பாடசாலைகள் தோறும பௌதீக வளங்களை முன்னுரிமை அடிப்படையில் நிறைவு செய்து, மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக பல்வேறு வழிகளில் அரும்பாடுபட்டு உழைத்துக் கொண்டிருப்பவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா என மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சூரியகுமாரி ஜெயவீரசிங்கம் தெரிவித்தார்.

மானிப்பாய் மகளிர் கல்லூரியின் பொன்விழாவையொட்டி நிர்மாணிக்கப்பட்ட பிரதான நுழைவாயில், பார்வையாளர் அரங்கு என்பனவற்றை நேற்றைய தினம் திறந்து வைக்கும் நிகழ்விற்கு தலைமை வகித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறிப்பாக யாழ்.மாவட்டத்தின் கல்வித்துறை வளர்ச்சிக்காக பல்வேறு வழிகளில் அரும் பாடுபட்டு உழைத்து வருவதுடன், அதற்கான செயற்திட்டங்களையும் சிறப்பாக முன்னெடுத்துக் கொண்டிருப்பவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா என்றும் சுட்டிக்காட்டினார்.

இதனிடையே எமது பாடசாலை மாணவிகள் நாட்டின் அசாதாரண காலப்பகுதியில் கொழும்பில் நடைபெற்ற தேசிய உடற்பயிற்சிப் போட்டிகளுக்காக கொழும்புக்குச் சென்ற வேளைகளில் அவர்களுக்கு இருப்பிட வசதி, உணவு உள்ளிட்ட வசதிகளை ஏற்பாடு செய்து தந்தவர் அமைச்சர் என்றும் இவ்வாறான சூழ்நிலையிலும் எமது மாணவிகள் தேசிய ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டனர் என்றும் தெரிவித்தார்.

அத்துடன், எமது பாடசாலையின் ஆரம்பப் பிரிவுக்கான கட்டடத் தொகுதியை அமைத்துத் தந்த பெருமையும் அமைச்சரையே சேரும் என்றும் சுட்டிக்காட்டினார்.

இதன்போது அமைச்சர் மற்றும் ஆளுநர் ஆகியோர் கல்லூரி வளாகத்தில் அமையப்பெற்றுள்ள புனரமைக்கப்பட்ட முருகன் ஆலயத்தில் இடம்பெற்ற பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கல்லூரியின் பிரதான நுழைவாயிலையும், பார்வையாளர் அரங்கையும் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தனர்.

புதிய நுழைவாயில் மற்றும் கோயில் புனரமைப்பு 25 இலட்சம் ரூபா செலவிலும், பார்வையாளர் அரங்கு 27 இலட்சம் ரூபா செலவிலும் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சத்தியசீலன், வடமாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் உடனிருந்தனர்.


## தேவை

இலங்கை நாணயம் ஒரு ரூபா தாள் எமக்கு தேவைப்படுகின்றது பாடசாலை கண்காட்சி ஒன்றுக்காக இந்த ஒரு ரூபா தாள் வைத்திருப்பவர்கள் 60/8 இந்துக் கல்லூரி லேன், யாழ்ப்பாணம். என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.



(R/099)


# குழிக்குள் விழுந்த பசு ஏழு நாட்களின் பின் மீட்பு



மலசலக் கூடக் குழியொன்றுக்குள் விழுந்த பசுமாடு ஒன்று ஏழு நாட்களுக்குப் பின்னர் மீட்கப்பட்டுள்ளது. ஆட்களற்ற வீட்டுக் காணியொன்றிற்குள் மேய்ச்சலுக்காக சென்ற இப்பசு, சிமெந்திலான பழுதடைந்த மலசலகூட மூடியின்மேல் ஏறியதையடுத்து அது உடைந்ததினால் குழிக்குள் விழுந்தது.

பசுவைக் காணாமல் அதன் உரிமையாளர் பல இடங்களிலும் தேடி அலைந்துள்ளார். பூக்கள் பறிப்பதற்காக நேற்றுக் காலை அக்காணிக்குள்சென்ற அயலவர் ஒருவர் இக் குழிக்குள் பசுமாடு விழுந்திருப்பதைக் கண்டு உரிமையாளருக்குத் தெரியப்படுத்தினார்.

கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது. பல பேர் சேர்ந்து பலத்த சிரமத்தின் மத்தியில் பசுமாட் டைக் குழிக்குள் இருந்து மீட்டனர். இது ஒரு கன்றுத்தாச்சிப் பசு என்பது குறிப்பிடத்தக்கது. (137)

# தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 25ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தலைமையில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் பொலிஸார் மற்றும் திணைக்களங்களின் உயரதிகாரிகள், பிரதேசசபை, நகர சபை அதிகாரிகள் கிராம அலுவலர்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (11)


## வாழ்த்துகிறோம் பல்லாண்டுகாலம் வாழ்வீர்



கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) நாடாளுமன்ற உறுப்பினர்



கந்தசாமி கமலேந்திரன் (கமல்) ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட அமைப்பாளர்

2012 ஆம் ஆண்டு யாழ். போதனாவைத்தியசாலையில் அமைய சுகாதார ஊழியர்களாக இருந்த 110 சிற்றூழியர்களுக்கு புதிய நிரந்தர சுகாதார கனிஷ்ட உதவியாளர்களாக பதவி உயர்வு கிடைப்பதற்கு முன்னின்று உழைத்து, நிரந்தர நியமனத்தை பெற்றுத்தந்தமைக்காகவும் மேலும் தங்கள் சேவை தொடரவும் மனமார வாழ்த்துகின்றோம்.

2012 இல் நிரந்தர சுகாதார உதவியாளர்களாக நியமனம் பெற்ற 110 கனிஷ்ட சுகாதார ஊழியர்கள்
போதனாவைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

(C/2474)


# பன்றித்தலைச்சி அம்மன் ஆலய பங்குனித்திங்கள் உற்சவம்

(சாவகச்சேரி)

பங்குனித்திங்கள் உற்சவம் இன்று ஆரம்பமாகின்றது. பங்குனித் திங்கள் உற்சவம் இம்முறை மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகை அம்மன் கோயிலில் மிகச்சிறப்பாக இடம்பெறவுள்ளது. நான்கு திங்களும் காலை 5.30 மணிக்குப் பூசை வழிபாடுகள் ஆரம்பமாகின்றன.

இம்முறையும் அடியார்களின் நலன் கருதி விசேடமாக பொலிஸ் பாதுகாப்பு, மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு உற்சவ கால வியாபாரிகளுக்கான கடைகள் கடந்த வெள்ளியன்று ஏலம் விடப்பட்டுள்ள நிலையில் கடைத் தொகுதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

வெளிவீதிகளில் அமைந்துள்ள தண்ணீர்ப் பந்தல்களில் தாகசாந்தி வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதோடு. கேணித் தீர்த்தத்தில் நீராடுபவர்கள், சவர்க்காரம்,சம்போ போன்ற பொருட்களைத் தவிர்த்து புனிதத் தன்மையை பேணுமாறு கேட்கப்பட்டுள்ளதோடு திருட்டுச் சம்பவங்களை ஊக்கப்படுத்தும் வகையில் தங்க நகைகளை அணிவதை தவிர்க்குமாறும் அடியார்கள் கோரப்பட்டுள்ளனர்.

ஆலய திருப்பணி நிதி சேகரிக்க எந்த ஒரு நபரோ நிறுவனமோ நியமிக்கப்படவில்லை. எனவே ஆலய அலுவலகத்தில் திருப்பணி நிதியினை செலுத்தி பற்றுச் சீட்டுக்களை பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆலய சூழலில் ஏற்படும் வாகனத் நெரிசலை தடுக்கும்வகையில் வாகன தரிப்பிடங்களில் வாகனங்களை நிறுத்துமாறும், விழாக்கால ஒழுங்குகளுக்கு அமைய அடியவர்கள் செயற்படுமாறு கோரப்படுவதோடு, சுகாதாரத்தை பேணுமாறும், கேட்கப்பட்டுள்ளது. இப்பங்குனித் திங்கள் உற்வசத்தை முன்னிட்டு வடபிராந்திய போக்குவரத்துச் சபையும், தனியார் பேருந்துச்சேவையும் விசேட போக்குவரத்துச் சேவைகளை வழங்குகின்றன.

சாவகச்சேரி பொலிஸாரின் வி[illegible] அலுவலகம் ஆலய சூழலில் அமைத்துள்ளதோடு முதலுதவிப் படையினரின் முகாம் மற்றும் விசேட அறிவித்தல் நிலையம் என்பனவும் அமைக்கப்பட்டுள்ளது.

கலாசாரத்துக்கு முரணான ஆடைகளை அணிவதை தவிர்த்து ஆசார சீலர்களாக ஆலய உற்சவத்தில் அடியவர்களை கலந்து கொள்ளுமாறு ஆலய தர்மகத்தா சபையினர் அறிவித்துள்ளனர்.

## பங்குனித் திங்கள் உற்சவம்

நுணாவில் குளம் கண்ணகை அம்மன் ஆலயத்தில் இன்று பங்குனித் திங்கள் உற்சவம் இடம்பெறுகின்றது. காலை அபிஷேக ஆராதனைகள் இடம்பெறுவதோடு விசேட பூசை வழிபாடுகளும் இடம்பெறும். அத்துடன் அன்ன தான நிகழ்வு பொங்கல் என்பன இடம் பெறும் அடியவர்களின் நேர்த்திக் கடன்கள் திருக்குளிர்ச்சி அபிஷேகம் இடம்பெறும்.

□ □ □

சாவகச்சேரி விளைவேலி துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் பங்குனித் திங்கள் உற்சவம் இன்று ஆரம்பமாகின்றது. இன்று காலை விசேட அபிஷேகம் இடம்பெற்று பூசைகள் இடம் பெறவுள்ளது.

பங்குனி உற்சவத்தின் விசேட அம்சமான நீர்க்கஞ்சி வார்க்கும் நிகழ்வும் இடம்பெறும். (இ)

# மாணவர்களின் ஆரோக்கியத்திற்கு உடற்பயிற்சி மிக அவசியமானது

## உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர்

(திருநெல்வேலி)

உடற்பயிற்சியின்மை காரணமாகவே நமது நாட்டு மக்களில் பலர் நோயாளிகளாகக் காணப்படுகின்றார்கள். உடற்பயிற்சி தினமும் செய்து வருவதன் மூலம் வயோதிப நிலையிலும் நாம் திடகாத்திரமாகவும், சுறுசுறுப்புடனும் ஆரோக்கியத்துடனும் வாழ முடியும் என யாழ். வலய உடற்கல்வி உதவிப்பணிப்பாளர் சண். தயாளன் தெரிவித்தார்.

கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம்பெற்ற இல்லமெய்வல்லுநர் போட்டியில் பிரதமவிருந்தினரகாக் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாடசாடலை அதிபர் கா.பரந்தாமன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது. தொடர்ந்து உரைநிகழ்த்திய பிரதம விருந்தினர், நாட்டில் 65 வீதமான மக்கள் நீரிழிவினால் பீடிக்கப்பட்டுள்ளார்கள் என அறியப்பட்டுள்ளது.

நீரிழிவுக்கு கட்டுப்பாடான உணவுக்ள மட்டுமல்லாது சீரான உடற்பயிற்சியும் அவசியம். பயிற்சியையும் மேற்கொள்ளல் வேண்டும். உடலுக்கு உறுதியையும், உள்ளத்துக்கு மன விருத்தியையும் தர வல்லது உடற்பயிற்சி.

காலையில் எழுந்ததும் மாணவர்கள் படிப்போடு நின்றுவிடாது உடலுக்கு வலுவூட்டும் உடற்பயிற்சியையும் சேர்த்து மேற்கொள்ளுவதினால் பல நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் எனக் கூறினார்.

இம் மெய்வல்லுநர் போட்டியில் சிறப்பு விருந்தினராக யாழ். கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி டொறிங்டனும், கௌரவ விருந்தினர்களாகப் பாடசாலையின் ஓய்வு நிலை ஆசிரியை திருமதி இராஜேஸ்வரனும் யாழ். போதனா வைத்தியசாலையின் வைத்தியக் கலாநிதி திருமதி தயாளினி மகேந்திரனும் கலந்துகொண்டனர்.

சேரன், சோழன், பாண்டியன் இல்லங்களில் சோழன் இல்லம் 280 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (137)

# குண்டும் குழியுமான வீதி புனரமைப்பு எப்போது?

(கரணவாய்)

கரணவாய் குஞ்சர் கடை சந்தியில் இருந்து மண்டான் உப்பு வீதிக்கு செல்லும் பிரதான வீதி நீண்டகாமாக புனரமைக்கப்படாமல் உள்ளதால் இவ்வீதியூடாக பயணம் செய்யும் பொதுமக்கள் தாம் சிரமங்களை எதிர் நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

இவ்வீதி நீண்ட காலமாக புனரமைகப்படாது குண்டும் குழியுமாக காணப்படுவதுடன், வீதியின் இருபக்கமும் பற்றைகள் மூடி இருப்பதால் இவ்வீதியூடாக செல்லமுடியாத நிலை தற்போது காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த வீதி புனரமைப்பு தொடர்பாக உரியவர்களுக்கு பல தடவை தெரியப்படுத்தியும் இதுவரை அதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என தெரிவிக்கும் பொதுமக்கள் இவ்வீதியை புனரமைக்க உரியவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என தமது ஆதங்கத்தை தெரிவிக்கின்றனர். (18)

# இலக்கு நோக்கிய செயற்திட்டம் யாழ். மாவட்ட செயலகத்தில் ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டச் செயலத்தில் விளைவுசார் இலக்கு நோக்கிய செயற்திட்டம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இந்தச் செயற்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகம் தெரிவித்துள்ளார்.

குறித்த ஒருவருடத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பில் தீர்மானிக்கப்பட்டு அந்த தீர்மானம் நோக்கியே இலக்கு இருக்கவேண்டும் என்பதற்காக இது அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளதாகவும், 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை இந்த செயற்திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் யாழ். மாவட்டச் செயலகத்தில் "வீடியோ நேர்முக தொடர்பாடல் முறை" அறிமுகம் செய்து வைக்கப் பட்டுட்டுள்ளதாகவும் அவசரத்தேவைகளுக்கு இதன் மூலம் தொடர்பாடல் மேற்கொள்ள முடியும்.

மேலும் இந்த வீடியோ நேர்முக தொடர்பாடல் முறை உரையாடல் வசதிகள் இலங்கையில் 8 மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் வடக்கில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் மட்டுமே இது தற்போது நடைமுறைப்படுத் தப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார். (02)

# சீர்செய்யப்பட்டது இணைப்பு வேலை

(பருத்தித்துறை)

யாழ். பருத்தித்துறை வீதிக் கும் மந்திகை மடத்தடிக்கும் இடையில் நேற்று முன்தினம் உடைந்த ரெலிக்கொம் தூண்கள் உடனடியாக மாற்றப்பட்டு புதிய தூண்கள் பொருத்தப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் குறித்த பகுதியில் ரெலிகொம் தொலை பேசி இணைப்பு தூண்கள் உடைந்ததால் இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டன.

எனினும் ரெலிகொம் நிறு வனத்தினர் உடனடியாக உடைந்த தூண்களை மாற்றி தொலை பேசி இணைப்பை சீர் செய்தனர். இத்தகைய பொறுப்புவாய்ந்த சேவையை அப்பகுதி மக்கள் பாராட்டியுள்ளனர். (109)

# கலைக்கான திறந்த தொகுப்பு நடமாடும் நூலகம் அங்குரார்ப்பணம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் கிரவுண்ட் வியூஸ் ஆதரவில் ஆசிய கலைக்காப்பகம் மற்றும் ரேக்கிங் லீவ்ஸ் அமைப்பு ஆகியன இணைந்து நடாத்திய 'திறந்த தொகுப்பு' என்ற நடமாடும் நூலக அங்குரார்ப்பண வைபவம் கடந்த வெளளிக்கிழமை சுன்னாகம் கிறிஸ்தவ சேவ ஆச்சிரமத்தில் நடைபெற்றது.

யாழ். பல்கலைக் கழக இராமநாதன் நுண்கலைப்பீடத்தின் சித்திரமும் வடிவமைப்பும் இணைப்பாளர் தா.சனாதனன் தலைமையில் நடைபெற்ற இந்த அங்குரார்ப்பாண நிகழ்வில் பிரதம அதிதீயாக யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் செல்வி. வசந்தி அரசரட்ணம் கலந்துகொண்டு ஆரம்பித்துவைத்தார்.

இந்த திறந்த தொகுப்பு நடமாடும் நூலக அங்குரார்ப்பாண நிகழ்வில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த கலைஞர்கள் கலந்துகொண்டனர்.

மிக அரிதான கலை தொடர்பான காட்சிக் கையேடுகள், பருவ கால இதழ்கள் மற்றும் விபரணக் குறிப்புக்கள் உள்ளிட்ட 400 வகையான புத்தகங்கள் மேற்படி நடமாடும் நூல கத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

பெருந்திரலான பல்கலைக் கழக மாணவர்கள், கலை ஆர்வலர்கள் இதில் கலந்துகொண்டு பயனடைந்துள்ளனர். இந் நடமாடும் நூலகம் படைப்பாளிகள், மாணவர்கள் தொழிற் தகைமையாளர்கள், ஆசிரியர்கள் இலக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டதாக அதன் ஏறபாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.(02)

# கட்டாக்காலி நாய்கள் வரணிப்பகுதியில் அதிகரிப்பு

(வரணி)

வரணிப் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இக்கட்டாக்காலி நாய்களின் தொல்லையால் பாடசாலை மாணவர்கள் பயத்துடன் 'செல்வதை அவதானிக்க முடிகிறது. அத்துடன் சில பெற்றோர்கள் தமது பிள்ளைகளை தாமே பாடசாலைக்கு கூட்டிச் சென்று வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

கடந்த வாரம் வீதியால் நடந்து சென்று கொண்டிருந்த யுவதியை நாய் கடித்ததில் அவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

எனவே கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என பொதுமக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (150)

# பொன்விழாவையொட்டி நடத்தப்பட்ட மாணவர்களுக்கான போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மானிப்பாய் மகளிர் கல்லூரியின் பொன் விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரங்கள் பாடசாலை அதிபரினால் வெளியிடப்பட்டுள்ளன.

மாணவர்களின் விபரம் வருமாறு

சுயஎழுத்தாக்கம் - பிரிவு 1 (தரம் 6, 7)

அ.கிருஷாந் (சங்கானை சிவப்பிரகாச மகா வித்தி), வி.வாணியா (இளவாலை கன்னியர் மடம் மகா வித்தி), ஆர்.ஜீவிதா (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை).

பிரிவு -2 (தரம் 8, 9)

ஆர்.லிசானி (இளவாலை கன்னியர்மடம் மகா வித்தி), வை.ஐங்கரன் (விக்ரோறியாக் கல்லூரி), எஸ்.நிருஜா (சங்கானை சிவப்பிரகாச மகா வித்தி).

பிரிவு -3 (தரம் 10, 11)

ஏ.மேரி பிரியதர்சினி (இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம்), ரி.தேவதர்சினி (இராமநாதன் கல்லூரி), ஆர்.திபூசன் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை).

சொல்வதெழுதல் பிரிவு -1

கே.மருதிகா (இளவாலை கன்னியர்மடம் மகா வித்தி), எஸ்.பிருந்தா (விக்ரோறியாக் கல்லூரி), ரி.கிரிதரன் (சங்கானை சிவப்பிரகாச மகா வித்தி).

பிரிவு -2

வி.பவித்ரா (சென் அனீஸ் ஆர்.சி.ரி.எம்.எஸ்), கே.காமி (இராமநாதன் கல்லூரி), ஜே.தனுசிகா (சங்கானை சிவப்பிரகாச மகா வித்தி).

பிரிவு -3

ரி.தாரணி (விக்டோறியாக் கல்லூரி), எஸ்.கேஜிகா (பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலை), எம்.நிரூசன் (யு,னியன் கல்லூரி).

# நிறுத்தல் கருவிகளுக்கு முத்திரையிடும் பணி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்கள் வியாபாரிகளது நிறுத்தல் மற்றும் அளவைகள் கருவிகளுக்கு முத்திரையிடும் பணிகள் எதிர்வரும் 21, 22 மற்றும் 25 ஆம் திகதிகளில் கொடிகாமத்தில் அமைந்துள்ள சாவகச்சேரிப் பிரதேச சபையின் தலைமை அலுல்வகத்தில் நடைபெறவுள்ளது.

இப்பிரதேச வியாபாரிகளும், வர்த்தகர்களும் தமது நிறுத்தல் கருவிகளுக்கு தவறாது முத்திரையிடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (11)

வெற்றியின் போது கை தட்டும் அந்த பத்து விரல்களை விட, தோல்வியின் போது கண்ணீர் துடைக்கும் ஒரு விரலுக்கே மதிப்பு அதிகம். பொன்மொழி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## யாருக்காக இந்தப் போராட்டங்கள்?

தமிழகத்தில் இலங்கைக்கெதிரான போராட்டங்கள் திடீரென மிகைப்பட்ட அளவில் வெடித்தெழும்பியிருப்பது பலரையும் ஆச்சரியப்பட வைத்துள்ளது. “இலங்கை அரசை சர்வதேச குற்றவாளிக்கூண்டில் நிறுத்த வேண்டும். வெறும் போர்க்குற்றம் அல்ல; இனப்படுகொலை செய்த அரசு என அதற்கு தண்டனை வாங்கித் தரவேண்டும். இந்தியா இலங்கையுடன் அனைத்து பொருளாதார உறவுகளையும் துண்டித்துக் கொள்ளவேண்டும். இந்தியாவுக்கும் இந்தப் பேரழிவில் முழு பங்கு உண்டு. தமிழகத்துக்கு என்று தனியாக வெளியுறவுத்துறை அமைக்கப்பட வேண்டும். இதையெல்லாம் செய்யவில்லையெனில் நாங்கள் வரி கட்டமாட்டோம்.” இப்படியான கோரிக்கைகளோடு மாணவர்கள் போராட ஆரம்பித்திருப்பது உண்மையில் தன்னெழுச்சியாக நடைபெற்றதுதானா என்ற சந்தேகத்தை இந்திய அரசியல் ஆய்வாளர்கள் எழுப்பியுள்ளார்கள்.

கருணாநிதியின் தி.மு.க, டெசோ கூட்டம் ஒன்றை டெல்லியில் நடத்தி, தமிழ் நாட்டில் ஒரு பொது வேலைநிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது. சீமான் கட்சியின் அங்கத்தவர் ஒருவர் தீக்குளித்து தற்கொலை செய்துள்ளதுடன், பின்னணியில் யார் என்ற சந்தேகத்தைக் கிளப்பியுள்ள ஒரு மாணவர் அமைப்பைச் சேர்ந்த எட்டு மாணவர்கள், சென்னையில் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்கியுள்ளார்கள்.

ஒரு தமிழ்க் குழுவினர் மதுரையில் அமைந்திருந்த மிகின் லங்கா அலுவலகத்தைச் சூறையாடியுள்ளனர். வை.கோபாலசாமியின் மதிமுக, இலங்கை உதவித் தூதரகத்தை முற்றுகையிட்டதுடன் இலங்கை ஜனாதிபதியின் உருவ பொம்மையை எரித்து, கூச்சலிட்டு ஆர்ப்பாட்டம் செய்ததில் கைதாகிப் பின்னர் விடுதலையானார்கள்.

நேற்று முன்தினம் தஞ்சை பெரியகோவிலுக்கு கல்விச்சுற்றுலா வந்த புத்த பிக்கு தாக்கப்பட்டு விரட்டியடிக்கப்பட்டார். அவர் திருச்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டபோதும் சென்ற வாகனத்தை மறித்து பயங்கர தாக்குதல் நடத்தப்பட்டது. இலங்கையைச் சேர்ந்த ஞானலேகா (வயது46) என்கிற இந்த புத்தபிக்கு டெல்லியில் தொல்லியல் துறை பட்டமேற்படிப்பு படித்து வருபவர். ஆராய்ச்சி மேற்கொள்வதற்காக டெல்லியிலிருந்து தஞ்சைக்கு கல்விச்சுற்றுலா வந்த 17 மாணவ, மாணவிகளில் இவரும் ஒருவராக இடம்பெற்றிருந்தார். தமிழ்தேச பொதுவுடமைக் கட்சியை சேர்ந்தவர்களே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இந்த அநாகரிக வன்முறைகள் உண்மையில் இலங்கைத் தமிழ்மக்கள் மீதான அக்கறையில் செய்யப்படுவதுதானா என்ற கேள்வி எழுகிறது. இலங்கை அரசை யுத்தக் குற்ற விசாரணைப் பொறியில் மாட்டுவதால் இங்குள்ள தமிழ் மக்களுக்கு என்ன நன்மை கிடைத்துவிடப் போகிறது என்பதை யாரும் விளக்காமலேயே ஆர்ப்பாட்டங்களை நடத்தி, அதையெல்லாம் ஊடகங்களில் தமிழ்ப் பெருமிதச் செய்திகளாக வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இலங்கையில் கஷ்டங்களுடன் வாழும் தமிழ் மக்களின் எண்ணிக்கையானது, தமிழ் நாட்டில் ஒரு மிகச்சிறிய மாவட்டத்தில் உள்ள மக்கள் தொகையை விட பலமடங்கு குறைவானது. தமிழக அரசோ எதிர்க்கட்சியோ அங்குள்ள மக்களோ நினைத்தால் ஒரே வாரத்திலேயே இங்குள்ள மக்களின் வாழ்க்கைக் கஷ்டங்களைப் போக்கிவிட முடியும். அனைவருக்கும் தொழில் வசதி இருப்பிட வசதி படிப்பு வசதிகளை ஏற்படுத்தித் தந்துவிட முடியும்.

அதையெல்லாவற்றையும் யாரும் கேட்பதுமில்லை, கருதுவதுமில்லை. குற்ற விசாரணை நடத்துவதிலும் தண்டனை வாங்கித் தருவதுமே திருப்தியானது என்று மிகையாகக் கொந்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த ‘மிகை’ இந்திய அரசை சங்கடப்படுத்துவதற்காக இலங்கைத் தமிழ் பிரச்சினையும் தமிழ் நாடும் பயன்படுத்திக் கொள்ளப் படுகின்றனவா வெளிச் சக்திகளால் என்ற சந்தேகத்தை இப்போது இந்திய ராஜதந்திரிகள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கிறது. - ஆசிரியர்

# ஜெனிவா வாக்கெடுப்பில் தோற்றுப்போனால் கண்காணிப்புக் குழு கொழும்பில் குதிக்கும்

## சிங்கள நாளிதழ் ஆரூடம்

(கொழும்பு)

போர்க்குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடாத்த சர்வதேச குழுவொன்று இலங்கை விஜயம் செய்யக் கூடுமென சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை மாநாட்டில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், சர்வதேச கண்காணிப்புக் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்யக் கூடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வாக்கெடுப்பில் தோல்வியடைந்தால் சர்வதேச கண்காணிப்பாளர்கள் இலங்கைக்கு விஜயம் செய்வதனை தவிர்க்க முடியாது என இராஜதந்திரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வாக்கெடுப்பில் தோல்வியடைந்தால் சர்வதேச கண்காணிப்பாளர்கள் நாட்டுக்குள் பிரவேசிக்கக் கூடிய சட்டப் பின்னணி உருவாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கா உள்ளிட்ட சில நாடுகள் இலங்கைக்கு எதிராக தீர்மானமொன்றை நிறைவேற்றும் முனைப்புக்களில் ஈடுபட்டுள்ளதாகவும், சர்வதேச விசாரணைகளுக்கு வழிகோலும் வகையில் இதில் சில சரத்துக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# கொழும்பில் பொதுநலவாய மாநாடு; எந்த அளவில் சாத்தியம் உண்டு

## கனேடிய பிரதிநிதி கொழும்பு விரைவு

(கொழும்பு)

பொதுநலவாய மாநாட்டை கொழும்பில் நடாத்துவது எந்த அளவுசாத்தியமானது என்று ஆராயும் முகமாக கனடாவின் விசேட பிரதிநிதியொருவர் இன்று கொழும்புக்கு வந்து சேருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை, எதிர்வரும் நவம்பர் மாதத்தில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள பொதுநலவாய தலைவர்களின் அமர்வை கனடா பகிஷ்கரிக்காது என்று கனடாவின் பொதுநலவாய நாடுகளுக்கான விசேட பிரதிநிதி ஹுக் சேகல் (Hugh Segal) தெரிவித்துள்ளார்.

கொழும்பு செல்லும் வழியில் லண்டனில் வைத்து கருத்துரைத்துள்ள விசேட பிரதிநிதியான செனட்டர் சேகல், தாம் கொழும்புக்கு உண்மையை கண்டறியும் நோக்குடன் பயணம் செய்வதாக குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய அமர்வை கனடா பகிஷ்கரிக்காது. எனினும் அதில் கனடாவின் பிரதமர் ஹாப்பர் பங்கேற்கமாட்டார் என்று சேகல் தெரிவித்துள்ளார்.

2011ஆம் ஆண்டு பேர்த்தில் நடைபெற்ற பொதுநலவாய அமர்வின் போது, இலங்கையில் 2009ஆம் ஆண்டு போரின் போது இரண்டு தரப்பாலும் போர்க்குற்றம் நிகழ்ந்ததாக சர்வதேச நிபுணர்களின் அறிக்கை சுட்டிக்காட்டியிருந்தது.

இதன் அடிப்படையிலேயே ஹாப்பர் இலங்கைக்கு செல்லப்போவதில்லை என்று தீர்மானித்துள்ளதாக சேகல் குறிப்பிட்டார். இலங்கைக்கு தாம் திறந்த மனதுடன் செல்வதாக குறிப்பிட்டுள்ள சேகல், சிங்கள, தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ மக்களின் நண்பனாகவே தாம் அங்கு செல்வதாக கூறியுள்ளார்.

இதன்படி இலங்கையின் உண்மை நிலைவர அறிக்கையை கனேடிய அரசாங்கத்துக்கு சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். ஏப்ரலில் லண்டனில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் நடவடிக்கைக்குழு கலந்துரையாடல் அட்டவணையில் இலங்கையின் முன்னாள் நீதியரசரின் பதவிநீக்க விடயமும் அடக்கப்பட்டுள்ளது. எனினும் அதில், இலங்கையில் பொதுநலவாய தலைவர்களின் அமர்வு நடத்தப்படுமா? நடத்தப்படாதா? என்ற தீர்மானங்கள் எடுக்கப்படும் என்பது தொடர்பில் தம்மால் கருத்துக்கூற முடியாது என்று சேகல் குறிப்பிட்டுள்ளார்.

கனேடிய அரசாங்கம், அங்குள்ள தமிழர்களின் வாக்குகளை நோக்காகக் கொண்டு செயற்படுகிறது என்று கூறப்படும் குற்றச்சாட்டை சேகல் மறுத்துள்ளார்.

தமது பயணத்தை இலங்கையின் கனேடிய உயர்ஸ்தானிகரகமே ஒழுங்கு செய்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

# ஆட்கடத்தலை அரசு சகிக்காது அவுஸ்ரேலியாவுக்கு நீதியமைச்சர் விளக்கம்

(கொழும்பு)

சட்ட விரோதமாக ஆட்களை அவுஸ்ரேலியா போன்ற வெளிநாடுகளுக்கு கடத்துவது பாரதூரமான செயலெனக் குறிப்பிட்ட நீதியமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் நாட்டுக்கு நாடு மேற்கொள்ளப்படும் எத்தகைய ஆட்கடத்தலையும் அரசாங்கம் அறவே சகித்துக் கொள்ளமாட்டாதென்றும் தெரிவித்தார்.

புகலிடம் கோருவோருக்கான அவுஸ்ரேலிய பிரதமரின் நிபுணர் குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற தலைமை வான்படைத் தளபதி அங்குஸ் ஹோஸ்டன் தலைமையிலான அவுஸ்ரேலிய உயர்மட்டக் குழுவினர் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமை அவரது அமைச்சில் சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கைக்கும் அவுஸ்ரேலியாவிற்கும் இடையில் 2009 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் ஊடாக சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளை முறியடிப்பதற்கான இருதரப்பு ஒத்துழைப்பு வலுப்படுத்தப்பட்டுள்ளது. அந்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் ஆட்கடத்தல் தொடர்பான மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கும், நீதவான் நீதிமன்ற நீதவான்களுக்கும் அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கும், வழக்குத் தொடுநர்களுக்கு களவாக ஆட்களை கடத்தல், சட்டவிரோத பணக் கடத்தல் என்பவற்றின் போதும், ஏனைய நாடுகளை ஊடறுத்துச் செல்லும் போதும் நடைபெறும் குற்றங்கள் பற்றிய செயலமர்வுகள் நடத்துவதற்கும் அவுஸ்ரேலியா உதவி வழங்கி வருகிறது.

இதனோடு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கும், பொதுமக்களுக்கும் புதிய குற்றங்கள் பற்றி உணர்த்துவதும், அறிவுறுத்துவதும் முக்கியத்துவத்தை வலியுறுத்திய அமைச்சர் ஹக்கீம், அவை தொடர்பில் அவுஸ்ரேலிய அரசாங்கம் வழங்கி வரும் ஆதரவிற்கு நன்றி தெரிவித்தார்.

பிரஸ்தாப புரிந்துணர்வு உடன்படிக்கையின் பயனாக இருநாடுகளுக்கும் இடையிலான நீதித்துறையுடன் தொடர்பான பரஸ்பர ஒத்துழைப்பானது நாடுகள் இரண்டிற்கும் பெரிதும் நன்மை பயக்கும் என நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது. சட்டவிரோத ஆட்கடத்தல் விவகாரம் தொடர்பாக அவுஸ்ரேலியத் தூதுவர் கிறெச் ஷிட்டிக் மனிதக் கடத்தல் மற்றும் நாடுகளை ஊடறுத்துச் செல்லும் போது நிகழும் குற்றச் செயல்கள் தொடர்பான இணை முகாமையாளர் கிறேக் கெல்லி, அவுஸ்ரேலிய குடிவரவு, குடியகல்வு திணைக்கள பிராந்திய பணிப்பாளர் ஜோஸ் அல்வரெஸ் ஆகியோரும் இத் தூதுக் குழுவில் இடம்பெற்றனர்.

## ஆரம்ப சுகாதார பிரிவு புதிய கட்டடத்தில்

(கைதடி)

கைதடி ஆரம்ப சுகாதார பராமரிப்புப் பிரிவு வைத்தியசாலை தற்போது புதிய இடத்தில் புதுப்பொலிவுடன் புதிய கட்டடத்தில் இயங்கிவருகின்றது.

இது கைதடி ஏ-9 வீதியருகே இயங்கிய இந்த வைத்தியசாலையே தற்போது அருகேயுள்ள நவீல்ட் பாடசாலை விடுதியில் இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. வைத்தியசாலை புதிய இடத்திற்கு மாற்றப்பட்டதும் போக்குவரத்து இடையூறு இன்றியும் நோயாளர்களின் வருகையும் அங்கு அதிகரிக்கின்றமையும் காணமுடிகின்றது. (80)

# அரை உண்மைகளின் அபாயம்

## B.R. மகாதேவன் கட்டுரையிலிருந்து

**மக்களாட்சியில் மக்கள்தான் மன்னர்கள் - அவர்கள் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகள்தான் அடுத்தகட்ட மன்னர்கள் என்பதுதான் பொதுவான நம்பிக்கை. ஆனால், உண்மையில் தேசங்கள் இவர்களால் ஆளப்படுவதில்லை. சர்வதேச வஞ்சக உளவாளிகளால் அது ஆளப்படுகிறது. பிரிவினைவாதிகளுக்கு உணவிடும் அவர்கள்தான் இறையாண்மையைக் கட்டிக் காக்கவேண்டும் என்ற பேரில் அரசையும் ஆட்டுவித்துவருகிறார்கள். சதுரங்கத்தின் இரண்டு பக்கமும் அவர்களே அமர்ந்து ஆடும் இந்த ஆட்டத்தில் உருட்டப்படும் காய்கள்தான் நாமும் நம் தலைவர்களும்.**

லயோலா கல்லூரி மாணவர்களின் "தன்னெழுச்சியான" போராட்டத்தைத் தொடர்ந்து தமிழகமெங்கும் புரட்சி அலை பொங்கி எழ ஆரம்பித்திருக்கிறது. ஏற்கெனவே கொந்தளித்துக் கொண்டிருந்த இணையவெளியைத் தொடர்ந்து. இப்போது ஊடக வெளியும் கொதிக்கத் தொடங்கியிருக்கிறது. காங்கிரஸ், திமுகவை தேர்தலில் தோற்கடிக்க இந்த 'எழுச்சி' உதவும் என்பதால், அதிமுக புன்முறுவலுடன் இந்தப்போராட்டங்களை மறைமுகமாக ஊக்குவித்து வருகிறது. ஆனால், ஜெயலலிதாவின் கையை மீறி இந்தப் போராட்டம் போக அனைத்து வாய்ப்புகளும் உண்டு. இந்தப் போராட்டத்தின் சில கோரிக்கைகள்: "இலங்கை அரசை சர்வதேச குற்றவாளிக்கூண்டில் நிறுத்த வேண்டும். வெறும் போர்க் குற்றம் அல்ல இனப்படுகொலை செய்த அரசு என அதற்கு தண்டனை வாங்கித் தரவேண்டும். இந்தியா - இலங்கையுடன் அனைத்து பொருளாதார உறவுகளையும் துண்டித்துக் கொள்ளவேண்டும். இந்தியாவுக்கும் இந்தப் பேரழிவில் முழுப் பங்கு உண்டு. தமிழகத்துக்கு என்று தனியாக வெளியுறவுத்துறை அமைக்கப்பட வேண்டும். இதையெல்லாம் செய்யவில்லையெனில் நாங்கள் வரி கட்டமாட்டோம்."

இந்தத் 'தன்னெழுச்சியான' கோரிக்கைகள் மாணவர்களுடையதுதான் என்ற நம்பிக்கை அனைவருக்கும் வரவேண்டும் என்பதற்காக சில மாணவத்தனமான கோரிக்கைகளும் இடம்பெற்றிருக்கின்றன. மற்றபடி



இந்த போராட்டத்தின் முக்கிய நோக்கம், இலங்கை செய்தது இனப்படுகொலை. இந்தியாவும் அதற்கு முழு உடந்தை. இந்த இரண்டு விஷயங்களைத் தமிழக மக்கள் மத்தியில் பரப்பவேண்டும் என்பது மட்டுமே.

மிகவும் உணர்வுபூர்வமான இந்தப் பிரச்னையில் தமிழகத்தில் இப்போது ஒருவித பாசிச மாற்று அமைப்பு கட்டமைக்கப்பட்டு வருகிறது. இலங்கைப் பிரச்னையில் தனி ஈழத்துக்குக் குறைவாக யார் பேசினாலும் அவர்கள் தமிழினத் துரோகியே என்ற நிலையை மெள்ள உருவாக்கி வருகிறார்கள். இலங்கை அரசு மோசமான குற்றங்களை இழைத்திருப்பது உண்மையே. ஆனால், இந்தக் குற்றச்சாட்டை முன்வைக்கும் ஒருவர் வேறு சில விஷயங்களையும் கட்டாயம் பேசியாக வேண்டும்.

இலங்கை ஈழப் பிரச்னை என்பது நீண்ட நெடும் வரலாறைக் கொண்டது. பல்வேறு ஊடுபாவுகள் கொண்டது. ஈடுபட்ட அனைத்து தரப்புகளின் கைகளிலும் ரத்தக் கறை உண்டு. ஆனால், அவை எல்லாம் பின்னுக்குத் தள்ளப்பட்டு ஒற்றை குற்றவாளி (சிங்கள-இந்திய கூட்டணி) மட்டும் கட்டம் கட்டப்படுவதற்கான சர்வதேச அரசியல் செயல்பட ஆரம்பித்திருக்கிறது. விடுதலைப் புலிகள் செயல்பட்டுவந்த காலகட்டத்தில் அந்த அமைப்பை தீவிரவாத அமைப்பு என்று சொல்லி இலங்கைக்கு ஆதரவு அளித்துவந்த அமெரிக்க அரசு இன்று யோக்கியன் போல் நீதிபீடத்தில் ஏறி அமர்ந்து இலங்கையைக் குற்றம் சாட்டுகிறது. அதோடு நின்றுவிடாமல் இந்திய அரசையும் சேர்த்தே குற்றவாளிக் கூண்டில் ஏற்றும் தந்திரத்தையும் சர்வதேச அரசியல் சக்திகள் செய்ய ஆரம்பித்திருக்கின்றன.

இலங்கையைப் பொறுத்தவரையில் தமிழர்களின் நலன் பாதுகாக்கப்பட வேண்டும் அவர்களுக்கு மாநில சுய ஆட்சி பெற்றுத் தரவேண்டும் என்பதுதான் நியாயமான நோக்கம். எனவே, ராஜீவ்காந்தி அந்த உடன்பாட்டுக்கு ஆத்மார்த்தமாக முயன்றார். இலங்கையின் வேண்டுகோளின் பேரில் அமைதிப்படை என இந்திய ராணுவத்தை அங்கு அனுப்பினார். தனி ஈழம் என்பது மிகவும் நியாயமற்ற கோரிக்கை என்பதுதான் இந்தியாவின் கொள்கை. இந்தியா மட்டுமல்ல உலகின் பெரும்பாலான நாடுகளின் தீர்மானமும் அதுவே.

ஆனால், இந்தியாவை இந்தப் போரில் சிக்க வைக்க வேண்டும் என்ற சர்வதேச தந்திரத்தின் அங்கமாக இலங்கை இந்திய அமைதிப் படையை தன் நாட்டுக்குள் முதலில் அனுமதித்தது. ஆனால், அடுத்தகட்டமாக தன்னுடைய இறையாண்மைக்கு இழுக்காகிவிட்டது என்ற போர்வையில் இந்திய ராணுவத்தைத் துரத்தி அடிக்கத் தீர்மானித்தது. தற்காலிக உடன்பாடாக விடுதலைப்புலிகளுடன் நட்புறவு கொண்டு, இந்திய ராணுவம் செய்தவற்றை விட மிக அதிகமான குற்றச்சாட்டுகளை அதன் மீது சுமத்தி அதை அங்கிருந்து அகற்றினார்கள். அடுத்த தேர்தலில் ராஜீவ் வென்றுவிடுவார் என்ற நிலை ஏற்பட்டபோது,மீண்டும் இந்திய அமைதிப் படையை அனுப்பிவிடுவாரோ என்ற பயத்தில், விடுதலைப்புலிகள் ராஜீவையும் அப்பாவிக் காவலர்களையும் இந்திய மண்ணில் கொன்றார்கள். அதுவரை விடுதலைப் புலிகளுக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் ஆதரவாக இருந்த தமிழக மாநிலக் கட்சிகளும் மக்களும் விடுதலைப் புலிகளுக்கு எதிர்நிலையை எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

(முன்னாள்) இந்தியப் பிரதமரைக் கொன்றதற்காகவும் தமிழகத்தில் பிரிவினை சக்திகள் பலம் பெற்றுவிடக் கூடாது என்பதற்காகவும் விடுதலைப் புலிகளை ஒழிக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்த இந்திய காங்கிரஸ் அரசு, இலங்கை அரசுக்கு விமான, கடல் சார்ந்த படைகளின் உதவியைத் தந்தது. முழுக்க முழுக்க விடுதலைப் புலிகளை ஒழிக்கத் தந்த இந்த உதவியானது இலங்கையில் நடந்த இன்ன பிற வன்முறைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு இன்று இந்தியாவும் போர் குற்றவாளியாக நிறுத்தப்பட்டிருக்கிறது. நாளை இந்தியா மீதும் கூட இனப்படுகொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்படலாம். ஏற்கெனவே ஆரிய திராவிட கதைகள் வேறு இங்கு வலுவாக வேரூன்றித்தான் இருக்கின்றன.

இந்தியா நிச்சயமாக இலங்கைக்கு எதிரான கடுமையான நிலைப்பாட்டை எடுக்கவே செய்யாது. அது முடியவும் செய்யாது. இலங்கை அரசு உள்நாட்டில் கலகம் விளைவித்தவர்களை அடக்கியிருக்கிறது. அங்கு சீனா காலூன்ற இடம் கொடுத்துவிடக்கூடாது. தமிழக பிரிவினை சக்திகள் வளர இடம் கொடுக்கக்கூடாது என்பது போன்ற வெளிப்படையான காரணங்களில் ஆரம்பித்து, ராஜிவ் கொல்லப்பட்டபோது அருகில் எந்த காங்கிரஸ் தலைவரும் இல்லாமல் போனது எப்படி? சம்பவ இடத்தில் கிடைத்த முக்கிய வீடியோ எப்படி மாயமாக மறைந்தது என்ற விடை-தெரியாத கேள்விகள் வரை பல காரணங்கள் இருக்கின்றன. எனவே, இந்தியா கடைசிவரை இலங்கைக்கு சாதகமாகவே நடந்துகொள்ளும். சர்வதேச அரங்கிலும் தமிழ் மக்கள் மனங்களிலும் இந்தியா மீதான மதிப்பு மேலும் குறையவே செய்யும்.

இப்படியான சூழலில் லயோலா கல்லூரி மாணவர்கள் 'தன்னெழுச்சியாக' போராட்டத்தை மூன்று மிக அபாயகரமான நோக்கங்களைக் கொண்டு ஆரம்பித்திருக்கிறார்கள்.முதலாவதாக இலங்கையில் நடந்தது இனப்படு கொலை என்று சொல்கிறார்கள். இது முழுக்க முழுக்கத் தவறானது. கிழக்குப் பகுதி தமிழர்கள், மலையகத்தமிழர்கள், இஸ்லாமியத் தமிழர்கள் எனப் பெரும்பான்மையான தமிழர்கள் விடுதலைப் புலிகளுக்கு எதிரானவர்களே. விடுதலைப் புலிகளுடைய கட்டுப்பாட்டுக்குள் இருந்த பகுதியில் மட்டும்தான் இலங்கை ராணுவம் தன் தாக்குதலை நிகழ்த்தியிருந்தது. கொழும்பிலும் பிற இலங்கையின் பகுதிகளிலும் ஈழத்தை விட மிக அதிக எண்ணிக்கையிலான தமிழர்கள் வசித்து வந்திருக்கிறார்கள். இப்போதும் வசித்து வரத்தான் செய்கிறார்கள். இனப்படுகொலை என்றால் அவர்களும் சேர்த்தே கொல்லப்பட்டிருப்பார்கள். ஆனால், இலங்கை அரசு அவர்களை ஒன்றும் செய்யவில்லை.

இரண்டாவதாக, இந்தப் போரில் விடுதலைப் புலிகள் செய்த அட்டூழியங்கள் குறித்து சிறு குறிப்புக்கூடக் கிடையாது. பொய்யைவிட அரை உண்மைகள் மிக ஆபத்தானவை. இலங்கை - ஈழப் பிரச்சினையில் இலங்கை அரசு எந்த அளவுக்கு வன்முறையில் ஈடுபட்டதோ அதற்கு சற்றும் குறையாத அட்டூழியங்களை விடுதலைப் புலிகள் இயக்கமும் செய்து வந்திருக்கிறது.

ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னால் யார் ஆண்டது அதற்கு முன் யார் ஆண்டது என்பதெல்லாம் ஒருவகையில் நிரூபிக்க முடியாத உண்மைகள். நவீன அரசு எப்போது எந்த ஒப்பந்தத்தின் பேரில் உருவாகிறதோ அதன் அடிப்படையில்தான் சிந்தனைகளும் செயல்பாடுகளும் இருக்கவேண்டும். சேர சோழ பாண்டியர்களின் போர்களால் நிறைந்ததுதான் தமிழக சரித்திரமும். நாளையே மதுரையை எங்களுக்குப் பிரித்துக்கொடு என்று பாண்டியர்கள் போராடினால் தமிழ் இறையாண்மை அரசு அவர்களை ஒடுக்கத்தான் செய்யும். தங்களுடைய நலன்கள் போதிய அளவுக்கு கவனிக்கப்படவில்லை என்று கருதும் பிரிவினர் தங்கள் எதிர்ப்பை ஆதி முதல் அந்தம் வரை ஜனநாயக முறையில் வெளிப்படுத்தி உரிமைகளை வென்றெடுக்கத்தான் முயற்சி செய்யவேண்டும்.

கேவலம் ஒரு கருத்துக் கணிப்பில் தனக்கு மக்கள் ஆதரவு இல்லை என்ற விஷயத்தை வெளியிட்ட அற்ப காரணத்துக்காக மூன்று தமிழ் அப்பாவிகளை உயிருடன் கொளுத்திய சம்பவத்தையும் லஞ்ச வழக்கில் கைது செய்யப்பட்டதற்கு பேருந்தை எரித்து தமிழ் மாணவிகளைக் கொன்றவர்களையும் இந்த இடத்தில் நினைத்துப் பார்ப்பது நல்லது. இவ்வளவு ஏன், சாதிப் பிரச்சினைகளில் கொல்லப்படுபவர்கள் எல்லோருமே அப்பாவித் தமிழர்கள்தானே. சிறு எதிர்ப்புக்கூட தெரிவிக்காத நிலையிலேயே இந்தப் படுகொலைகள் என்றால் நாட்டைப் பிரித்துக் கொடு என்றால் நம் தமிழ் அரசு நம் தமிழ் மக்களை எப்படி நடத்தும் என்பதை யோசித்துப் பார்த்துவிட்டு அடுத்த வார்த்தைகளைப் பேசுவது நல்லது.அகதிகளாக இங்கு வந்து ஆண்டுக்கணக்காக துன்பத்தில் தவிப்பவர்களுக்கு இந்த தமிழினத்தலைவர்களும் காவலர்களும் இனமான எழுச்சி நாயகர்களும் செய்து கிழித்தது என்ன என்பதையும் யோசித்துப் பார்க்க வேண்டும்.

விடுதலைப்புலிகள் இஸ்லாமியர்களைப்போட்டது போட்டபடி துரத்தியடித்ததில் இருந்து அவர்களை இலங்கை அரசின் கைக்கூலிகள் என்று கண்டதுண்டமாக வெட்டியும் வெடி குண்டு வைத்தும் கண்மூடித்தனமாகக் கொன்றழித்திருக்கிறார்கள்.

(17ஆம் பக்கம் பார்க்க)


## பல்கலை மாணவர் ஐவருக்கு வகுப்புத்தடை

(கொழும்பு)

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் ஐவருக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த மாணவர்கள் மாணவ ஒழுக்காற்று சட்டத்தை மீறிய செயற்பாட்டுக்கமைய இவர்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டதாக மாணவ ஆலோசகர் சந்தன பீ உடவத்த தெரிவித்தார்.

இதன்படி மாணவர்களுக்கு கட்டுப் பாட்டு அதிகர்ர சபையில் ஒழுக்காற்று விசாரணைகள் நடாத்தப்பட்டு முடிவொன்று எட்டப்படும் வரை அவர்களுக்கு பல்கலைக்கழக வளாகத்திற்குள் பிரவேசிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சப்ரகமுவ பல்கலைக் கழகத்தின் மாணவ சங்கத்திற்கு நேற்று முன்தினம் தடை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## புதுடில்லியில் உயர்மட்ட மந்திராலோசனை ஜெனிவாவில் இந்தியப் பங்களிப்பு என்ன?

### இராஜதந்திரத் தோல்விக்கு காங்கிரஸ் தயாரில்லை

(புதுடில்லி)

இலங்க்க தொடர்பான விவகாரம் குறித்து இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் உயர்மட்ட மாநாடு ஒன்று கூட்டப்பட்டு ஆராயப்பட்டிருக்கிறது.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரவுள்ள தீர்மானம் தொடர்பாக, புதுடில் லியில் இந்த உயர் மட்ட மாநாடு நடைபெற்றது.

சிறிலங்கா தமிழர் விவகாரம் மற்றும் இந்திய மீனவர்களைச் சுட்டுக் கொன்ற இத்தாலிய மாலுமிகள் விவகாரம் குறித்தும் இந்தக் கூட்டத்தில், தீவிரமாக ஆராயப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கூட்டத்தில், இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியாகாந்தி உள்ளிட்ட கட்சியின் முக்கிய தலைவர்கள் கலந்து கொண்டனர்.

ஜெனிவா தீர்மானம் குறித்து ஆராய்வதற்கான இந்தக் கூட்டத்துக்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்சித், சிறப்பு அழைப்பாளராக அழைக்கப்பட்டிருந்தார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அன்ரனி, நிதி அமைச்சர் ப.சிதம்பரம், சோனியா காந்தியின் அரசியல் செயலர் அகமட் பட்டேல் ஆகியோரும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர்.



## இலங்கை விஜயத்தை ஒத்திவைக்க நவிப்பிள்ளை தயாராக இல்லை

### மே மாத நடுப்பகுதியில் கொழும்பில் குதிப்பார்

(ஜெனிவா)

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் இலங்கைக்கான விஜயம் தொடர்ந்தும் பிற்போடப்பட முடியாததாகி விட்டதாகவும், எதிர்வரும் மே மாதம் நிச்சயம் நவநீதம்பிள்ளை கொழும்பிற்கான விஜயத்தை மேற்கொள்வார் என்றும் ஜெனிவாவில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை எதிர்வரும் மே மாதம் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார் என்று ஜெனிவா தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு முன்னர் இரு தடவைகள் பிற்போடப்பட்ட நவநீதம்பிள்ளையின் இலங்கை விஜயம், இம்முறை ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்படவுள்ள தீர்மானத்தின் நடைமுறைகள் குறித்து இலங்கை அரசாங்கத்துடன் கலந்துரையாடும் வகையிலேயே அமையப் பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைக்கு எதிராக பல்வேறு நாடுகள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ள நிலையில், இலங்கையின் நிலைமை குறித்து நேரில் வந்து பார்வையிடுமாறு நவநீதம்பிள்ளையிடம் இலங்கை அரசாங்கம் கடந்த வருடம் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பரபரப்பை தோற்றுவித்த பெண்ணின் சடலம்

(கொழும்பு)

வெட்டுக் காயங்களுடன் சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்த பெண் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டமை தொடர்பில் களுத்துறை தெற்கு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பெண்ணின் சடலம் பிரதேசத்திலுள்ள இறப்பர் தோட்டமொன்றில் இருந்து நேற்றுமுன்தினம் கண்டெக்கப்பட்டது. சந்தேகத்திற்கிடமான இந்த மரணம் குறித்து நீதவான் விசாரணைகளை நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சடலத்தின் வலப்புற காதுக்குப் பின்னாலும் வலது தோள்பட்டையிலும் வெட்டுக்காயங்கள் காணப்படுவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## ஜெனிவாவில் நடத்தவிருந்த போராட்டம் பிசுபிசுத்துப் போனது ஏன்?

### கோட்டே நகர மேயர் எல்லையில் வைத்து தடுப்பு

(ஜெனிவா)

ஜெனிவா மனித உரிமைகள் பேரவை கட்டட முன்றிலில் கொழும்பு கோட்டே நகர மேயர் ஜனக ரணவக்க நடத்தவிருந்த ஆர்ப்பாட்டத்தை சுவிஸ் அதிகாரிகள் தடுத்துள்ளனர்.

இத்தாலியின் ஊடாக சுவிஸ் சர்லாந்து செல்ல முயற்சித்த போது தாம் தடுக்கப்பட்டதாக ஜனக ரணவக்க குறிப்பிட்டுள்ளார். மேயர் மாநாடு ஒன்றுக்காக ஜனக இத்தாலிக்கு சென்றிருந்தார்.

இந்த நிலையில் அங்கிருந்து இலங்கையைச் சேர்ந்த பலருடன் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகளை கண்டிக்கும் முகமாக போராட்டம் ஒன்றை நடத்துவதற்காக அவர் ஜெனிவா செல்ல முயற்சித்தார்.

எனினும் தம்மை சுவிஸ் அதிகாரிகள் எல்லையில் வைத்து தடுத்து விட்டதாக ஜனக குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கை நிறுவனங்கள் மீது தமிழகத்தில் அச்சுறுத்தல் அதிகம்

### ஜெனிவாத் தீர்மானத்தின் எதிரொலி

(கொழும்பு)

தமிழகத்தில் உள்ள இலங்கையின் நிறுவனங்களுக்கு 24 மணித்தியால பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் யோசனை எதிர்வரும் வாரத்தில் ஜெனிவாவில் நிறைவேற்றப்படுவதை முன்னிட்டே இந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமது கோரிக்கையின் அடிப்படையிலேயே இந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இங்கையின் இந்தியாவுக்கான உதவி உயர்ஸ்தானிகர் அமீர் அஜ்வாட் தெரிவித்துள்ளார்.

இதன்படி உதவி உயர்ஸ்தானிகரகம், மகா போதி சங்கம், இலங்கை வங்கிக் கிளை, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் என்பவற்றுக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, புதுடில்லி பல்கலைக்கழகத்தில் அகழ்வாராச்சி தொடர்பில் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் பௌத்த பிக்கு உட்பட்ட 19 பேரைக் கொண்ட மாணவர் குழு நேற்று தஞ்சை பெரிய கோயிலில் தமது ஆய்வுகளை நடத்தச் சென்ற போதே பௌத்த பிக்கு மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக உதவி உயர் ஸ்தானிகர் குறிப்பிட்டுள்ளார்.

## உறுப்பினர்கள் தடம்மாறினால் எனக்கு எஸ்.எம்.எஸ். அனுப்புங்கள்

### இது ரணிலின் கோரிக்கை

(ஜெனிவா)

கட்சி தொடர்பில் செயற்படாது இருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களது விபரங்களை தனக்கு உடனடியாக குறுஞ்செய்தி (எஸ்.எம்.எஸ) அனுப்பி தெரியப்ப்டுத்துமாறு ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

கட்சி தொடர்பான செயறபாடுகளில் ஈடுபடாதுள்ள நகரசபை மற்றும் மாநகரசபை உறுப்பினரகள் தொடர்பில் எஸ்.எம்.எஸ். அனுப்பும் அதேவேளை, ஈமெயில் மூலமாகவும் தனக்கு தெரியப்படுத்துமாறும் ரணில் குறிப்பிட்டுள்ளார்.

கல்கமுவ பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். எஸ்.எம்.எஸ். அனுப்பும் இலக்கம் மற்றும் ஈமெயில் அனுப்பும் முகவரியும் மக்களுக்கு ரணில் தெரியப்படுத்தினார்.

## வீதியில் விளையாடிய சிறுவனை மோதித்தள்ளியது கன்ரர்

### மட்டக்களப்பில் பரிதாபம்

(கொழும்பு)

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மயிலம்பாவெளி பிரதேசத்தில் நேற்று வாகனத்தில் மோதுண்டு சிறுவனொருவன் உயிரிழந்துள்ளார். மயிலம்பாவெளி பிரதேசத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட முச்சக்கரவண்டியினுள் விளையாடிக் கொண்டிருந்த முத்துக்குமாரன் நிலக்ஸன் என்ற சிறுவன் எதிர்பாராத விதமாக வீதியைக் கடக்க முற்பட்டுள்ளான்.

அதேநேரம் அவ்வழியால் பயணித்த கன்ரர் ரக வாகனமொன்றில் மோதுண்டு உயிரிழந்துள்ளான்.சிறுவனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக ஏறாவூர் தள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பிரேத பரிசோதனையின் பின் சடலம் தந்தையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக ஏறாவூர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## உள்விவகாரங்களில் மூக்கை நுளைக்கக்கூடாது சர்வதேச சமூகத்துக்கு சீனா போதனை

(ஜெனிவா)

இலங்கையின் உள்விவகாரங்களில் சர்வதேச சமூகம் அநாவசியமாக மூக்கை நுளைக்கக்கூடாது என்று சீனாவின் ஐ.நா.வுக்கான வதிவிடப் பிரதிநிதி சர்வதேச சமூகத்திடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

ஐ.நா. மனித உரிமை அமர்வில் உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

ஒரு நாட்டில் உள்விவகாரங்களில் தலையிடுவதை சர்வதேச சமூகம் மேலும் தொடராது நிறுத்திக்கொள்ள வேண்டுமென்றும் பிரச்சினைகளை பாரபட்சமின்றி அணுகவேண்டும் என்றும் சீனா சர்வதேச சமூகத்தை மேலும் கோரியுள்ளது.

ஜெனிவாவில் இடம்பெற்று வரும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் கடந்த வெள்ளியன்று இலங்கை தொடர்பான மீளாய்வின்போது பல நாடுகள் தமது பாராட்டுதல்களை இலங்கைக்கு வழங்கியிருந்தன. இதன்போது பல நாடுகள் தமது கருத்துக்களையும் இலங்கை தொடர்பாக வழங்கியிருந்தன.

யுத்தம் முடிவடைந்த பின் இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்திகளை சர்வதேச சமூகம் அறிந்து கொள்ள வேண்டும். இலங்கை சர்வதேச சமூகத்திடம் எதிர்கொள்ளும் சவால்களுக்கு இநத அபிவிருத்தித் திட்டங்கள் சாதகமாக அமைந்துள்ளன என இதன போது பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

# உள்ளூர் சந்தைக்கு கடல் உணவுகள் எடுத்துவராமைக்கு காரணம் என்ன?

## ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் உதயன் எம்.பி கேள்வி

(வேலணை)

வேலணை பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் வேலணை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும், பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இக்கூட்டத்தின் போது மீன்பிடித் தொழிலிற்காக மானியங்கள் அரசினால் வழங்கப்படுகின்ற போதிலும் உள்ளூர் பிரதேச மக்களின் உணவுத் தேவைக்கு தேவையான கடலுணவுப்பொருட்கள் பிரதேச சந்தையில் விற்பனை செய்யப்படாமல் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

எதிர்காலத்தில் மேற்படி நடவடிக்கைகள் தொடராமல் உள்ளூர் மக்களின் உணவுத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னரே கடலுணவுப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட வேண்டுமெனஉரிய அதிகாரிகளுக்கும் கடற்றொழிலாளர் சங்கங்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் பணிப்புரை விடுத்தார்.

அத்துடன் வேலணைப் பிரதேச வைத்தியசாலைக்கு அவசரசேவைக்கான அம்புலன்ஸ் பற்றாக்குறையாக காணப்படுவதனால் புதிதாக ஓர் அம்புலன்ஸ் விரைவில் வழங்கப்படுமெனவும், தொடர்ந்து வேலணை பிரதான வீதிகள் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளதால் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குரிய வேலணை - ஊர்காவற்துறை வீதியினையும் வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்குரிய மண்டைதீவு பிரதான வீதியையும் விரைவில் புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு கூறினார்.



மேலும் வேலணை பிரதேச நீர் விநியோகம் அனைத்து பிரதேசங்களுக்கும் வழங்குவதற்கு நீர்வடிகால்அமைப்பு சபைக்கு கிணறு நீர்த்தாங்கி அமைப்பதற்கு காணி தேவைப்படுவதனால் சரியான முறையில் மக்களுக்கு நீர் விநியோகம் செய்யப்பட முடியாத நிலை உள்ளதால் பிரதேச சபை தவிசாளர் சிவராசா பிரதேச சபை காணியிலிருந்து உரிய திணைக்களத்திற்கு வழங்க முன்வந்ததையடுத்து உடனடியாக வழங்குமாறும் நீர்த்தாங்கி அமைக்கும் வரை பிரதேசசபை நீர் வாகனம் ஊடாக வழங்கப்படுமெனவும் தெரிவித்தார்.

அத்துடன் நன்னீர் குழாய் நன்னீர் வேறு தேவைகளிற்கு பயன்படுத்துவதுடன் குழாய்கள் திறந்து விடப்பட்டுள்ளதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது இவ்வாறான துஸ்பிரயோகம் செயற்பாடுகள் தொடரக் கூடாது எனத்தெரிவித்தார்.

அரச, தனியார் பேருந்துகளும் போட்டித்தன்மையுடனே போக்குவரத்து நடைபெறுவதாக மக்கள் விசனம் தெரிவித்ததையடுத்து இரு பேருந்து சேவையினரும் கலந்துரையாடி மக்களுக்கு தேவையானவகையில் நேர அட்டவணை தயாரித்து போக்குவரத்து சேவையினை வழங்குமாறும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், ஈ.பி.டி.பி யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) வேலணை பிரதேச செயலர், வேலணை பிரதேசசபை தவிசாளரும், ஈ.பி.டி.பி.யின் வேலணை அமைப்பாளருமான சிவராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தேங்காய்க்கு தட்டுப்பாடு

யாழில் மட்டுமின்றி தென்மராட்சிப் பிரதேசத்திலும் தேங்காயின் விலை அதிகரித்துள்ளதால் தேங்காய்களுக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

யாழில் உள்ள சந்தைகளிலும், வர்த்தக நிலையங்களிலும் ஒரு தேங்காய் 35 ரூபா முதல் 40 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது. இந்நிலையில் வரணி, கொடிகாமம் பிரதேசங்களில் உள்ள சந்தைகளிலும் குறித்த விலைக்கே தேங்காய் விற்பனை செய்யப்படுகிறது. இதனால் தேங்காய்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் தெரியவருகிறது. (150)

# வரணி வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வண்டி இல்லை

## - சிரமப்படும் பொதுமக்கள்

(யாழ்ப்பாணம்)

வரணிப் பிரதேச வைத்தியசாலைக்கென அம்புலன்ஸ் வண்டியொன்று இல்லாமையால் அவசர நோயாளர்கள் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வருவதாக அப்பகுதி பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வைத்தியசாலைக்கு பல கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களும் வருகை தந்து சிகிச்சையைப் பெறுகின்ற நிலையில் அவசர தேவைக்கும் மற்றும் இரவு வேளைகளில் அவசர நோயாளர்கள் தாம் வாகன வசதியில்லாமல் பணம் கொடுத்து தனியார் வாகனங்களில் சாவகச்சேரி, மந்திகை வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இதனால் வறுமையில் வாழும் நோயாளர்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இவ்வைத்தியசாலையில் பெண்களுக்கு விடுதி உள்ள நிலையில் ஆண்களுக்கென தனியான விடுதி இல்லாமல் நோயாளர்கள் மந்திகை, சாவகச்சேரி வைத்தியசாலைக்குச் செல்லவேண்டிய நிலையும் காணப்படுகிறது.

எனவே, நோயாளர்களின் நலனைக் கருத்திற்கொண்டு இவ்வைத்தியசாலைக்கென அம்புலன்ஸ் வண்டியொன்றைப் பெற்றுத்தர உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என நோயாளர்களும், பொதுமக்களும் கோரிக்கை விடுக்கின்றனர். (150)



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நெடுந்தீவு முகிலனின் சாம்பல் குறும்பட வெளியீடு அண்மையில் ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெற்றபோது பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட வீரகேசரி மூத்த ஊடகவியலாளர் வி.தேவராஜ், கரிகணன் பொது முகாமையாளர் திருமதி யாழினி ராஜ்குமார் ஆகியோரிடமிருந்து சாரங்கா நகைமாட உரிமையாளர் ப.சிவபாஸ்கரன் இறுவட்டைப் பெற்றுக்கொள்வதை காணலாம். (105)

# வைக்கோலுக்கு கிராக்கி

(வரணி)

தென்மராட்சிப் பகுதியில் இம்முறை வைக்கோலுக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. இந்த ஆண்டு காலம் தவறிப் பெய்த மழையினால் வயல்களில் நீர் நிரம்பியதால் பெருமளவு வைக்கோல்கள் கறுத்து பழுதடைந்துள்ளதுடன், விவசாயிகள் இயந்திரம் கொண்டு நெல்அறுவடை செய்வதால் அந்த வைக்கோல் பயன்பாட்டிற்கு உரியதாக இல்லாது தூளாக மாறுவதால் வைக்கோலின் விலை தற்போது அதிகரிக்கக் காரணம் என விவசாயிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர். (150)

# மருதங்கேணி கோட்ட தமிழ்த்தின விழா

(பருத்தித்துறை)

மருதங்கேணி கல்விக்கோட்ட தமிழ்மொழித்தின விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு சாலையடி றோ.க.த.க. பாடசாலையில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் த.பொன்னையா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடமராட்சி கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) யோ.ரவீந்திரன் பிரதம விருந்தினராகவும், வடமராட்சி ஈ.பி.டி.பி.யின் அமைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

பொய்க்கால் குதிரையாட்டம், தமிழ்கலாசார நிகழ்வுகளுடன் வரவேற்பு இடம்பெறும்.

இந்நிகழ்வுக்கு மருதங்கேணி கோட்டப் பிரிவில் உள்ள அதிபர்கள், தமிழ்ப் பாட ஆசிரியர்கள், இசை நடன ஆசிரியர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு கோட்டக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (109)

## முரசின் இன்றைய பலன்

(18.03.2013 - திங்கட்கிழமை)

நந்தன வருஷம் பங்குனி மாதம் 05 ஆம் திகதி. நட்சத்திரம் ரோகிணி முன்இரவு 10.51 வரை. திதி ஷஷ்டி காலை 7.32 வரை.

இராகுகாலம் 7.48 - 9.18 வரை

சுபநேரம் 12.18 - 1.48 வரை. அமிர்தம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | சூழ்நிலை உணர்ந்து செயல்படுவீர்கள். தொழில் புதிய வாய்ப்பு வரும். அதிக உழைப்பு. வரவு திருப்தி. வீட்டுப் பொருள் வாங்கி மகிழ்வு. |
| ரிஷபம் | அடுத்தவர் விவகாரத்தில் தலையிட வேண்டாம். சினம்தான் மிஞ்சும். தொழில் சராசரி. சிக்கனம் பின்பற்றுவீர்கள். சிகிச்சை தேவைப்படலாம். |
| மிதுனம் | மனதில் தேவையற்ற குழப்பம். தொழில் மந்த கதி. குடும்ப செலவுக்கு சிறு கடன். நண்பரிடம், விவாதம் வேண்டாம். கண்களின் பாதுகாப்பில் கவனம். |
| கடகம் | மனம் விரும்பாத விஷயத்தில் ஒதுங்குக. தொழிலில், சிறு குளறுபடி. நிதான செயற்பாட்டிற்கு நன்மை. எதிர்பாராத பரிசு கிடைக்கும். ஏற்றம். |
| சிம்மம் | இயற்கையை இரசிப்பதில் ஆர்வம். பணிகளில் சுறுசுறுப்பு. தொழில் செழிப்பு. பணவரவு. இல்லறத் துணை விரும்பியதை செய்வீர்கள். நன்மை நடக்கும். |
| கன்னி | மாறுபட்ட சூழ்நிலை தொந்தரவு தரலாம். பகைமை உள்ளவர்களிடம் விலகுக. தொழில், அனுகூலம் பயன்படுத்துக. தனம் சேரும். புதிய செலவு வரலாம். |
| துலாம் | பணியில் திறமை. திட்டமிட்ட வெற்றி, எளிதில் வரும். தொழில் செழிப்பு. குடும்பத்தினர் மகிழ்வு. சேமிப்பை கூடும். உத்தியோகத்தில் நற்பெயர், |
| விருச்சிகம் | போட்டி, பந்தயத்தில் சிக்க நேரும். சமயோசிதமாக விலகுக. தொழில், தாமதம். வரவை விட செலவு கூடும். ஒவ்வாத பொருட்களை விலக்குக. |
| தனுசு | நல்லவர்களின் நட்பு, உதவி கிடைக்கும். முடியாத பணி முடிப்பீர்கள். தொழில், அபரிமித வளர்ச்சி. உபரி வருமானம். குடும்ப சுபநிகழ்ச்சி நடத்தத் திட்டம். |
| மகரம் | உறவினர் பாசம் வியப்பைத் தரும். தொழில் நன்மை வரும். அளவான பணவரவு. முன்பு செய்த உதவிக்கு நற்பலன். உடல்நலம் சீராகும். விருந்து. |
| கும்பம் | சமூக நிகழ்வில் இனிய அனுபவம். பிறரை ஊக்கப்படுத்துவீர்கள். தொழில், வியத்தகு முன்னேற்றம். ஆதாய வரவு. விருந்து, விசேஷம். நற்செய்தி. |
| மீனம் | அக்கம்பக்கத்தவருடன் அன்பு வளரும். வெகுநாள் சஞ்சலம் விலகும். தொழில் வளர்ச்சி. ஆதாய பணவரவு. புதியவர்களும் நட்பு பாராட்டுவர். |

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(முழங்காவில்)

பூநகரி ஞானிமடம் அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்றைய தினம் பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் திருமதி. த. கனகசபை தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். கணேசலிங்கம், சிறப்பு விருந்தினராக பூநகரிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். தர்மரத்தினம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (112)

## சாய்னா வெளியேற்றம்

(பாசெல்)

சுவிஸ் ஓப்பன் பட்மின்ரன் தொடரின் அரையிறுதி ஆட்டத்துடன் இந்தியாவின் சாய்னா வெளியேறியுள்ளார். சுவிஸ் ஓப்பன் கிராண்ட்பிரீ கோல்ட் சர்வதேச பட்மின்ரன் போட்டி சுவிட்சர்லாந்தின் பாசெல் நகரில் நடந்து வருகிறது. இதன் பெண்கள் ஒற்றையர் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் சாய்னா நெக்வால், சீனாவின் ஷிஜியன் வாங்கை எதிர்கொண்டார். இந்த போட்டில் சாய்னா 21-11, 10-21, 21-06 என்ற செட் கணக்கில் வாங்கிடம் தோல்வியுற்று வெளியேறி னார்.




## பரபரப்பான கட்டத்தில் மொகாலி டெஸ்ட்



இந்திய, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான மொகாலி டெஸ்ட் போட்டி பரபரப்பான கட்டத்தை அடைந்துள்ளது. இந்திய, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான நான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவது போட்டி மொகாலியில் நடைபெற்று வருகின்றது. முதல் இனிங்ஸிற்காக விக்கெட் இழப்பின்றி 283 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நான்காம் நாள் ஆட்டத்தை இந்திய அணி தொடர்ந்தது. இதில் அறிமுக டெஸ்டில் சதமடித்த தவான் தொடர்ந்தும் சிறப்பாக ஆடி இரட்டைச் சதம் பெறுவார் என்ற எதிர்பார்ப்பு இரசிகர்கள் மத்தியில் நிலவியதால் நேற்றுக் காலை மொகாலியில் கூட்டம் அலை மோதியது. இன்ப வெள்ளத்தில் திளைத்த தவானால், இரசிகர்களுக்கு இன்பமளிக்க முடியவில்லை. மேலும் இரு ஓட்டங்களைப் பெற்ற வேளை, தவான் ஆட்டமிழந்தார். இந்த வேளை மைதானமே மயான அமைதியுற்றது. முதல் விக்கெட்டுக்காக இணைந்த இந்த ஜோடி 289 ஓட்டங்களைப் பெற்றது. தொடர்ந்து களமிறங்கிய புஜாரா வந்தவேகத்தில் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். இதன் பின் களமிறங்கிய சச்சின், முரளி விஜயுடன் நிதானமாக ஆடினார். சிறப்பாக ஆடிய முரளி விஜய் சதம் கடந்தார். இந்த ஜோடி சிறிது நேரத்தில் தகர்க்கப்பட்டது. இதன் பின் இந்திய அணியின் விக்கெட்டுக்கள் விரைவாக வீழ்த்தப்பட்டன. ஒருமுனையில் சிறப்பாக ஆடிய ஹோலிக்கு துணையாக எவரும் நிலைத்து நிற்கவில்லை. இருப்பினும் எட்டாவது விக்கெட்டுக்காக களமிறங்கிய புவனேஸ்வர குமார் ஹோலியுடன் சிறிது நேரம் தாக்குப் பிடித்தார். இந்த ஜோடி 61 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் பிரிக்கப்பட்டது. இறுதியில் இந்திய அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 499 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தவான் 174 பந்துகளை எதிர்கொண்டு 33 பவுண்டரிகள், இரண்டு சிக்ஸர்கள் அடங்கலாக 187, முரளி விஜய் 317 பந்துகளை எதிர்கொண்டு 19 பவுண்டரிகள், மூன்று சிக்ஸர்கள் அடங்கலாக 153, சச்சின் 37, புவனேஸ்வர குமார் 18 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். விராட் ஹோலி 129 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், ஏழு பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 67 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் பீற்றர் சிடில் ஐந்து, ஸ்ரார்க் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். 91 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக களமிறங்கிய அவுஸ்ரேலிய அணி, புவனேஸ்வர குமாரின் பந்துவீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறி வருகின்றது. நேற்றைய நான்காம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டவேளை, அவுஸ்ரேலிய அணி மூன்று விக்கெட்டுக்களை இழந்து 75 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் ஹியூஸ் ஆட்டமிழக்காது 58 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். பந்துவீச்சில் புவனேஸ்வர் குமார் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இன்று போட்டியின் இறுதி நாளாகும். அவுஸ்ரேலியா முதல் இனிங்ஸ் 408.

## வருண பகவான் துணை
### வெலிங்ரன் டெஸ்ட் திருப்புமுனை



(வெலிங்ரன்)

இங்கிலாந்து அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தோல்வியைத் தவிர்க்கும் வகையில் ஆடிவரும் நியூசிலாந்து அணிக்கு வருண பகவானின் குறுக்கீடு நேற்று பேருதவியாக அமைந்துவிட்டது.

நியூசிலாந்து, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக்கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டி நியூசிலாந்தின் வெலிங்ரனில் நடைபெற்று வருகின்றது.

இதில் இரண்டாவது இனிங்ஸிங்ற்காக ஒரு விக்கெட்டை இழந்து 77 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நியூசிலாந்து அணி நான்காம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்தது. புல்ரென், வில்லியம்ஸ் இணை ஆமை வேகத்தில் ஆடியது. இந்த ஜோடியைப் பிரிக்க இங்கிலாந்து அணியால் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. ஒரு வழியாக 56 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலை யில் இந்த ஜோடி பிரிக்கப்பட்டது. தொடர்ந்த களமிறங்கிய முன்னாள் கப்டன் டெய்லர் வில்லியம்சஸனுடன் நிதானமாக ஆடினார். இந்த ஜோடியைப் பிரிக்க இங்கிலாந்து அணி முயற்சி மேற்கொண்டவேளை வருண பகவானின் குறுக்கீடு நியூசிலாந்து அணிக்குச் சாதகமாக அமைந்துவிட்டது. நேற்றைய ஆட்டம் மழை காரணமாக பாதிப்பிற்கு உள்ளானது. இறுதியில் நேற்றைய நான்காம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட் வேளை நியூசிலாந்து அணி இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் வில்லியம்ஸன் 174 பந்துகளை எதிர்கொண்டு ஏழு பவுண்டரிகள் அடங்கலாக 55 ஓட்டங்களுடனும், டெய்லர் 90 பந்துகளை எதிர்கொண்டு ஏழு பவுண்டரிகள் அடங்கலாக 41 ஓட்டங்களுடனும் களத்திலிருந்தனர். மற்றும் புல்ரென் 114 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக 45 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். பந்து வீச்சில் அண்டர்சன், பனிசர் ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். இன்று போட்டியின் இறுதி நாளாகும். எட்டு விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் நியூசிலாந்து அணி இனிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க 49 ஓட்டங்களைப் பெறவேண்டியுள்ளது. இங்கிலாந்து முதல் இனிங்ஸ் 465. நியூசிலாந்து முதல் இனிங்ஸ் 254.

## கடின உழைப்பு தந்த பரிசு

(மோகாலி)

இந்திய ஒரு நாள் அணியில் இருந்து நீக்கப்பட்ட பின்னர் நான் கடினமாக உழைத்தேன். சிலவற்றில் என்னை மாற்றிக் கொண்டேன். இந்த வாய்ப்புக்காகத் தான் காத்திருந்தேன். அந்த வாய்ப்பை இரண்டு கைகளாலும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டது மகிழ்ச்சி அளிக்கிறது. அரைச் சதம் மற்றும் சதத்தை எட்டிய போது பதற்றமாக இருந்தேன் என அறிமுக டெஸ்டில் சதமடித்து அசத்திய தவான் தெரிவித்தார்.

எனது மனைவி ஆயிஷா முகர்ஜீ பெங்காலி- ஆங்கிலேயர் பெற்றோருக்கு பிறந்தவர். இப்போது அவர் அவுஸ்ரேலிய குடியுரிமை பெற்று மெல்போர்னில் வசிக்கிறார். எங்களுக்கு இரண்டு மகள்கள் உள்ளனர். கிரிக்கெட்டில் நான் சாதிக்க அவர்கள் எனக்காக நீண்ட காலமாகப் பிரார்த்தனை செய்கிறார்கள். அவர்களுக்கு எனது நன்றி. இது எனக்கும், எனது குடும்பத்தினருக்கும் மிகச்சிறந்த தருணமாகும். ஆட்டம் முடிந்த பின்னர் எனது மனைவியிடம் பேசினேன். அவர் மிகவும் உணர்ச்சிவசப்பட்டார். இந்த தொடர் முடிந்ததும் அவுஸ்ரேலியா செல்ல இருக்கிறேன்.டெஸ்ட் போட்டியில் அறிமுகம் ஆனதற்கான தொப்பியை சச்சின் டெண்டுல்கரிடம் இருந்து பெற்றது எனது வாழ்க்கையில் மறக்க முடியாத தருணம். குழந்தை பருவத்தில் இருந்தே அவரது ஆட்டத்தை பார்த்துள்ளேன். அவருடன் இணைந்து விளையாடியதன் மூலம் எனது கனவு நனவாகியுள்ளது. உள்ளூர் போட்டிகளில் உங்களை ஒரு தைரியமான, அதிரடி வீரராக நாங்கள் அறிவோம். இப்போது சர்வதேச அளவிலும் அது போன்று அதிரடிய வீரராக பார்ப்போம் என்று நம்புகிறேன் என்று டெண்டுல்கர் என்னிடம் கூறினார் எனவும் அவர் தெரிவித்தார்.

## தேர்தல் ஒத்திவைப்பு

(கொழும்பு)

இம்மாதம் 30ஆம் திகதி நடைபெறவிருந்த இலங்கை கிரிக்கெட் சபைத் தேர்தல் ஏப்ரல் 16ஆம் திகதி வரை பிற்போடப்பட்டுள்ளது.

இவ்விடயத்தை விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

இலங்கை கிரிக்கெட் தலைவர் பதவிக்கு போட்டியிடும் நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபாலவின் வேட்புமனு தொடர்பில் விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை சட்ட மா அதிபரின் ஆலோசனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளமையே இதற்கு காரணம் என அவர் தெரிவித்தார்.

சட்ட மாஅதிபரின் ஆலோசனை கிடைப்பதற்கு சில காலம் செல்லும் என்பதால் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் வேண்டுகோளை கவனத்திற் கொண்டு கிரிக்கெட் தேர்தலை பிற்போடுவதற்கு தீர்மானித்ததாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.



## இறுதியில் ஷரபோவா

(நியூயோர்க்)

இண்டியன் வெல்ஸ் ரென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் விளையாட மரியா ஷரபோவா (ரஷயா) தகுதி பெற்றார். அரையிறுதியில் சக வீராங்கனை மரியா கிரிலென்கோவுடன் நேற்று முன்தினம் மோதிய ஷரபோவா 6,4, 6,3 என்ற நேர் செட்களில் வென்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றார். மற்றொரு அரையிறுதியில் கரோலின் வோஸ்னியாக்கி (டென்மார்க்) 2,6, 6,4, 7,5 என்ற செட் கணக்கில் ஏஞ்சலிக் கெர்பரை (ஜேர்மனி) வீழ்த்தினார். இறுதிப் போட்டியில் ஷரபோவா, வோஸ்னியாக்கி மோதவுள்ளனர். இதேவேளை, ஆண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் முதல் நிலை வீரர் ஜோகோவிச் (சேர்பியா) 6,3, 6,1 என்ற நேர் செட்களில் சோங்காவை (பிரான்ஸ்) வென்றார். மற்றொரு காலிறுதியில் இங்கிலாந்தின் ஆண்டி முர்ரே 7,6 (7,5), 3,6, 1,6 என்ற செட் கணக்கில் டெல் போட்ரோவிடம் (ஆர்ஜென்ரீனா) தோற்று வெளியேறினார்.



## சங்கக்கார ஹட்ரிக் சதம்
## இலங்கை முன்னிலை

சங்கக்கார, சண்டிமல் ஆகியோரின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் கொழும்பு டெஸ்டில் இலங்கை அணி முன்னிலை பெற்றுள்ளது. இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டி கொழும்பு பிரேமதாச விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இதில் முதல் இனிங்ஸிற்காக ஒரு விக்கெட்டை இழந்து 18 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இரண்டாம் நாள் ஆட்டத்தை இலங்கை அணி தொடர்ந்தது. பங்களாதேஷ் அணியின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாத முன்னணி வீரர்கள் விரைவாக ஆட்டமிழந்தனர். ஒரு கட்டத்தில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 69 ஓட்டங்களைப் பெற்று இலங்கை அணி தடுமாறியது. இந்நிலையில் ஐந்தாவது விக்கெட்டுக்காக களமிறங்கிய சண்டிமல் சங்கக்காரவுடன் இணைந்து பொறுப்புடன் ஆடினார். இந்த ஜோடியைப் பிரிக்க பங்களாதேஷ் அணி கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டது. இருவரும் சதம் அடிக்கும் வரை எந்தப் பயனும் அதற்குக் கிடைக்கவில்லை. 195 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இந்த இணை பிரிக்கப்பட்டது. ஒரு முனையில் சங்கக்கார நிதானமாக ஆடிவரும் நிலையில் மறுமுனையில் விக்கெட்டுக்கள் சாய்க்கப்பட்டு வருகின்றது. இறுதியில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்ட வேளை, இலங்கை இணி ஆறு விக்கெட்டுக்களை இழந்து 294 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சங்கக்கார 271 பந்துகளை எதிர்கொண்டு 10 பவுண்டரிகள் அடங்கலாக 127 ஓட்டங்களைப்பெற்று ஆட்டமிழக்காதுள்ளார்.டெஸ்ட் அரங்கில் பெற்ற (முதல் டெஸ்டில் இரு இனிங்ஸிலும் சதம்) ஹட்ரிக் சதமாக அமைந்தது. சண்டிமல் 176 பந்துகளில் எட்டு பவுண்டரிகள் அடங்கலாக 102 ஓட்டங்களைப் பெற்றார். ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் ருபல் உசைன், ஆர். இஸ்லாம் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும். நான்கு விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் இலங்கை அணி 54 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கின்றது. பங்களாதேஷ் முதல் இனிங்ஸ் 240.

# கரைச்சி கோட்ட மட்ட பெருவிளையாட்டு முடிவுகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி கோட்டபாடசாலைகளுக்கிடையிலான பெரு விளையாட்டுப் போட்டியின் ஆண்கள் பிரிவுக்கான முடிவு வெளியிடப்பட்டுள்ளது.

19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான எல்லே போட்டியில் முதலாமிடத்தினை உருத்திரபுரம் மகாவித்தியால அணியும், இரண்டாமிடத்தினை திருவையாறு மகாவித்தியாலய அணியும், மூன்றாமிடத்தினை கிளிநொச்சி மத்திய கல்லூரி அணியும் பெற்றுள்ளன.

15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கபடி போட்டியில் முதலாமிடத்தினை சிவநகர் அ.த.க. பாடசாலை அணியும், இரண்டாமிடத்தினை கனகாம்பிகைக் குளம் அ.த.க. பாடசாலை அணியும், மூன்றாமிடத்தினை கிளிநொச்சி மத்திய கல்லூரி அணியும் பெற்றுக் கொண்டன.

19 வயது பிரிவில் முதலாமிடத்தினை சிவநகர் அ.த.க. பாடசாலை அணியும் இரண்டாமிடத்தினை உருத்திபுரம் மகா வித் தியாலயல அணியும் மூன்றாமிடத்தினை கனகாம்பிகைக்குளம் அ.த.க. பாடசாலை அணியும் பெற்றுள்ளன.

15 வயதுப் பிரிவு அணிகளுக் கிடையிலான கால்பந்தாட்டப் போட்டியில் முதலாமிடத்தினை சிவநகர் அ.த.க. பாடசாலை அணியும், இரண்டாமிடத்தினை வட்டக்கச்சி மகாவித்தியாலய அணியும் மூன்றாமிடத்தினை விவேகானந்தா வித்தியாலய அணியும் பெற்றுக் கொண்டன.

17 வயது பிரிவு அணிகளுக்கிடையிலான கால்பந்துப் போட்டியில் முதலாமிடத்தினை சிவநகர் அ.த.க. பாடசாலை அணியும் இரண்டாமிடத்தினை உருத்திரபுரம் மகாவித்தியாலய அணியும் மூன்றாமிடத்தினை அக்கராயன் மகாவித்தியாலய அணியும் பெற்றுக் கொண்டன.

19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கால்பந்துப் போட்டியில் முதலாமிடத்தினை கிளிநொச்சி மத்திய கல்லூரி அணியும் இரண்டாமிடத்தினை திருவையாறு மகாவித்தியாலய அணியும் மூன்றாமிடத்தினை இராமநாதபுரம் மகாவித்தியாலய அணியும் பெற்றுள்ளன.

15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டியில் முதலாமிடத்தினை இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை அணியும் இரண்டாமிடத்தினை பாரதி வித்தியாலய அணியும் மூன்றாமிடத்தினை கிளிநொச்சி இந்துக்கல்லூரி அணியும் பெற்றுக்கொண்டன.

17வயது பிரிவு அணிகளுக்கிடையிலானகரப்பந்துப்போட்டியில் முதலாமிடத்தினை இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை அணியும் இரண்டாமிடத்தினை விவேகானந்த வித்தியாலய அணியும் மூன்றாமிடத்தினை கனகபுரம் மகாவித்தியாலய அணியும் பெற்றுள்ளன.


19 வயது பிரிவு அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டியில் முதலாமிடத்தினை இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை அணியும் இரண்டாமிடத்தினைகிளிநொச்சி இந்துக்கல்லூரி அணியும் மூன்றாமிடத்தினை வட்டக்கச்சி மகாவித்தியாலய அணியும் பெற்றுள்ளன. (160)



யாழ். மத்திய கல்லூரிக்கு ஒரு தொகுதி உள்ளக விளையாட்டு உபகரணங்கள் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் வழங்கப்பட்டது. நேற்று முன்தினம் நிறைவடைந்த வடக்கின் போர் என வர்ணிக்கப்படுகின்ற மூன்று நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டியின் இறுதி நாள் ஆட்டத்தை கண்டு மகிழச் சென்றவேளையே அமைச்சரினால் இந்த உபகரணம் கல்லூரி அதிபர் எழில்வேந்தனிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி சாதிக்க முயலவேண்டும்

## கோப்பாயில் சுசந்திகா



(கோப்பாய்)

தற்போது இலங்கையில் உள்ள விளையாட்டு வீரர்களுக்கு, சந்தர்ப்பங்கள் மற்றும் அவர்களுக்கான பயிற்சிகள் தாராளமாகக் கிடைக்கின்றன. அவற்றினை சரியாகப் பயன்படுத்தி விளையாட்டுத்துறையில் தங்களை அபிவிருத்தி செய்துகொள்ள அவர்கள் முயலவேண்டும் என இலங்கை மெய்வன்மைச் சங்கத்தின் உபதலைவர் சுசந்திகா ஜெயசிங்க தெரிவித்தார்.

யாழிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவர் வட மாகாண விளையாட்டுத்துறை சார்ந்தவர்களுடன், வட மாகாண விளையாட்டு அபிவிருத்தி குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், விளையாட்டுத் துறையில் வளரவேண்டும் என்றால் கடினமான உழைப்பு, தன்னம்பிக்கையும் வேண்டும். தன்னம் பிக்கை கொண்டு உழைத்தமையினாலேயே எனக்கு ஒலிம்பிக்கில் வெண்கலப் பதக்கம் கிடைத்தது.தற்போது உள்ள சூழலில் விளையாட்டுத்துறையினருக்கு பெருமளவான செயலமர்வுகள் நடைபெற்று, அவர்களின் தன்னம்பிக்கை அதிகரிக்கப்படுகின்றது.இந்நிலைமையானது முன்னர் குறைவாகவேகாணப்பட்டது. எனது காலத்தில் கூட இவ்வாறான நிலைமைகள் இருக்கவில்லை. அவ்வாறு இருந்திருந்தால் ஒலிம்பிக் போட்டி உட்பட பல தடகளப்போட்டிகளில் என்னால் சாதித்திருக்க முடியும். ஆனால், அந்த வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்திருக்கின்றது. இது ஓர் அரிய வாய்ப்பு. இதனை நீங்கள் அனைவரும் சரிவரப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே எனது விருப்பம். யாருமே சாதனையாளர்களாகப் பிறப்பதில்லை. அவரின் முயற்சி, சூழலே அவரைச் சாதனையாளராக வெளிக்கொணர்கின்றது. தற்போது எங்களிடத்தில் நல்ல தொழில்நுட்பம், பயிற்சி முகாம், செயலமர்கள் என எல்லாமே கொட்டிக் கிடக்கின்றது. இதனைப் பயன்படுத்தி, நாட்டுக்கும் பெருமை சேர்க்க வேண்டிய கடப்பாடு உங்களிடம் இருக்கின்றது. இதனை நீங்கள் உணர்ந்து கொண்டால் போதும். பாதி தடைகளைத் தாண்டிதற்குச் சமன். எம்மிடையே இருக்கும் மொழிப் பிரச்சினை என்னை மிகவும் கவலையடைய வைக்கின்றது. எனக்கு தமிழ் தெரி யாது, உங்களுக்கு சிங்களம் தெரியாது. மொழியொன்று பிரச்சினையாக இல்லாமல் இருந்திருந்தால், என் முழு மன எண்ணங்களையும் உங்களுடன் பகிர்ந்திருப்பேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

விளையாட்டு செய்திகள்

# நெடுந்தீவில் இன்று கபடி, வலைப்பந்து

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பிரதேச விளையாட்டு விழாவின் ஓர் அங்கமாக தற்போது பெரு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் இன்றைய தினம் மதியம் 2.00 மணிக்கு கபடி மற்றும் வலைப்பந்தாட்டப் போட்டிகள் நெடுந்தீவு மகாவித்தியா்லய மைதானத்தில் இடம்பெறவுள்ளதாக பிரதேச விளையாட்டு உத்தியோகஸ்தர் தெரிவித் துள்ளார்.

ஆண், பெண் என இருபாலாருக்குமிடையில் இடம்பெறவுள்ள அணிகளை குறித்த நேரத்திற்கு வுருகைதந்துபோட்டி சிறப்புற நடைபெற ஒத்துழைப்புத் தருமாறும் அவர் கேட்டுள்ளார். (93)



வேலணை துறையூர் ஐயனார் இளைஞர் கழகத்திற்கு, யாழ். மாவட்ட இளைஞர் சேவை மன்றத்தினால் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான கால்பந்து கோல் கம்பம் வழங்கப்பட்டது. கடந்த 15ஆம் திகதி வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற விசேட நிகழ்வில் யாழ். மாவட்ட இளைஞர் சேவை மன்ற இணைப்பாளர் வினோதினி ஸ்ரீமேனனினால் இக்கோல் கம்பம் வழங்கப்பட்டது. இதன்போது காட்சி கால்பந்துப் போட்டி ஒன்று நடைபெற்றது. இதில் ஐயனார் 'ஏ' 'பி' அணிகள் மோதின. இந்நிகழ்வில் வேலணைப் பிரதேச இளைஞர் சேவை மன்ற அதிகாரி அ. குணேஸ், விளையாட்டுக்கழகத் தலைவர் மற்றும் நிர்வாகத்தினர் உட்பட பலர் கலந்துகொண்டனர். (21)

# ஆட்டின் தோலில் மறையும் ஓநாய்கள்!

இலங்கையில் எல்.ரீ.ரீ.ஈ ஒரு மரண அடியினை பெற்றாலும்கூட, அதன் வெளிநாட்டு கட்டமைப்பு அதனால் பாதிப்படையவில்லை. அதன் கிளைகள் முன்னணி அலுவலகங்கள், வியாபாரங்கள் ஊடக அமைப்புகள் வழமைபோலவே இயங்கி வருகின்றன. தமிழ் புலம்பெயர் சமூகங்களிடையே உள்ள புலிகள் மற்றும் புலிகள் சார்பான பிரிவுகளிடையே அற்ப சச்சரவுகள் இருந்தாலும்கூட, அது தொடர்ந்து தனது தமிழீழ விடயத்தைப் பற்றிக்கொண்டு, எங்கெல்லாம் சாத்தியமோ அங்கெல்லாம் புலிக்கொடியை பறக்க விடுகிறது. ஒரு மோசடி நடவடிக்கையாக புலிக்கொடி எல்.ரீ.ரீ.ஈ யினுடையது அல்ல, அது தமிழீழத்தினுடையது என்கிற கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. வெளிநாட்டிலுள்ள பிரதான ஊடகங்கள் மற்றும் புதிய தலைமுறையை சேர்ந்த தமிழ் பேசத்தெரியாத தமிழ் பையன்கள், ஆகியோரின் ஒரு பகுதியினரிடத்து உறுமும் புலி சின்னத்தை கொண்ட கொடி தமிழ் தேசியக்கொடி என்கிற தவறான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டிலுள்ள எல்.ரீ.ரீ.ஈ மற்றும் எல்.ரீ.ரீ.ஈ சார்ந்த சக்திகள், 2009இல் எல்.ரீ.ரீ.ஈ அடைந்த இராணுவத் தோல்விக்குப் பின்பு குறிப்பிடத்தக்க அளவு அதிகாரம் மற்றும் செல்வாக்கு என்பனவற்றை இழந்து விட்டன. உள்ளக அபிப்ராயபேதங்கள் மற்றும் உட்கட்சிப் பூசல்கள் என்பன அந்த இயக்கத்தை பெரிதும் பாழ்படுத்திவிட்டன. இதற்கு குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய உதாரணம், ஒரு காலத்தில் புலிகளின் தலைமை ஊடகமான தமிழ்நெட்டினால் வெறுப்பாக காட்சிப் படுத்திப் பேசப்பட்ட, நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் மற்றும் அதன் சுய - பாணி பிரதமரான விசுவநாதன் உருத்திரகுமாரன் ஆகியோர்.

பெரும் எண்ணிக்கையிலான புலிகள் சார்பு ஊடக அமைப்புகள் இயங்குவதை நிறுத்திவிட்டன. நிதி திரட்டல் முற்றாக வற்றிப் போகாவிட்டாலும்கூட நிச்சயமாக குறைந்து விட்டன. எல்.ரீ.ரீ.ஈ இற்கு சொந்தமான சொத்துக்கள் மற்றும் நிறுவனங்களை வைத்திருந்த அல்லது நிர்வகித்து வந்த பினாமிகள் அவற்றை சொந்தமாக்க ஆரம்பித்து விட்டார்கள் அல்லது அவற்றை விற்றுவிட்டு பணத்துடன் ஓடிவிட்டார்கள்.

பல படித்த மற்றும் உயர் கல்வி மற்றும் தொழில் திறமைமிக்க புலி ஆதரவாளர்கள், இரவோடு இரவாக உருமாற்றம் பெற்றிருப்பது மிகவும் வேடிக்கையானது கூட. எல்.ரீ.ரீ.ஈ யின் ஒவ்வொரு செயற்பாட்டையும், மாற்றுக் கருத்துடையவர்களை கொலை செய்ததை கூட, நியாயப்படுத்திய இந்த நபர்கள், இப்போது மனித உரிமையின் காவலர்களாக மாறியுள்ளார்கள். அவர்கள் வெட்கமின்றி கௌரவமான மனித உரிமை அமைப்புகளான, மனித உரிமை கண்காணிப்பகம் மற்றும் சர்வதேச மன்னிப்புச்சபை என்பனவற்றுடன் இணைந்துள்ளார்கள்.

இலங்கையில் எல்.ரீ.ரீ.ஈ வீழ்ச்சியடைந்த பின்னர் வெளிநாடுகளில் எழுந்துள்ள மற்றொரு பூனைப் படையினர் “வலைத்தள வீரர்கள்” ஆவார்கள். பரந்த அளவில் இணையத்தள மற்றும் மின்னஞ்சல் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த வலைத்தளங்கள் பெரும்பாலும் இலங்கையில் உள்ள நிலைமைகளுக்கு மாறாக, பொய்யையும் புரட்டுகளையும் வெளியிடுகின்றன. மின்னஞ்சல் வீரர்கள் ராஜபக்ஸவின் ஆட்சியின் வீழ்ச்சியையும் மற்றும் எல்.ரீ.ரீ.ஈ யின் உயிர்த்தெழுதலையும் எதிர்பார்த்து கொட்டாவி விட்டபடி தங்களுக்குள் தீக்கக்கும் கடிதங்களை பரிமாறிக் கொள்கிறார்கள்.

ராஜபக்ஸ ஆட்சியுடன், மற்றும் சர்வதேச சமூகத்தில் உள்ள செல்வாக்கான நாடுகளின் அங்கத்தவர்கள் மோதல் போக்கை ஏற்படுத்துவது, இந்த புலிச் சக்திகளுக்கு வெளியேற்ற காலத்தில் கடவுள் இஸ்ரேலியர்களுக்கு வழங்கிய உணவினை போன்றது. மேற்கத்தைய ஊடகங்களின் ஒரு பிரிவினர்கள் மற்றும் மதிப்பான மனித உரிமை அமைப்புகள் தமிழ் பொதுமக்களின் நிலையில் கரிசனை காட்டுவதும் இவர்களுக்கு உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. கிடைக்கும் சந்தர்ப்பம் எதையும் அவர்கள் பற்றிக்கொண்டு விடுவார்கள்.

புலம்பெயர்ந்த சமூக சக்திகள் போரின் கடைசி நாட்களில் செய்த தவறுக்குப் பதிலாக இப்போது எல்.ரீ.ரீ.ஈ யின் பொறிகளை தவிர்த்து, இலங்கையில், நீதியான செயற்பாடு, பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமை போன்றவற்றில் அக்கறை உள்ளவர்களைப்போல புதிய தோற்றத்தை எடுத்துள்ளன. சர்வதேச உறவுகளை தவறாக கையாளும் கொழும்பின் போக்கு, புலம்பெயர்ந்த புலி மூலகங்களுக்கு, ஒரு புதிய அவதாரத்தில் புதிய வாழ்வுக்கான குத்தகையை வழங்கியுள்ளது.




நாளாந்த வழக்கிலுள்ள தமிழ் நாட்டுப்புற சொல் வழக்குகளில் புலிகளுக்கு உவமையாக சொல்லக்கூடிய பல சொற்பதங்கள் உள்ளன. அப்படியான ஒரு சொல்வழக்கு “பசுத்தோல் போர்த்திய புலி” என்பதாகும். உருவகத்தில் கடுமையான ஆபத்துக்களை கொண்ட ஒன்று தன்னை அப்பாவியாக சித்தரிப்பதை இப்பதம் விளக்குகிறது. ஆங்கிலத்தில் இதனை ஒத்த பழமொழியாக ஆட்டின் தோலில் மறைந்துள்ள ஓநாய் என்கிற பழமொழி உள்ளது.

மிகவும் சுவாரஸ்யமான நிகழ்ச்சியாக உலகளாவிய தமிழ் புலம்பெயர் சமூகம் எனும் புலால் உண்ணும் புலி, தன்னை தாவர உண்ணியான பசுவைப் போல சித்தரிக்க முயலுகிறது. இது எல்.ரீ.ரீ.ஈ யின் வெளிநாட்டு செயற்பாட்டாளர்கள், நீதியையும் பொறுப்புக் கூறலையும் தேடும் மனித உரிமை காவலர்களாக உருமாறியிருப்பதை எடுத்துக்காட்டும் வெளிப்படையான சரித்திரம்.

**- டி.பி.எஸ்.ஜெயராஜ் கட்டுரையிலிருந்து.**

# ஐ.நா. சபைக் கட்டடத்தை வடிவமைத்த ஒஸ்கார் நிமெயர் 104ஆவது வயதில் காலமானார்!





உலக நவீன கட்டடக் கலையின் தந்தை என வர்ணிக்கப்படும் பிரேசில் நாட்டைச் சேர்ந்த ஒஸ்கார் நிமெயெர் (Oscar Niemeyer), தனது 104ஆவது வயதில் 2012 டிசம்பர் 5ஆம் திகதி பிரேசில் தலைநகர் றியோ டி ஜெனெரோ (Rio de janeiro) வைத்தியசாலையில் காலமானார்.

ஒஸ்கார், நவீன பிரேசிலின் தோற்றத்தை உருவாக்குவதில் மிக முக்கிய பங்கு வகித்தவர். அந்த நாட்டின் புகழ்பெற்ற விளையாட்டரங்கு, மியூசியம் மற்றும் பல்வேறு அரசாங்க - தனியார் கட்டடங்கள் அவரது கைவண்ணத்தால் உருவானவை.


அவர் மரணித்தாலும், பிரேசில் என்ற நாடு இந்த உலகில் இருக்கும் வரை, அந்த மண் இவரது நாமத்தைத் தனது உடலில் வரைந்தபடியே இருக்கும்.


அவரது கைவண்ணத்தால் உருவான உலகப் புகழ்பெற்ற கட்டடங்களாக தற்போதைய ஐ.நா மன்றக் கட்டடம், பாரீஸ் நகரிலுள்ள பிரான்ஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைக் காரியாலயம், பிரேசிலின் ரோமன் கத்தோலிக்கத் தேவாலயம் என்பன திகழ்கின்றன.

பிரேசில் தேவாலயத்தை வடிவமைத்ததிற்காக 1988இல் அவருக்கு “பிறிற்ஸ்கெர்” (Pritzker) கட்டடக்கலைப் பரிசு வழங்கப்பட்டது. இந்தப் பரிசு கட்டடக்கலைக்கு வழங்கப்படும் நோபல் பரிசுக்குச் சமமானது என்பது குறிப்பிடத்தக்கது.

1930களில் தனது கட்டடக்கலை வாழ்வை ஆரம்பித்த ஒஸ்கார் அவர்களின் வாழ்வை, 9 தசாப்த காலப் பணியின் பின்னர், மரணம் என்ற இயற்கையின் விதி முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது.

# பெயர்கள் வந்தவிதம்!





லெமன்: எலுமிச்சம் பழத்தை ஆங்கிலத்தில் “லெமன்” என அழைக்கிறோம். இந்தப் பழம் அரேபியர்களால் ”லெமியம்” எனப்பட்டது. இதுவே ஆங்கிலத்தில் “லெமன்” என்றாகியது.

பைன் ஆப்பிள்: கூரிய இலைகளையும் கூம்பிய வடிவக் கனிகளையும் கொண்ட தாவர வகையை ஆங்கிலத்தில் “பைன்” என்று அழைத்தனர். இதன் அடிப்படையில்தான் “பைன் ஆப்பிள்” என்ற பெயர் உருவானது.

டுபாக்கோ: இந்த இலையைச் சுருட்டி வாயில் வைத்துப் புகைத்தால் வரும் புகையை இழுப்பது சுவாரஸ்யமாக இருக்கும் என்பதை செவ்விந்தியர்கள் முதன்முறையாகக் கண்டனர். இலைகளை அவ்வாறு சுருட்டுவதை அவர்கள் தங்கள் மொழியில் ”டோபாகுகா“ என்றனர். அதுவே காலப்போக்கில் மருவி டுபாக்கோ என ஆயிற்று.


டீடீ: அமெரிக்காவில் உருளைக் கிழங்கிற்கு டீடீ என்று பெயர் உண்டு. உருளைக் கிழங்கை உணவாகப் பயன்படுத்தலாம் என்று கண்டுபிடித்துச் சொன்ன அமெரிக்கரின் பெயர் டீடீ. இதன் காரணமாக அந்த உருளைக் கிழங்கிற்கு டீடீ என்ற பெயரும் இருந்துவருகிறது.

5-(3)

# பத்தாண்டுகளின் பத்து இயக்குனர்கள்


**சார்லஸ்**

## சான் - வூக் பார்க்



**செ**ன்ற ஆண்டு "சான்-வூக் பார்க்" இயக்கிய "தாகம்" என்ற படம் தான் அவர் எடுத்ததிலேயே அதிக வன்முறையும் குரூரமும் நிறைந்த படம். மனிதனுக்கும் பாவத்துக்குமான இணைப்பை ஒரு கற்பனையான கதையின் வழி சொல்லிச்செல்கிறார் இயக்குனர். ஒருமுறை பாவக் குழிக்குள் தவறிவிழுந்தாலும் அது மேலும் மேலும் உள்ளிழுத்து நரகத்துக்குள் அமிழ்த்திவிடும் என்ற செய்தியே கதையின் மையம். இந்தப் படத்தில், அப்படி பாவத்தில் விழுபவன் லௌகீக வாழ்க்கையில் ஈடுபடும் சராசரி மனிதனும் அல்ல, ஒரு கிறிஸ்தவப் பாதிரியார், அவர் சாதாரண பாவமும் செய்யவில்லை மற்ற மனிதர்களிடமிருந்து இரத்தத்தைக் குடிக்கும் வம்பயராக மாறுகிறார். இப்படி எல்லாவற்றையும் அதீதமானதாக ஆக்கி, சான் வூக் பார்க் தன்னுடைய விருப்ப தளத்தில் உச்சபட்சத்தைத் தொட முனைந்திருக்கிறார். நாயகனை மேலும் பாவத்துக்குள் இழுப்பது ஒரு பெண் என்பது உட்பட, கதையின் பல அம்சங்கள் பைபிளின் "ஆதாம் - ஏவாள் - ஆதி-பாவம்" போன்றவற்றோடு மிகுந்த தொடர்புடையதாக இருக்கிறது.


ஒரு மருத்துவமனையில் சேவையில் ஈடுபட்டிருக்கும் பாதிரியார், ஒரு குறிப்பிட்ட நோய்க்கு மருந்து கண்டுபிடிப்பதற்கான ஆபத்தான பரிசோதனைக்குத் தன்னை ஒப்படைக்கிறார். அதில் உயிர் போவதற்கான வாய்ப்பே அதிகம் என்று தெரிந்தும் தியாக உள்ளத்தோடு அதில் ஈடுபடுகிறார். ஆபத்தான ஒரு கட்டத்தில் அவருக்கு அவசரத்தில் மாற்று இரத்தம் ஏற்றப்படுகிறது. சிகிச்சை பலனளிக்காமல் அவர் செத்துப்போகிறார். ஆனால் சில நிமிடங்கள் கழித்து




உயிர்த்தெழுகிறார். அந்த அதிசய சம்பவம் அவரைப் பிரபலமானவராக ஆக்குகிறது. மக்கள் அவரை ஒரு புனிதராகப் பார்க்கிறார்கள், அவருடைய தரிசனத்தையும் ஆசியையும் பெறவிரும்புகிறார்கள்.

ஆனால் பாதிரியார் ஒரு விநோத நோயால் பாதிக்கப்பட்டிருப்பது அவருக்கு மட்டுமே தெரியும். பகலில் சூரிய வெளிச்சம் பட்டால் அவருடைய உடல்முழுவதும் கொப்பளங்கள் உண்டாகும், தீயில் கருகுவது போல தோல் பொசுங்க ஆரம்பித்துவிடும். தினமும் இரவில் அவர், கோமா நிலையில் இருக்கும் தனக்குத் தெரிந்த ஆளின் இரத்தத்தை டியூப் மூலம் உறிஞ்சிக் குடிக்கிறார். புது இரத்தம் பாய்ந்ததும் அவருக்கு அளவில்லாத பலமும், வேகமும், மிக உயரத்துக்கு எம்பித் தாவவும், மேலிருந்து குதிக்கவும் கூடிய ஆற்றல்களும் உண்டாகின்றன.

நோயாளியான தன் பள்ளி நண்பனை ஆசிர்வதிப்பதற்காகவும் பிரார்த்திப்பதற்காகவும் அவர்கள் வீட்டுக்குச் செல்லும் பாதிரியார், அங்கு ஒரு வேலைக்காரி போல நடத்தப்படும் நண்பனின் மனைவி மீது இரக்கம் கொள்கிறார். அந்தப் பெண்ணுக்கும் அவருக்கும் இடையில் காமம் துளித் துளியாய் ஆரம்பித்துப் பிறகு பெருவெள்ளமாகி அவர்களை அடித்துச் செல்கிறது. அவர் அவளுக்காகத் தன் நண்பனையே கொல்கிறார். ஒரு கட்டத்தில் அவளும் வம்பயராக மாறுகிறாள். அப்போது உண்டாகும் ஆற்றல் கொடுக்கும் போதையில் அவள் ஏராளமான கொலைகளைச் செய்கிறாள், அவரையும் தூண்டுகிறாள்.



ஏரியில் மூழ்கி இறந்த கணவன் ஈரத்தோடு நீர்சொட்ட வீட்டுக்குள் உலாவருவது, பல திகில் படங்களில் இடம்பெற்றதுதான் என்றாலும், இதில் நாயகன் நாயகியின் குற்ற உணர்வின் உருவெளித் தோற்றமாகவே சித்தரிக்கப் பட்டிருக்கிறது. எஜமானியாக வலம்வந்த மாமியார் இறுதியில் வாதநோயில் விழுந்து, கண்ணிமைகள் தவிர வேறு எதையும் அசைக்க முடியாதவளாகி, தன் மருமகளும் பாதிரியாரும் இரத்தக் காட்டேரிகளாகிவிட்டதை மௌன சாட்சியாகப் பார்த்துக்கொண்டிருப்பதும், தன் மகனைக் கொன்ற அவர்களை மற்றவர்களுக்கு வெளிப்படுத்த பிரயத்தனப் படுவதும் நன்றாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

தேவாலய மடத்தில் தங்கியிருக்கும் கண்தெரியாத மூத்த பாதிரியார் ஒருவர், படத்தின் ஆரம்பத்தில் தன் இரத்தத்தை நாயகனுக்குப் பசியாறுவதற்காகக் கொடுக்கிறார். இறுதியில் அவனுடைய இரத்தத்தை தனக்குள் செலுத்தி தன்னையும் வம்பயராக மாற்றும்படி அவர் கெஞ்சுகிறார், அதன் மூலம் தானும் சிறப்பு ஆற்றல்கள் பெற்று, இந்த உலகைக் கண்கொண்டு பார்த்துவிட முடியுமென்று ஆசைப்படுகிறார். இதுபோன்ற நிறைய காட்சிகள், மனிதன் உலகைத் துய்ப்பதற்காக எந்த எல்லைக்கும் செல்வான் என்று காட்டுகின்றன.

அதீதமான வன்முறையும் வக்கிரமும் கலந்து, இரத்தத்தில் தோய்த்து எழுதப்பட்டது போன்ற இந்தத் திரைக்கதையை, திட்டமிட்டே கொஞ்சம் அருவருப்பை உண்டாக்கும் வகையில் இயக்கியிருக்கிறார் சான்-வூக் பார்க். அதைச் சகித்துக்கொண்டு தாண்டிவந்தால், இறுதியில் ஒரு அற்புதமான உச்சக் காட்சி இருக்கிறது. இயக்குனர் தான் ஒரு மாஸ்டர் என்பதை அங்கு நிரூபித்திருக்கிறார்.

"old boy" அளவுக்கு ஒரு கச்சிதமான அமைப்பு இந்தப் படத்தில் கைகூடவில்லை. படம் எங்கெங்கோ வளைந்து நெளிந்து தாவிச் செல்கிறது. என்றாலும் இதுவும் சான்-வூக் பார்க் - இன் முக்கியமான ஒரு படமே.

(பட்டியல் தொடரும்)

# பிரசாதம்!

"**ச**னிப்பிரதோஷம் சிவன் கோயிலுக்குப் போகவேண்டும்" என்று மனைவி வற்புறுத்தினாள். போனேன். கூட்டமான கூட்டம். ஆனாலும் என்ன... எல்லாம் ஏனோதானோதான்! அமெரிக்காவில் 5 மாசம் தங்கிவிட்டு வந்ததைப் பீற்றிக்கொள்ளும் பெண்மணி, அரசியல் வம்பு பேசும் கூட்டம், அடுத்த பஸ்ஸைப் பிடித்துவிடவேண்டும் என்பதுபோல கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே ஓட்டமும் நடையுமாய்ப் பிரகாரத்தை ஜெட் வேகத்தில் சுற்றும் பக்த கோடிகள், கையைக் கூப்பி வணங்காமலும் கன்னத்தில் போட்டுக் கொள்ளாமலும் தன் முகவாய்க்கட்டையை நான்கு விரல்களில் பாவனையாய்த் தொட்டுத் தடவிக் கொள்ளும் சுடிதார்ப் பெண்மணிகள், கருவறையில் இருந்து கொண்டே வந்திருப்பவர்களிடம் குசலம் விசாரிக்கும் குருக்கள், ஆஹா... இவற்றையெல்லாம், பார்க்கப் பார்க்க வேதனையாகத்தான் இருக்கிறது. பக்தர்கள் பால் பாக்கெற்கள், பூப்பொட்டலங்கள், பன்னீர்ப் போத்தல்கள், தேன் போத்தல்கள், இன்னும் இளநீர் தேங்காய்கள் என்று குவித்து இருந்தார்கள்.



தேன் போத்தல்களையும் பன்னீர் போத்தல்களையும் திறக்க குருக்களும் அவரது உதவியாளரும் படாதபாடு பட்டார்கள். மூடிகள் முழுவதும் திறக்காமல் சுற்றிக் கொண்டே இருக்க, அழுத்தித் திறக்க முயற்சித்து விரல்களில் கீறி, ரத்தம் கசிந்து சாமிக்கு தேன், பன்னீர் அபிஷேகத்தோடு இரத்தமும் சேர்ந்து அபிஷேகம்... பகவானே... ஒரு கையில் இளநீரையும் மறுகையில் அரிவாளையும் வைத்துக் கொண்டு அவற்றைப் பொத்து ஓட்டைபோட அவர்கள்பட்ட அவஸ்த்தை பார்க்கப் பரிதாபமாக இருந்தது. தேன், பன்னீர் போத்தல்களைக் கொடுப்பவர்கள் அவற்றின் மூடியையும் திறந்து கொடுத்தால் எவ்வளவு வசதியாக இருக்கும்.

அர்ச்சனைப் பூ, பழம் வாங்கி வருபவர்கள் கடைக்காரர் கொடுக்கும் பையில் என்ன இருக்கிறது என்று பார்க்காமலேயே குருக்களிடம் நீட்டிவிடுவார்கள். பூப் பொட்டலங்கள் கூட அர்ச்சகர்தான் பிரிக்க வேண்டும்! சில-சமயம் அர்ச்சகர்களும் பையில் என்ன இருக்கிறது என்று பாராமல் அப்படியே தேங்காயைக் கூட உடைக்காமல் திருப்பிக் கொடுத்துவிடுவார்கள்! எல்லாம் ஒரேகதைதான்! ஒரு சமயம் கடைக்காரர் கொடுத்த பையில் தவறுதலாக ஒரு பீடிக்கட்டு தங்கி அதுவும் இறைவனிடம் போய் பிரசாதமாகப் பக்தருக்குத் திரும்பிவிட்டது!

('சிந்தனைச் சிமிழ்' நூலில் கே. குருமூர்த்தி)

# ஏமாந்தே தீருவோம்...



**ஓர் ஆசிரியர் பள்ளியில் மாணவர்களுக்குச் சூரிய கிரகணம் என்பது சந்திரனின் நிழல் பூமியின் மேல் விழுவதாலும் சந்திர கிரகணம் என்பது பூமியின் நிழல் சந்திரன் மேல் விழுவதாலும் ஏற்படுகிறது என விளக்கிவிட்டு வீடு திரும்பியதும் சூரியனையும் சந்திரனையும் ராகு, கேது என்ற பாம்புகள் விழுங்கியதால் ஏற்பட்ட தோஷங்களை நிவர்த்தி செய்ய மந்திரங்களை ஓதித் தர்ப்பணம் செய்து தலை முழுகுகிறார்.**

ரசவாதம் என்பதில் இப்போதும் மக்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. எனக்குத் தெரிந்த ஒருவர் கையில் எப்போதும் "ரசமணி" என்று வெள்ளி நிறத்தில் ஓர் உருண்டையை வைத்திருப்பார். பாதரசத்தைப் புடம் போட்டு ரசமணியாக்கி ஒரு பொற்கொல்லர் தந்ததாகவும் அதைக் கழுத்தில் அணிந்துகொண்டால் தோஷங்களும், நோய்களும் பீடிக்காது என்றும் அவர் சொல்வார்.

அது மட்டுமல்ல. அவர் பாதரசத்தை மூலிகைச் சாற்றில் கலந்து புடம் போட்டுத் தங்கமாகவே மாற்றியதை என் இரண்டு கண்ணாலும் பார்த்திருக்கிறேன்! என்றும் சொன்னார்.

நீ நம்பவில்லையா? அறிவியல்படி அது சாத்தியம்தான். பாதரசத்தின் அணுஎண் 80. தங்கத்தின் அணு எண் 79. பாதரச அணுவிலிருந்து ஒரு புரோட்டனை எடுத்துவிட்டு ஓரிரு நியூட்ரோன்களைச் சேர்த்துவிட்டால் அது தங்க அணுவாக மாறிவிடும் என்றும் விளக்கினார்.

அதுபோல அணுக்களிலிருந்து புரோட்டனைப் பெயர்த்தெடுக்கப் பல கோடி ரூபா செலவில் துகள் முடுக்கிகளை அமைக்க வேண்டும் என்று சொல்லி அவருக்குக் கோபமூட்ட விரும்பாமல் "அந்தப் பொற்கொல்லர் பில் கேட்ஸ் அளவுக்குப் பெரும் பணக்காரராகியிருப்பாரே!" என்றேன்.

அதுதான் முடியாது! தனக்கும் தன் குடும்பத்துக்கும் ஒருநாள் செலவுக்குத் தேவைப்படுகிற அளவுக்கே அவர தங்கம் உற்பத்தி செய்யலாம், அதற்கு மேல் பேராசைப்பட்டால் அவருக்கு 'ரசவாத வித்தை' மறந்து போகும்! என்று சொல்லி அவர் முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்.

ஏழே நாட்களில் சிவப்பழகு, முடியற்ற தலையில் ஒரே மாதத்தில் அடர்த்தியான கூந்தல், கொத்துக் கொத்தாக வந்து இளம்பெண்களை மொய்த்துக் கொள்ள வைக்கும் சென்ட் என்றெல்லாம் விளம்பரம் செய்கிறவர்களுக்கும் இந்த ரசவாதப் பொற்கொல்லருக்கும் வித்தியாசமே கிடையாது.

இத்தகைய ஏமாற்றுக் கருத்துகளை மறுதலிக்க விஞ்ஞானிகளும் மருத்துவர்களும் பெரும்பாலும் முன்வருவதில்லை. மக்களுக்குப்பட்டால்தான் புத்தி வரும் என்று அவர்கள் சும்மாயிருக்கிறார்களோ என்னவோ!

மதத்திலும் போலி அறிவியல் புகுந்து விளையாடுகிறது. புராணங்களிலும் மத நூல்களிலும் சொல்லப்பட்டிருக்கிற அதிசய சம்பவங்கள் உண்மையிலேயே நடைபெற்றன என வாதிக்கிற பலநூல்கள் சில பிரபலமான வெளியீட்டாளர்களால் வெளியிடப்பட்டு அமோகமாக விற்றுள்ளன. தேவர்களும், அசுரர்களும் வேறு கோளகளிலிருந்து பூமிக்கு வந்து அற்புதங்களை நிகழ்த்திக் காட்டிவிட்டுத் திரும்பிப் போனதாக அந்த நூல்கள் நிரூபிக்க முயல்கின்றன. பிரமிட்களிலும், மயன் கோயில்களிலும் விண்வெளிக் கலங்கள், வேற்றுக்கோள் மனிதர்கள் ஆகிய வடிவங்கள் பொறிக்கப்பட்டிருப்பதாக அவை சான்று காட்டுகின்றன.

*1951*-ஆம் ஆண்டில் ரான் ஹப்பர்ட் என்பவர் தாயின் கர்ப்பத்தில் தோன்றிய நாளிலிருந்தே மனிதக் கரு தன் தாயின் குரலை அடையாளம் கண்டு நினைவில் வைத்துக்கொள்ளும் என்று ஒரு கருத்தை வெளியிட்டார். அதை நம்பி ஏராளமானவர்கள் தாம் தாயின் கருப்பைக்குள்ளிருந்தபோது பெற்ற அனுபவங்களை மீண்டும் நினைவுக்குக் கொண்டு வர உதவும் ஆழ்மனச் சிந்தனைப் பயிற்சிகளைக் கற்றுத்தர அவர் நடத்திய வகுப்புகளில் நிறையக் கட்டணம் செலுத்திச் சேர்ந்தனர்.

பல பத்திரிகைகள் இத்தகைய கருத்துகளை முன்வைக்கும் கட்டுரைகளை வெளியிட்டுத் தமது விற்பனையைக் கூட்டிக்கொள்ள முனைவதுண்டு. எல்லா நாடுகளிலும் இத்தகைய இதழ்கள் உண்டு. பல ஆண்டுகளுக்கு முன்னால் உலகெங்கும், பறக்கும் தட்டுகளைப் பற்றிச் செய்திகள் பரவியபோது தமிழ்நாட்டிலும் சில கிராமங்களில் பறக்கும் தட்டுகள் வந்திறங்கியதாகச் சில தமிழ்ப் பத்திரிகைகள் கொட்டை எழுத்துகளில் செய்திகளைத் தந்தன.

இல்லற சுகத்தைப் பற்றிய "அறிவியல்" கட்டுரைகளை விவரமாக வெளியிடும் "மஞ்சள்" பத்திரிகைகளும் உண்டு. அவற்றைப் படித்துவிட்டுப் பாமர மக்கள் தவறான சிகிச்சைகளை மேற்கொண்டு, "இருப்பதையும் இழந்த" சம்பவங்களும் நிறைய உண்டு. மருத்துவர்களும் உளவியலாளரும் எளிதாகத் தீர்க்கக்கூடிய சிறு பிரச்சினைகளை இத்தகைய கட்டுரைகள் ஊதிப் பெரிதாக்கி மக்களைக் குழப்பி அவர்களை மன உளைச்சலுக்கு ஆளாக்கும்.

விஞ்ஞானிகள் பல விதம். சிலர் மகாமேதைகள். சிலர் மகா மூடர்கள், சிலர் இரண்டுக்கும் நடுவிலிருப்பவர்கள். ஏதாவது ஒரு துறையில் பாண்டித்தியம் பெற்றுப் புகழும் பெற்றுவிட்டால் மற்ற எல்லா விஷயங்களுமே தமக்கு அத்துபடி என்ற மனப் பிரமை பிடித்தவர்களும் உண்டு.

அரிஸ்டோட்டில் நல்ல உயிரியல் அறிஞர். திமிங்கிலம் ஒரு பாலூட்டி விலங்கு என்பதை அவர்தான் கண்டுபிடித்தார். ஆனால், அவர் எழுதிவைத்து விட்டுப்போன பல அபத்தமான வானியல் கருத்துகள் காரணமாகக் கலிலியோ, புருனோ, கோப்பர் நிக்கஸ் ஆகியோர் துன்பம் அனுபவித்தார்கள். டார்வினின் கருத்துகளைத் தீவிரமாக எதிர்த்த பூசாரிகளில் பல சிறந்த அறிஞர்களும் இருந்தார்கள்.

இத்தகைய அறிஞர்களில் பலர் சுவையாக எழுதவும் பேசவும் வல்லவர்கள். மேலோட்டமாகப் பார்க்கிறபோது அவர்கள் வெளியிடும் அறிவியல் கருத்துகள் சரியானவையாகக் கூடத் தெரியும். அவற்றை ஆழ்ந்து பரிசீலித்தால்தான் நன்கு நிரூபிக்கப்பட்ட அறிவியல் உண்மைகள் சாதுரியமாகத் திரிக்கப்பட்டு அல்லது விஸ்தரிக்கப்பட்டு எழுதப்பட்ட விஷயம் விளங்கும். அந்த அறிஞர் உண்மையிலேயே அறிவியலும் பயின்றவராயிருந்து விட்டால் அவருடைய கூற்றுகளில் குற்றம் கண்டுபிடிப்பது மிகவும் கஷ்டம்.

இன்று காலம் மாறிவிட்டது. மதங்களின் பிடிப்பு தளர்ந்து வருகிறது. மதவாதிகளும் பழமைவாதிகளும் மிகவும் அடக்கி வாசிக்கிறார்கள். உலகம் முழுவதிலுமுள்ள விஞ்ஞானிகள் ஒருவரோடொருவர் கணப்பொழுதில் தொடர்புகொண்டு கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்ள முடிகிறது. புரளிகளும் பொய்களும் உடனுக்குடன் தோலுரிக்கப்பட்டு விடுகின்றன. இருந்தாலும் அதையும் மீறி ஏமாறும் பாமர மக்கள் இருக்கவே செய்கிறார்கள். சூனியத்திலிருந்து தங்கச் சங்கிலிகளை வரவழைத்து ஒரு சாமியார் கொடுத்தால் அதைக் கை நீட்டிச் சந்தோஷமாக வாங்கிக் கொள்கிறவர்கள் இருக்கிறார்கள்.

மூலிகைகளிலிருந்து பெற்றோல் உற்பத்தி செய்ய முடியும் என்று ஒருவர் சொன்னால் அதற்கான தொழிற்சாலைகளை நிறுவக் கோடிக்கணக்கில் பணம் செலவழிக்க முன் வருகிறவர்களும் உண்டு. இன்றளவும் தொலைக்காட்சிகளில் தனவசீகர தாயத்து, கவசம் என்றெல்லாம் விளம்பரம் செய்து அவற்றை வீட்டில் வைத்துப் பூசித்தால் பணம் வந்து கொட்டும் என்று வாக்குறுதி அளிப்பதை நம்பி எவ்வளவோ பேர் பணம் அனுப்பி ஏமாறுகிறார்கள்.


பல போலி விஞ்ஞானிகள் மதம் சார்ந்த நம்பிக்கைகளுக்கு அறிவியல் அடிப்படைகளை முனைந்து கண்டுபிடிப்பார்கள். அது முடியாதபோது கற்பனை செய்து அறிவியல் ஆதாரத்தை உருவாக்குவதும் உண்டு.

பல்லாண்டு காலமாக ஆன்மிகப் பாரம்பரியத்தில் ஊறிப் போனதன் காரணமாகப் பலர் அறிவியல் படித்திருந்தாலும் மதச்சடங்குகளைப் புறக்கணிக்கத் துணிவதில்லை.

ஓர் ஆசிரியர் பள்ளியில் மாணவர்களுக்குச் சூரியகிரகணம் என்பது சந்திரனின் நிழல் பூமியின் மேல் விழுவதாலும் சந்திர கிரகணம் என்பது பூமியின் நிழல் சந்திரன் மேல் விழுவதாலும் ஏற்படுகிறது என விளக்கிவிட்டு வீடு திரும்பியதும் சூரியனையும் சந்திரனையும் ராகு, கேது என்ற பாம்புகள் விழுங்கியதால் ஏற்பட்ட தோஷங்களை நிவர்த்தி செய்ய மந்திரங்களை ஓதித் தர்ப்பணம் செய்து தலை முழுகுகிறார். உண்மையான தெய்வ பக்தி நல்லதுதான். அது சடங்குகளில் புதையுண்டு போகும்போது உண்மையான தத்துவங்களும் புதைக்கப்பட்டு விடுகின்றன.

சூரியனின் கரும்புள்ளிகள் தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகளைக் குலைக்க முடிகிறது உண்மையென்றால் செவ்வாயும் வியாழனும் உங்களுக்குத் திருமணம் நடைபெறாமல் தடுக்கின்றன என்று சொல்வதில் என்ன தவறு என்று ஒரு பிரபல சோதிடர் என்னிடம் வாதிட்டார்.

அண்மையில்கூட ஒருவர் வானிலை முன்னறிவிப்புக்குக் கோள்களின் நிலைகள் உதவும் என்று கூறி மழை முன்னறிவிப்புச் செய்ய ஆரம்பித்திருக்கிறார். அத்துடன் நில்லாமல் பூகம்பம், வெள்ளம் போன்ற உற்பாதங்கள் தோன்றப் போவதையும் கோள்களின் சஞ்சாரத்தின் மூலம் முன்னறிவிப்புச் செய்ய முடியும் என்றும் அவர் சொல்கிறார். அவர் சொன்னதையெல்லாம் பட்டியலிட்டு வைத்துக்கொண்டு அவர் சொன்னபடியெல்லாம் நடந்ததா என்று சரிபார்க்க யாரும் முனையவில்லை. அதுவே அவருடைய துணிச்சலான கூற்றுகளுக்கு ஊக்கமளித்திருக்கலாம்.



"ஏழே நாள்தான் முயற்சி பண்ணித்தான் பாப்பமே..."

**'ஏழே நாள்களில் சிவப்பழகு, முடியற்ற தலையில் ஒரே மாதத்தில் அடர்த்தியான கூந்தல், கொத்துக் கொத்தாக வந்து இளம் பெண்களை மொய்த்துக் கொள்ள வைக்கும் 'சென்ட்' என்றெல்லாம் விளம்பரம் செய்கிறவர்களின் ஏமாற்றுக் கருத்துகளை மறுதலிக்க விஞ்ஞானிகளும் மருத்துவர்களும் பெரும்பாலும் முன்வருவதில்லை. மக்களுக்குப்பட்டால்தான் புத்தி வரும் என்று அவர்கள் சும்மாயிருக்கிறார்களோ என்னவோ!**


- கே.என். ராமசந்திரன்

# வீதி நடைமுறைகள் குறித்து மாணவர்களுக்கு விளக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு வீதி பாதுகாப்பு பொலிஸ் அதிகாரி சமிந்தசில்வாவினால் வீதி விபத்துக்களிலிருந்து பாதுகாக்கும் விதி முறைகள் சம்பந்தமான கருத்துரைகள் வழங் கப்பட்டன.

அண்மையில் யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரி யில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் கல்லூரி அதிபர் எஸ்.எஸ்.ஏ.எம்.முபாரக், யாழ்.நூலக உதவி நூலகர் கே.எம்.நிசாட், பொலிஸ் அதிகாரி



பிரதீபன், பிரதி அதிபர் ஆகியோர் கலந்துகொண் டனர்.

சமிந்த சில்வா உரையாற்றும் போது கடந்த வருடம் யாழ்ப்பாணத்தில் வீதி விபத்தில் 42 பேர் இறந்துள்ளார்கள். 89 பேர் காயமடைந்து அங்கவீனமுற்றவர்களாகவுள்ளார்கள். அனேக மான விபத்துக்கள் நாற்சந்தியில் உள்ள இடங் களில்தான் ஏற்பட்டுள்ளன. யாழில் அதிக இடங் கள் நாற்சந்தியாக உள்ளன.



மாணவர்கள் பாடசாலை விட்டு வீடு திரும்பும் போது வலது பக்கமாக ஒருவர் பின் ஒருவராகச் செல்லவேண்டும். கூட்டமாகச் செல்வதினால்தான் விபத்துக்கள் ஏற்படுகின்றன. மஞ்சள் கோட்டில் செல்லும் முன்னர் இருபக்கமும் அவதானித்து வாகனம் வராததை உறுதிப்படுத்திய பின்னர் தான் மறுபக்கத்திற்கு கடக்க வேண்டுமென்றார்.

யாழில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு வீதி பாதுகாப்பு விரிவுரைகள் பொலிஸாரினால் மேற்கொள்ளும் தீர்மானத்திற்கமைய முதலா வதாக யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியில் ஆரம் பிக்கப்பட்டுள்ளதாகத் அவர் தெரிவித்தார்.

பொலிஸ் அதிகாரியினால் வினாவப்பட்ட கேள்விகளுக்கு மாணவர்கள் திறமையான பதிலை கூறியதினால் மாணவர்களை அவர் பாராட்டினார். (105)

# மானிப்பாய் மகளிர் கல்லூரியின் பொன்விழா நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மானிப்பாய் மகளிர் கல்லூரியின் பொன்விழா நிகழ் வுகள் நாளை செவ்வாய்க் கிழமை, நாளை மறுதினம் புதன்கிழமை மற்றும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை ஆகிய தினங்களில் பிற்பகல் 3 மணி முதல் இரவு 8 மணி வரை பாடசாலை மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும் முதல்நாள் நிகழ் வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் ப.விக் னேஸ்வரன், யாழ்.தேசியக் கல் வியற் கல்லூரி பீடாதிபதி வி. யோகநாதன் ஆகியோர் கலந் துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் ஓய்வு பெற்ற நீதிபதி இ.வசந்தசேனன் நினை வுப் பேருரை ஆற்றவுள்ளார். தொடர்ந்து பல்வேறு பாட சாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற வுள்ளன.

இதேவேளை நாளை மறு தினம் புதன்கிழமை நடைபெறும் 2 ஆம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் எல். இளங்கோவன், சிறப்பு விருந் தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்வராஜா ஆகியோர் கலந்துகொள்ள வுள்ளனர்.

தொடர்ந்து கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபர்கள், ஆசிரி யர்கள், நலன்விரும்பிகள் மற்றும் ஊழியர்கள் கௌர விப்பும் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து பல்வேறு பாட சாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் மற்றும் சிறப்புரை களும் இடம்பெறவுள்ளன.

3 ஆம் நிகழ்வுகள் மறுநாள் 21 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாவதுடன், இந்நிகழ் வில் பிரதம விருந்தினராக வலி காமம் வலயக்கல்விப் பணிப் பாளர் எஸ்.சந்திரராஜா, சிறப்பு விருந்தினர்களாக மானிப்பாய் இந்துக்கல்லூரி பழைய மாண வர் கொழும்புக்கிளைத் தலை வர் டாக்டர் ஏ.இராமநாதன், வலிகாமம் கல்வி வலய முகா மைத்துவ பிரதிக்கல்விப் பணிப் பாளர் எஸ்.கந்தசாமி ஆகி யோர் கலந்துகொள்ளவுள் ளனர்.

இந்நிகழ்வில் பொன்விழா சிறப்பு மலர் வெளியீடும் இடம் பெறவுள்ளது. இந்நூல் வெளி யீட்டுரையை யாழ்.புதிய உயர் கல்லூரி நிர்வாகி எஸ்.அருள் நங்கை, ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் ஈ. குமரன், ஏற்புரையை இதழா சிரியர் ஆர்.சிவபாலன் ஆகி யோர் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து பல்வேறு பாட சாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

## தங்க நகைகள் ஏல விற்பனை

(யாழ்.நிருபர்)

மக்கள் வங்கியில் அடகு வைத்து ஒரு வருடம் பூர்த் தியாகியும் மீட்கப்படாத அல் லது புதுப்பிக்கப்படாத தங்க நகைகள் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

இவ் ஏல விற்பனை எதிர் வரும் 21 ஆம் திகதி வியாழக் கிழமையும், மறுநாள் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் நடைபெறுமென மக்கள் வங்கி யின் யாழ்.பிராந்திய முகாமை யாளர் அறிவித்துள்ளார். (10)



வேலணை - துறையூர் கந்தன் கடவை அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் அண்மையில் சிவராத்திரி பூஜை நிகழ்வு மிகச்சிறப்பாக நடைபெற்றது. மறுநாள் காலை சுவாமி, பக்தர்கள் சூழ கடற்கரைக்கு தீர்த்தமாடச் செல்வதனைக் காணலாம். (21)



# வேலை வாய்ப்புச் செய்திகள்

புதிதாக ஆரம்பிக்கப்பட உள்ள வைத்திய நிறுவனம் ஒன்றுக்கு ஓய்வுபெற்ற RMP/ MD/ MBBS வைத்தியர்கள் உடன் தேவை. தொடர்புகளுக்கு : 077 946 5467.

---

பிரபல தனியார் தொலைத்தொடர்பு நிறுவனத்திற்கு யாழ். கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளுக்கு விற்பனை பிரதிநிதிகள் தேவை. நல்ல சுறுசுறுப்பும் இளமைத்துடிப்பும் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு : 078 502 0539, 078 896 6999. இல, 412 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.

---

யாழ்.நகரில் இயங்கும் விருந்தினர் விடுதி ஒன்றுக்கு மும்மொழிகளும் பேசத்தெரிந்த, கணனி அறிவுடைய முகாமையாளர் தேவை. தொடர்புகளுக்கு, 29/33 உடையார் லேன், ஐயனார் கோவில் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல: 071 446 1812.

---

கைதடியில் உள்ள நல்ல குடும்பத்திற்கு வீட்டில் தங்கியிருந்து வீட்டுவேலை செய்வதற்கு பெண் தேவை. தொடர்புகளுக்கு: 077 222 4913.

---

யாழ்ப்பாணம் Sisil World காட்சி அறைக்கு Recovery Officer, Sales Assistant தேவை. ஆர்வமுடையவர்கள் வேலை நேரத்தில் நேரில் வரவும். முகவரி: இல.106 கே.கே.எஸ்.வீதி. யாழ்ப்பாணம். தொலைபேசி இல் 021 221 9291, 077 350 1812.

---

பிரபல ஹோட்டல் ஒன்றுக்கு சமையல்காரார், உணவு பரிமாறுபவர் (ஆண், பெண் இருபாலாரும்) சிற்றுண்டி தயாரிப்பாளர், கொத்து, பிறைட்றைஸ் தயாரிப்பாளர் தேவை. அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். தொடர்புகளுக்கு: 021 568 5135.

---

சங்கென் நிறுவனத்திற்கு பின்வரும் வெற்றிடங்களுக்கு பொருத்தமானவர்களிமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள் ளன. உதவிப்பொறியியலளர்கள் (கட்டடத்துறையில் டிப்ளோமா பட்டம் பெற்றவர்கள்), மேற்பார்வையாளர்கள் (கட்டடத்துறையில் அனுபவமுள்ள துடிப்பான இளைஞர்கள்), Data Entry Operators Cum Store Keeper, கட்டடப் பொருட்களில் அனுபவம் உள்ளவர்கள் (பெண்கள் விரும்பத்தக்கது). தொடர்புகளுக்கு: The Manager, Sanken Construcation (Pvt) Ltd. No,31 Wyman Road, Jaffna. E-mail: jayanthi@sankenconst ruction.lk.

---

வெள்ளவத்தையிலுள்ள பெண்கள் மற்றும் சிறுவர் களுக்கான ஆடைகள் விற்பனை நிலையத்திற்கு ஆடைகள் விற்பனை செய்யக்கூடிய சுறுசுறுப்புள்ள பெண்கள் தேவை. தொடர்புகளுக்கு: 2589923.

---

கண்டியில் உள்ள வீடு ஒன்றில் தங்கியிருந்து வீட்டு வேலைகள் செய்யக்கூடிய வீட்டுப் பணிப்பெண் தேவை. 21 வய்து தொடக்கம் 40 வயதுக்கு உட்பட்டவர்கள் விரும் பத்தக்கது. தங்குமிட வசதி, உணவு என்பன வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசி தீர்மானித்துக்கொள்ளலாம். தொடர்பு களுக்கு: 077 214 0994, 081 563 5228.

---

பிரசித்தி பெற்ற நிறுவனம் ஒன்றிற்கு திறமையான இளமைத்துடிப்பு மிக்க டயர் தொழில்நுட்பவியலாளர்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும் தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்: 077 395 4694.

---

கொழும்பு - 13 இல் உள்ள பிரசித்தி பெற்ற புடவைக்கடைக்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்: 077 657 7504

# வடக்கு மீனவர்களின் வயிற்றில் அடிக்கும்

# இந்திய மீனவர்களின் அடாவடித்தனம்

## எதிர்த்து குரல் கொடுக்க கூட்டமைப்பு தயங்குவது ஏன்?



(கொழும்பு)

வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரத்தில் கைவைக்கும் இந்திய மீனவர்களின் அடாவடித்தனத்துக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குரல் கொடுக்குமா? என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாயராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழக மீனவர்கள், இலங்கையின் மீன் வளங்களை பாரியளவில் சுரண்டி வருவதாகவும் இதனால் இலங்கையின் வடபகுதி மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை தமிழகத்தைச் சேர்ந்த சில தரப்பினர் இலங்கைக்கு களங்கம் ஏற்படுத்தும் முனைப்புக்களில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளிக்கும் நோக்கில் தமிழக மீனவர்கள் இவ்வாறு போலிப் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழக படகுகள் மூலம் விடுதலைப் புலிகள் கடந்த காலங்களில் ஆயுதங்களைக் கடத்தியுள்ளனர்.

இலங்கை விவகாரங்களை தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் தங்களது அரசியல், தேவைகளுக்காக பயன்படுத்திக்கொள்கின்றனர்.

இலங்கை வாழ் தமிழ் பேசும மீனவர்களை பாதுகாக்குமாறு இந்தியாவிடம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோர வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். மேலும் ஜெனிவாவில் தற்போது இடம்பெற்று வரும் ஐ.நா.மனித உரிமை மாநாட்டை இலக்கு வைத்து இலங்கைக்கு களங்கத்தை ஏற்படுத்தும் வகையில் தமிழக மீனவர்கள் போலியான பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாகவும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

# படைத்தரப்பு காணி அபகரிக்கிறதா?

# அடியோடு மறுக்கிறார் யாழ்.தளபதி

(கொழும்பு)

காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளில் இராணுவம் ஈடுபட வில்லை காணி சுவீகரிப்பில் இராணுவம் ஈடுபட்டு வருவதாக சில அரசியல் வாதிகள் மக்கள் மத்தியில் வாதந்திகளை பரப்பி வருவதாக யாழ். மாவட்ட பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கோப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட புத்தூர் கிழக்கு பகுதியில் இராணுவத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட வீடு கையளிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இதனை அவர் குறிப்பட்டார்.

இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

30 வருட யுத்தத்தில் இருந்து மக்களை மீட்டெடுத்து கடந்த நான்கு வருடங்களாக இராணுவத்தினர் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். குறிப்பாக கல்வி, மருத்துவம், வீடமைப்பு போன்ற பல்வேறு அபிவிருத்திப்பணிகளில் பங்கெடுத்து வருகின்றனர். மக்களின் வாக்குகளில் வெற்றி பெற்றவர்கள் மக்களுக்காக என்ன அபிவிருத்திப் பணிகளை செய்திருக்கின்றார்கள்.

தற்போது நீங்கள் எல்லோரும் ஜெனிவா பற்றிப் பேசிக் கொண்டுமிருப்பீர்கள் கேள்விப் பட்டுக்கொண்டும் இருப்பீர்கள் இந்த ஜெனிவாக் கூட்டத்திற்கு இங்குள்ள அரசியல் வாதிகள் சிலர் சென்று தேவையற்ற கூட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இவ்வாறு ஜெனிவா சென்று செலவு செய்யும் பணத்தினை பிரயோசனமாக மக்களின் அபிவருத்திக்குப் பயன்டுத்தி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முன்வரவேண்டும் என்றார்.



விடுதலைப்புலிகளிடம் இருந்து 4 இலட்சம் மக்கள் மீட்கப்பட்டு அந்த மக்கள் இராணுவத்தினருடன் மிக நெருக்கமான உறவுகளைப் பேணிவருகின்றனர். இந்தவகையில் இராணுவம் என்ன செய்கிறது என்று சிலர் சொல்லிக்கொண்டு இராணுவம் நில அபகரிப்பு செய்துவருவதாக வதந்திகளை பரப்பி வருகின்றனர் இராணுவம் அவ்வாறான நில அபகரிப்பு செயற்பாடுகளை செய்யவில்லை இவ்வாறான பாதகமான கருத்துக்கள் தொடர்பில் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றார். அத்துடன் தற்போதுள்ள சமாதான சூழலில் வாழந்து வரும் நாங்கள் சிலரின் தப்பான எண்ணங்களில் இருந்து விடுபட்டு சாதகமான விடயங்கள் பற்றி சிந்திக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

# மஹா கும்பாபிஷேகம்

(யாழ்.நிருபர்)

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ மத் வாலாம்பிகா சமேத ஸ்ரீவைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தான மஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு எதிர்வரும் 25ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.16 மணி தொடக்கம் கிரியைகள் ஆரம்பமாகி தொடர்ந்து நான்கு நாட்களுக்கு நடைபெறும். 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 5.00 மணி முதல் கிரியைகள் ஆரம்பமாகி, காலை 9.30 மணி முதல் 10.46 மணி வரை உள்ள சுபமுகூர்த்தத்தில் மஹா கும் பாபிஷேகம் நடைறெும். மாலை 5.00 மணிக்கு திருக்கல்யாணம் இடம்பெறும்.

கும்பாபிஷேகக் கிரியைகள் தேவஸ்தான பிரதமகுரு பிரம்மஸ்ரீ சொ.இ.விக்கினேஸ்வரக் குருக்கள் தலைமையில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வருகைதரும் சிவாசாரியார்களால் நடத்தப்படவுள்ளது. (10)

# "வடக்கு வானில் தென்றல்"

(யாழ்நிருபர்)

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு 'வடக்கு வானத்துக்கு வீசும் நாட்டின் தென்றல்' என்னும் தலைப்பில் இசை நிகழ்வுகள் மல்லாகத்தில் நடைபெறவுள்ளன.

தெல்லிப்பளை பொலிஸ் நிலையமும் தெல்லிப்பளை பிரதேச செயலகமும் இணைந்து நடத்தவுள்ள இந்நிகழ்வுகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி மல்லாகம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

இந்நகழ்வைத் தொடர்ந்து சிங்கள - தமிழ் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளும் நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்படி பிரதேச செயலகம், பொலிஸ் நிலையம் என்பன இணைந்து மேற்கொண்டுவருகின்றன. (10)

# பொதுக்கூட்டம்

(யாழ்.நிருபர்)

வேலணை தெற்கு பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி செவ்வாய்க் கிழமை வேலணைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பொ.நடராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வேலணை பிரதேசசெயலர் திருமதி.மஞ்சுளா தேவி சதீஷன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

சிறப்பு விருந்தினர்களாக உதவிப் பிரதேச செயலர் பி.கஜேந்திரன், யாழ்.மாவட்ட ஓய்வூதியர் சங்கப்பிரதிநிதிகளான ப.சந்திரசேகரம், சு.கணேசலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (10)

# பங்குனி மஹோற்சவ பெருந்திருவிழா ஆரம்பம்

(யாழ்.நிருபர்)

ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் காரைநகர் திண்ணபுரம் சிவன் கோயில் வருடாந்த பங்குனி மகோற்சவப் பெருந்திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 20ஆம் திகதி புதன்கிழமை கைலாசவாகனத் திருவிழாவும், 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு பெரிய சப்பறத் திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை இரதோற்சவத்தை முன்னிட்டு பஞ்சரத பவனியும் இடம்பெறும். 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவமும் மறுநாள் 26ஆம் திகதி புதன்கிழமை பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும். (10)

# தொழிற்சங்க சம்மேளனம் மலையகத்தில் உதயம்

மலையக தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் குறித்த பேச்சுவார்த்தையில் தாமும் நேரடியாகக் கலந்துகொள்ளும் நோக்குடன் 15 தோட்டத் தொழிற் சங்கங்கள் இணைந்து பெருந் தோட்ட தொழிற்சங்க சம்மேளனம் என்ற பெயரில் ஒரு தொழிற் சங்க அமைப்பை பதிவு செய்யவுள்ளன. தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துடன் சம்பளம் குறித்த பேச்சுவார்த்தையில் நேரடியாக, தற்போதைக்கு மூன்று தொழிற்சங்கங்கள் மாத்திரமே கலந்துகொள்கின்றன. இந்த நிலையில் அதில் கலந்து கொள்ள வாய்ப்பில்லாமல் இருந்து வருகின்ற சுமார் 15 தொழிற்சங்கங்கள் இணைந்து இந்த புதிய சம்மேளனத்தை ஏற்படுத்துகின்றன. இதன் மூலம் ஏற்கனவே பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளும் மூன்று தொழிற்சங்கங்களை விட பெரிதாக அல்லது அவற்றுக்கு நிகரான ஒரு சம்மேளனமாக தமது அமைப்பு உருவெடுக்குமென்று அந்த அமைப்பின் செயலாளரான மலையக மக்கள் முன்னணியைச் சேர்ந்த ஆ.லோரண்ஸ் கூறுகிறார். சம்பளப் பிரச்சினைக்காக மாத்திரமன்றி தோட்டத் தொழிலாளரின் அனைத்து பிரச்சினைகளிலும் நீண்டகால அடிப்படையில் சிறப்பாக செயற்படும் அமைப்பாக தமது தொழிற் சங்கம் அமையும் என்றும் அவர் கூறுகிறார்.

# பரமர் சங்கமம்



'கெட்டிக்காரனின் பொய்யும், புரட்டும் டக்கு முக்கு டிக்குத்தாளம்...' என்னும் கூற்றுக்கு பிற்பாடு தோன்றியது. அதற்கு முன்பாக "எட்டு நாளைக்கும்" என்ற கூற்று ஆணித்தரமாகப் பதிந்துள்ளது.

'டக்கு முக்கு டிக்குத் தாளம' என்பதும், "எட்டு நாளைக்கு" என்கிறதும் கிட்டத்தட்ட ஒரேகருத்தினை எமது புரிந்துணர்வு களில் ஊட்டுகின்றன.

இந்தக் கருத்தை நம் முன்னோர் சும்மாவா சொல்லி வைத்தனர்? அதனைப் பார்த்த, கேட்ட மாத்திரத்தில் நினைவுக்கு வருவது நம்ம அயல்கண்ட நாடுதான்.

முள்ளிவாய்க்காலில் அப்பாவித் தமிழ் மக்கள் நாற்பதாயிரம் பேர்களுக்கு மேல் கொல்லப்பட சூத்திரதாரியாக இருந்த இந்தியா, வேடத்தை மாத்திப் போட்டுக் கொண்டு ஜெனிவாவில் கடந்த வருடக் கூட்டத் தொடரிலும் 'பல்டி' அடித்தது; இன்னும் நினைவுகளில் இருந்து மறையவில்லை.

பிற்பாடு இப்போ நடக்கப்போகிற கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வருகின்ற பிரேரணையை ஆதரிக்கப் போவதாகப் பீத்தி விட்டு இப்போ நழுவல்; போக்கைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு இறுதிப்போரை இலங்கையுடன் சேர்ந்து இந்தியா நடத்திக் கொண்டிருக்கையில், கலைஞர் கருணாநிதி டில்லி நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் திராவிட முன்னேற்றக்கழக உறுப்பினர் 40 பேர்களையும் அரசாங்கச்சார்பில் விலக்கிக் கொள்ளப் போவதாக அறிக்கை விட்டார்.

இன்று இந்திய ஜனாதிபதியாகவுள்ள அன்றைய வெளிவிவகாரங்களுக்கான அமைச்சர் பிரணாப் முகர்ஜி தமிழகத்திலுள்ள கலைஞர் கருணாநிதியின் வீட்டுக்குப் பிரயாணம் செய்து நிலைமையை எவ்வாறோ கட்டிக்காத்துக் கொண்டார்.

இல்லையேல் முள்ளிவாய்க்கால் சரித்திரம் மாறுபட்டே அமைந்திருக்கும். அதனால் ஈழத்து தமிழர்களுக்கு இளைத்த பச்சைத் துரோகத்தனத்தை கோமாளித்தனமான உண்ணாவிரதம் ஒன்றை ஆரம்பித்து சிலமணி நேரங்களில் முடித்திருந்ததை எல்லாம் உலக நாடுகளே எள்ளி நகை ஆடியதெல்லாம் பரகசியம்.

'எட்டு நாளென்ன எட்டு மணித்தியாலம் கூட' உண்ணாவிரதம் நீடிக்கவில்லை ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த தகவல் ஒன்றை அனுப்பி வைத்து நடித்த நடிப்பு, உலகப் பிரசித்தம் பெற்றது.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அமெரிக்காவும், ஐக்கிய நாடுகள் சபையும் நெருப்பெரிந்த காலங்களில் கண்களை மூடிக்கொண்டிருந்து விட்டு இப்பவும் சுத்து மாத்துத்தான் செய்து கொண்டிருக்கின்றனர்.

இந்தக் கூட்டத்தித் தொடரில் இலங்கை வாழ் இலட்சக்கணக்கான தமிழ் மக்களுக்கு சரியான நியாயத்தை உலக நாடுகள் வலியுறுத்தி வழங்கியே ஆகவேண்டும்.

இல்லையேல் உலகக் கெட்டிக்காரர்கள் சேர்ந்து போட்ட 'டக்கு முக்கு டிக்குத்தாளமாகத்' தான் அமையும். இல்லையே பின்னை நான் சொல்லுறே சொல்லுங்க பாப்பம்...

26) பூந்தோட்டமொன்றின் நீளம் 16m. அகலம் நீளத்திலும் அரைவாசியாகும். எனின் பூந்தோட்டத்தின் பரப்பளவு

1) $160m^2$ 2) $128m^2$ 3) $512m^2$

ஒரு பாடசாலைக்கு முன்னால் வீதியில் வலப்பக்கத்திற்கும் இடப்பக்கத்திற்கும் ஜனவரி 1 ஆம் திகதியன்று காலை 8.00 தொடக்கம் பிற்பகல் 2.20 வரைக்கும் சென்ற வாகனங்கள் பற்றி மாணவர் குழுவொன்று சேகரித்த தகவல்கள் அட்டவணையில் காணப்படுகின்றன.


| வாகன வகை | சென்ற வாகனங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | வலப்பக்கத்திற்கு | இடப்பக்கத்திற்கு |
| கார் | 27 | 16 |
| முச்சக்கர வண்டி | 35 | 29 |
| லொறி | 23 | 21 |
| பேருந்து | 48 | 45 |

27) இடப்பக்கத்தினைப் பார்க்கிலும் கூடுதலாக வலப்பக்கத்திற்குச் சென்ற வாகனகங்களின் எண்ணிக்கை.

1) 22 2) 27 3) 32

28, 29, 30 ஆகிய வினாக்களுக்கு பின்வரும் தரவுகளை வாசித்து விடையளிக்க.

தேநீர் விருந்துபசாரம் ஒன்றில் விருந்தாளிகள் பெற்றுக்கொண்ட சிற்றுண்டிகளின் விபரத்தை கீழுள்ள வரைபடம் காட்டுகிறது.




28) விருந்துபசாரத்தில் கேக்கை உண்டோர் எத்தனை பேர்?


1) 45 2) 55 3) 65

29) விருந்துபசாரத்தில் மூன்று சிற்றுண்டிகளையும் உண்டோர் எத்தனை பேர்?

1) 08 2) 22 3) 97


30) விருந்துபசாரத்தில் எந்தவொரு சிற்றுண்டியையும் உண்ணாதோர் எத்தனை பேர்?


1) 08 2) 03 3) 06

31) 


□ இன் நிறை

1) 750g 2) 1500g 3) 1000g

32)  ஆகிய இரு உருக்களையும் சேர்க்கும்போது கிடைக்கும் உரு.





# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - I

1.30 மணி

# கல்வி முரசு



தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

மிகவும் நெருங்கிய தொடர்புள்ள உருச்சோடிக்குரிய அடைப்பைத் தெரிவு செய்க.


1)



2)



தரப்பட்டுள்ள உருக்களைக் கவனத்தில்க் கொண்டு விடை தருக.



A B C D E F

3) இவ்வுருக்களில் உணவுக்குப் பயன்படும் பொருட்கள் அடங்கியது.

1) A, F 2) A,B 3) C,F

4) விளையாட்டுப் பொருட்கள் அடங்கியது.

1) B,C 2) B,D 3) E,B

5) ஊர்வன அடங்கியது.

1) D,F 2) D,C 3) D,E

பின்வரும் பாடலை வாசித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

மின்னி மின்னி ஒளிரும் அது
மின்மினிப் பூச்சி அல்ல
மஞ்சள் நிறத்தில் இருக்கும் அது
மங்கையர் சூடும் பூவும் அல்ல

சின்னச் சின்ன வண்டு
சிறகு அடிக்கும் வண்டு
கமகம மலரில் தேனை
களிப்புடன் அருந்தும் வண்டு

6) இரண்டாவது பாடலில் இரட்டைக்களவி எது?

7) புஷ்பம் என்பதன் ஒத்த சொற்கள் இரண்டு எவை?

8) மரத்தில் அதிகம் வாழும் விலங்கு எது?
1) பூனை 2) அணில் 3) கோழி


9) இலங்கை நாட்டுக்கே உரிய பிராணி
1) செண்பகம் 2) மர அணில் 3) காகம்

**பின்வரும் 10, 11 ஆகிய வினாக்களின் ஆரம்பத்தில் தரப்பட்டுள்ள சொற்களுக்கு எதிர்க்கருத்துள்ள சொல்லைத் தரப்பட்ட சொற்களிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கீறிடுக.**

10) வெற்றி,
1) இலட்சியம் 2) தோல்வி 3) நம்பிக்கை


11) செங்கோல்,
1) நல்லாட்சி 2) கொடுங்கோல் 3) சிறப்பாட்சி

12) வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.





1) 5 2) 7 3) 28

13)





1) 54 2) 48 3) 53


14) மிருகங்கள், சிங்கம், மான் என்பவற்றுக்கான தொடர்பினைக் காட்டுவதற்கு எந்த உரு பொருத்தமானதாகும்.




**உருக்களுக்குச் சமமான வகையில் எழுத்துக்கள் அதன் கீழ் தரப்பட்டுள்ளன.**




15)



என்னும் குறியீடு குறிக்கும் பெயர்.
1) தேநீர் 2) பரீட்சை 3) தோசை

16) அக்ஷயா வரிசை ஒன்றில் முன்னாலிருந்து ஆறாவதாகவும், பின்னாலிருந்து எட்டாவதாகவும் நிற்கிறாள். எனின் வரிசையில் உள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?
1) 10 2) 12 3) 13




2013 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை ஆகும். இதற்கேற்ப 17, 18 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

17) 2013 ஆம் ஆண்டு பெப்பரவரி மாதத்திலுள்ள திங்கட்கிழமைகளினதும், வெள்ளிக்கிழமைகளினதும் எண்ணிக்கை முறையே.
1) 4, 4 2) 4, 5 3) 5, 4

18) 2013 ஆம் ஆண்டு மார்ச் 1 ஆம் திகதி என்ன கிழமை?
1) செவ்வாய்க்கிழமை 2) வெள்ளிக்கிழமை 3) சனிக்கிழமை

19) கீழே தரப்பட்டுள்ள வினாவில் முதலில் உள்ள எண் பெறுமானத்திற்குப் பதிலாக ஈடுபடுத்தக்கூடிய எண் கூட்டத்தைத் தெரிவு செய்து கோடிடுக.
IX + VII 1) X + V 2) X + VI 3) XII - V

20)



இவ்வுருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை
1) 9 2) 8 3) 7

**தரப்பட்டுள்ள தரவைப் பயன்படுத்தி 21, 22 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

ஒரு தொழிற்சாலையில் 4 பெண்கள் 4 மணித்தியாலங்களில் செய்த பொம்மைகளின் எண்ணிக்கை பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை அவதானித்துத் தரப்படம் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிக.


யது - 8 பொம்மைகள் சித்து - 12 பொம்மைகள்
துசி - 16 பொம்மைகள் அச்சு - 20 பொம்மைகள்

21) யது ஒரு மணித்தியாலத்தில் செய்த பொம்மைகள்
1) 10 மணி 2) 2 மணி 3) 8 மணி

22) அச்சு செய்த பொம்மைகளை யது செய்ய எவ்வளவு நேரம் எடுக்கும்.
1) 10 மணி 2) 8 மணி 3) 4 மணி

23) இலங்கையின் நேரமானது சிங்கப்பூரின் நேரதிதிலும் 2 மணித்தியாலம் 40 நிமிடங்கள் குறைவாகும். சிங்கப்பூரின் நேரம் பி.ப. 22.25 ஆகும் போது இலங்கையின் நேரம் என்ன?
1) பி.ப 12.45 2) மு.ப 11.45 3) பி.ப 11.45

24) 4/10 இற்குச் சமனாக நிழற்றப்பட்ட உரு.




25) 5 எனும் எண்ணை உரோமன் இலக்கத்தில் அமைக்க 2 தீக்குச்சிகள் தேவை 9 எனும் எண்ணை உரோமன் இலக்கத்தில் அமைக்கத் தேவையான குச்சிகளின் எண்ணிக்கை எத்தனை.
1) 2 2) 3 3) 4

# பாலுறவு சம்மத வயதுக் குறைப்பு

# இந்திய கலாசாரத்திற்கு கேடு



பெண்கள் பாலுறவுக்கு சம்மதம் தெரிவிப்பதற்கான வயதை தற்போதுள்ள 18லிருந்து 16ஆக குறைப்பது மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெண்கள் பாலுறவுக்கு சம்மதம் தெரிவிப்பதற்கான வயதை குறைப்பது தொடர்பாக மத்திய அமைச்சர்கள் குழுக் கூட்டத்தில முடிவெடுக்கப்பட்டிருப்பதும், அதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்திருப்பதும் பெரும் அதிர்ச்சி அளிக்கிறது.

இந்தியாவில் ஒரு காலத்தில் 10ஆக இருந்த பாலுறவு சம்மத வயது பல்வேறு கசப்பான நிகழ்வுகளுக்குப் பின்னர் படிப்படியாக 18ஆக உயர்த்தப்பட்டது.

இந்த நிலையில், பாலியல் குற்றங்களில் இருந்து பெண்களைப் பாதுகாக்கிறோம் என்ற பெயரில் பாலுறவு சம்மத வயதை குறைக்க மத்திய அரசு முடிவு செய்திருப்பது ஏன்? என்பதை புரிந்து கொள்ள முடியவில்லை. அத்துடன், பாலுறவு சம்மத வயதை அதைவிட குறைவாக நிர்ணயிப்பது மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். அது நமது கலாசாரத்திற்கு ஏற்றுக் கொள்ளக் கூடியதாக அமையாது. இந்தியக் கலாசாரத்தின் சிறப்பைக் கண்டு உலகமே வியந்து பார்க்கும் வேளையில், இதுபோன்ற செயல்கள் படுகுழியில் தள்ளிவிடும்.

இந்தியச் செய்திகள்

எனவே, நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவிருக்கும் குற்றவியல் சட்டத் திருத்த மசோதாவில் பாலுறவு சம்மத வயது தொடர்பான பிரிவை நீக்க வேண்டும்.

அதுமட்டுமின்றி, பெண்களின் திருமண வயதை 21ஆக உயர்த்துவதற்கு தேவையான சட்டத் திருத்தங்களை செய்யவும் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

# ஒரு கோடி கையெழுத்துடன் மனு மன்மோகன்சிங்கிடம் சமர்ப்பிக்கத் திட்டம்

இலங்கைத் தமிழர்களின் விடியலுக்காக, டில்லி 'டெசோ' மாநாடு, 'பந்த்' போராட்டம் நடத்தி முடிக்கப்பட்ட நிலையில், அடுத்த கட்டமாக, 1கோடி பேரிடம் கையெழுத்து இயக்கம் நடத்தி, விண்ணப்பப் படிவத்தை பிரதமரிடம் வழங்குவதற்கு தி.மு.க. தலைமை திட்டமிட்டுள்ளது. இலங்கைத் தமிழர்களுக்கு சாதகமாக, மத்தியஅரசு முடிவு எடுக்கவில்லை என்றால், மத்திய அமைச்சரவையிலிருந்து தி.மு.க. அமைச்சர்கள் வெளியேறி, அரசுக்கு வெளியிலிருந்து ஆதரவு அளிக்கவும், தி.மு.க. தரப்பு தயாராகியுள்ளதாக, அக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கைக்கு எதிராக, ஐ.நா.சபையில், அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தை, மத்திய அரசு ஆதரிக்க வேண்டும். இலங்கை தமிழர்களுக்கு நல்வாழ்வு கிடைக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, 'டெசோ' சார்பில், டில்லியில் நடந்த மாநாடு தோல்வி அடைந்ததால், தமிழகம் முழுவதும்,



'பந்த்' போராட்டம் நடத்தப்பட்டது. 'டெசோ' சார்பில் நடைபெறும் அடுக்கடுக்கான போராட்டங்களை முறியடிப்பதற்காக, ம.தி.மு.க., நாம் தமிழர் போன்ற கட்சிகள் மற்றும் பல்வேறு தமிழ் அமைப்புகள், கிறிஸ்தவ அமைப்புகள், தமிழ் ஆர்வலர்களின் ஆதரவில், தமிழகம் முழுவதும் கல்லூரி மாணவர்களின் போராட்டங்கள் தீவிரம் அடைந்துள்ளன.

# கவர்ச்சியாக நடிக்க என்னால் முடியாது



வித்யாபாலன் போன்று என்னால் கவர்ச்சி காட்டி நடிக்க முடியாது என பகிரங்கமாக கஜோல் தெரிவித்துள்ளார்தமிழில் 'மின்சார கனவு' படத்தில் பிரபு தேவா ஜோடியாக நடித்தவ்ர் கொலிவூட் நடிகை கஜோல்.

ஹிந்தியில் 11 வருடங்கள் ஓடிய 'தில்வாலே துல்ஹனியா லே ஜாயேங்கே உட்பட ஏராளமான படங்களில் நடித்திருக்கிறார். வித்யாபாலன் போல் என்னால் கவர்ச்சி காட்டி நடிக்க முடியாது என்று அவர் கூறியது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இதுபற்றி அவர் கூறுகையில், ஷாருக்கானும், நானும் பொருத்தமான ஜோடியாக அமைந்தோம். அதன்பிறகு இன்றுவரை எங்களைப்போல் ஒரு ஜோடி அமையவில்லை. திருமணத்திற்கு பிறகு படங்களில் நடிப்பதை குறைத்துவிட்டேன்.

மீண்டும் நடிக்க வருவது எப்போது என்கிறார்கள். எனக்கு குழந்தைகள் இருக்கிறது. அவர்களை வளர்க்கும் பொறுப்பு இருக்கிறது. எனவே இப்போது படங்களை ஏற்க முடியாது. டிவியில் நடிக்க விரும்புகிறேன்.

ஆனால் அதற்கான எந்த வாய்ப்பையும் இதுவரை ஏற்கவில்லை. சினிமாவில் நடிக்க வேண்டுமென்றால் என் மனதை கவரும் விடயமாக அது இருக்க வேண்டும். வித்யாபாலன் நடித்த படம் போன்ற படங்களில் நான் நடிக்க மாட்டேன்.

# கடல் விமானம் கேரளாவில் அறிமுகம்



சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக கேரளாவில் கடல் விமானத்திட்டத்தை அடுத்தமாதம் செயல்படுத்த மாநில அரசு தீவிரம் காட்டி வருகிறது. தண்ணீரில் இருந்து வானில் பறக்கவும் வானில் இருந்து தண்ணீரிலோ, நிலத்திலோ இறங்கும் வசதி கொண்டவை கடல் விமானங்கள்.

அமெரிக்கா, ஜப்பான், சீனா, அவுஸ்திரேலியா, கனடா, மாலை தீவுகள் போன்ற சில நாடுகளில் இத்தகைய கடல் விமானங்கள் பயன்பாட்டில் உள்ளன. இந்தியாவில் அந்தமான் நிகோபார் தீவுகளிலும் இவை பயன்படுத்தப்படுகின்றன. இந்நிலையில் கேரளாவில், சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக இந்தக் கடல் விமானத் திட்டத்தை செயல்படுத்த மாநிலஅரசு முடிவு செய்தது.




**மேற்கு வங்க மாநிலம் மால்டா மாவட்டத்தில் நாராயண்பூர் நகரில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் ஐக்கிய முற்போக்கு கூட்டணி தலைவர் சோனியா, காங்கிரஸ் எம்.பி., மவுஸம் நூர் கலந்து கொண்டனர்**

## ஆவி மனதில் தூண்டப்பட்டால்...

(சூசன்னா)
(யோவான் 8 : 12 - 20)

இன்றைய நற்செய்திப் பகுதியில் சான்று பற்றிய சர்ச்சை இடம்பெறுகிறது. "இவருடைய சான்று செல்லும் என்று உங்கள் சட்டத்தில் எழுதியுள்ளது அல்லவா? என்னைப் பற்றி நானும் சான்று பகர்கிறேன், என்னை அனுப்பிய தந்தையும் சான்று பகர்கிறார்" என்று இயேசு சொல்வதை அவதானிக்கின்றோம். இயேசுவின் தம்மைப் பற்றிய சாட்சியத்தை ஏற்றுக்கொள்ளாதவர்கள் இயேசுவிற்கு மரணதண்டனை விதிக்கச் சாட்சியங்களைத் தேடினார்கள். "தலைமைக் குருக்களும், தலைமைச் சங்கத்தார் அவனைவரும் இயேசுவுக்கு மரணதண்டனை விதிக்க அவருக்கு எதிராக பொய்ச்சாட்சி தேடினர். பல பொய்ச்சாட்சிகள் முன்வந்தும் ஏற்ற சாட்சி கிடைக்கவில்லை. இறுதியாக இருவர் முன்வந்தனர்" என்று மத்தேயு விபரிக்கின்றார் (மத் 26 : 59 - 60)

பொய் வழக்கு, பொய்ச் சாட்சியங்கள், பொய்ச் சோடனை, அநியாயத் தீர்ப்பு இதெல்லாம் இன்றும் நடக்கும் கதைதான். இதனை எதிர்க்க வேண்டிய மக்களும் கண்மூடித்தனமாய் தவறாக வழிநடத்தப்படுவதும், அநீதிக்கு தலையசைப்பதும், அச்சுறுத்தலினால் மௌனிகளதும் இன்றும் தொடரும் கதை. இப்படிப்பட்ட ஒரு நிலைமையைத்தான் சூசன்னாவின் கதையும் எமக்கு எடுத்துக் காட்டுகின்றது. காமுகர் இருவரினால் சூசன்னா அநியாயமாகப் பழிசுமத்தப்படுகின்றாள். மக்கள் கூட்டம் சூசன்னாவுக்கு சாவுக்குத் தீர்ப்பிட்டது. ஆனால் அநீதியை அம்பலப்படுத்தி மக்களின் கண்களைத் திறக்கச் செய்தான் ஒரு தீரம்மிக்க இளைஞன். அவன்தான் தானியேல், அநீதிக்கு எதிராக அவன் உள்ளத்தில் தூய ஆவியைக் கடவுள் தூண்டிவிடுகின்றார். அநீதியை எதிர்த்துத் தனிக்குரலாய், துணிச்சல் மிக்க குரலாய், உரத்த குரலாய் ஒலிக்கிறது தானியேலின் குரல்.

**வி.பி.தனேந்திரா.**

**அரை உண்மைகளின்...**
(5ஆம் பக்கத்தொடர்ச்சி...)

பாலச்சந்திரனை விட மிகச் சிறிய குழந்தைகளையெல்லாம் கூட மசூதியில் தொழுது கொண்டிருந்தபோது நேருக்கு நேர் சுட்டு வீழ்த்தியிருக்கிறார்கள். இதைவிட தமிழ் இனத்துக்குள்ளேயே பிற போராட்டக் குழுவினரை சரமாரியாகக் கொன்று குவித்திருக்கிறார்கள். ஆயுதக் கடத்தலில் ஆரம்பித்து அனைத்து வகையான திரைமறைவு வேலைகளிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். இவை குறித்து ஒரு வார்த்தைகூட இன்றைய போராடடத்தில் முன்வைக்கப் படவில்லை.

இலங்கைக் கடற்படையால் தமிழக-இந்திய மீனவர்கள் தாக்கப்படுவது தொடர்பாக பேசப்படுபவற்றைக் கொஞ்சம் சீர்தூக்கிப் பார்த்தாலே அரை உண்மை எவ்வளவு அபாயகரமானது என்பது புரிந்துவிடும். தமிழகப் பகுதிகளில் மீன்வளம் குறைந்து வருவது, தமிழக மீனவர்கள் வலிமையான மோட்டர் படகுகளைப் பயன்படுத்துவது, இலங்கை மீனவர்களுக்கு அவர்களுடன் போட்டிபோட முடியாத நிலை, தமிழ் மீனவர் குழுக்களுக்குள் நடக்கும் சண்டைகள் கூட இலங்கை அரசின் மீது பழி போடப்படுதல், அரசியல் உள்நோக்கத்துடன் மிகைப்படுத்திக் கூறப்படும் நிகழ்வுகள், கைது போன்ற இலங்கைக் கடற்படையின் முதல் கட்டத் தொடர் எச்சரிக்கைகள், மாற்று மீன்பிடித் தடங்களை உருவாக்குதல், கடல் பாசிகள் வளர்த்தல் என எதுவுமே பேசப்படாமல் வெறுமனே இலங்கை அரசு தமிழக-இந்திய மீனவர்களைக் கொல்கிறது என்ற ஒற்றைக் குற்றச்சாட்டு பிரச்சினையை மேலும் பெரிதாக்க மட்டுமே செய்யும்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ........................................

முகவரி : ........................................

பிறந்த ஆண்டு : ........................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

........................................
பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

## லண்டனில் கறுப்பு மரணத்தின் எலும்புக் கூடுகள் கண்டுபிடிப்பு



லண்டனில் கி.பி 1348 ஆம் ஆண்டில் மட்டும் 1,50,000 பேர் பிளேக் நோயால் உயிரிழந்தமையால் இவர்களது இறப்பு கறுப்பு மரணம் எனக் கூறப்படுகிறது. இவர்களில் 50,000 பேரின் எலும்புக் கூடுகள் இதுவரை அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன என்று அகழ்வியல் ஆராய்ச்சி நிபுணர்கள் தெரிவித்தனர்.


இந்நிலையில் எலும்புக் கூடுகள் சில சார்ட்டர் ஹவுஸ் சதுக்கத்தின் கீழே தோண்டும் போது கண்டறியப்பட்டது. இனி இந்த எலும்புக்கூடுகளில் ஆய்வு நடத்தப்பட்டு இவை பிளேக் நோயினால் இறந்தவர்களின் உடல்கள்தான் என்பது உறுதிசெய்யப்படும்.

மேலும் இவற்றின் பழமையும் கண்டுபிடிக்கப்படும் இவை இருந்த புதைகுழியின் ஆழம், புதைகலம் (Pottery) போன்றவையும் ஆராயப்படும். இதுபோல கடந்த 1980 ஆம் ஆண்டில் ஸ்மித்.'.பீல்டு என்ற இடத்தில் எலும்புக்கூடுகள் கண்டறியப்பட்டது.

1346 ஆம் ஆண்டில் ஆசியாவில் தோன்றிய பிளாக் நோய், கி.பி. 1348 - 1350 ஆம் ஆண்டுகளில் ஐரோப்பாவில் இலட்சக்கணக்கானோரின் உயிரைக் குடித்தமையால் கறுப்பு மரணம் என்று அழைக்கப்பட்டது.

## அரச சார்பற்ற நிறுவனமாக கத்தோலிக்க திருச்சபை மாறலாம்

### - புதிய பாப்பரசர் தெரிவிப்பு



ஆன்மிக புதுப்பித்தல் இல்லாமல் கருணை அடிப்படையிலான அரசசார்பற்ற நிறுவனமாக கத்தோலிக்க திருச்சபை மாற்றமடையலாம் என புதிய பரிசுத்த பாப்பரசர் முதலாம் பிரான்சிஸ் கூறியுள்ளார்

கர்தினால்களுடன் இடம்பெற்ற பிரார்த்தனையில் கலந்துகொண்ட பரிசுத்த பாப்பரசர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இந்த மாற்றத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமென வலியுறுத்தியுள்ள பரிசுத்த பாப்பரசர், அவ்வாறு நடக்காவிடின் சிறுவர்களின் மணல் கோட்டைகள் போல அனைத்தும் இடிந்து விழும் என சுட்டிக் காட்டியுள்ளார்.


இலத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த முதலாவது பரிசுத்த பாப்பரசராக முதலாம் பிரான்சிஸ் வரலாற்றில் இடம்பிடித்துள்ளார். புதிதாத மேற்கொள்ளப்படவிருக்கும் நியமனங்கள், மோசடிகளால் களங்கப்பட்டிருக்கும் பாப்பரசர் அலுவலக அதிகார வர்க்கத்தை சீர்திருத்தக் கிடைத்திருக்கும் ஒரு வாய்ப்பாக கருதப்படுகின்றது.

இந்தப் புதிய நியமனங்கள் கத்தோலிக்கத் திருச்சபையின் எதிர்காலத்திற்கு எந்தத் திசையை தெரிவுசெய்வார் என்பதைச் சுட்டிக்காட்டும் என குறிப்பிடப்பட்டுள்ளதுஅத்துடன், வார இறுதியில் பரிசுத்த பாப்பரசர் உலக ஊடகவியலாளர்களை. சிறப்பு செய்தியாளர் கூட்டமொன்றில் சந்திப்பார் என்று சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

உலகச் செய்திகள்

## செவ்வாய் கிரகத்தில் களிமண்; கண்டறிந்தது கியூரியா சிட்டி

(வோஷிங்டன்)



செவ்வாய் கிரகத்தில், களிமண் இருப்பதை, அமெரிக்காவின், கியூரியாசிட்டி விண்கலம் கண்டறிந்துள்ளது.

அமெரிக்கா, நாசா விண்வெளி ஆய்வுமையம் சார்பில், செவ்வாய் கிரகத்திற்கு அனுப்பப்பட்ட, கியூரியாசிட்டி விண்கலம், அங்கு சமீபத்தில், பாறை ஒன்றை உடைத்து, அதனுள் இருந்த துகள்களை எடுத்து, விண்கலத்திலுள்ள, சாம மற்றும் செமின் ஆகிய இரு ஆய்வகங்களில், பரிசோதனை நடத்தியது.

அத்துகள்களில், களிமண் படலங்கள் இருப்பது தெரிந்தது. இதையடுத்து, இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன், அப்பகுதியில் உயிரினம் இருந்திருக்கலாம் என, விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

மேலும், அங்கு களிமண் படலம் இருப்பது கண்டறியப்பட்டதால், சுத்தமான தண்ணீரும் இருந்திருக்கவேண்டும் என்றும், தண்ணீர் இருந்திருக்குமானால், உயிரினம் இருந்திருக்கவும் வாய்ப்பு அதிகமுள்ளதாகவும், நாசா விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

இது தவிர, செவ்வாய் கிரகத்தில், கந்தகம், நைட்ரஜன். ஆக்சிஜன், பாஸ்பரஸ் போன்றவையும் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளதால், செவ்வாய் கிரகத்தில் உயிரினம் இருந்ததற்கான போதுமான ஆதாரங்களை, விஞ்ஞானிகள் கண்டறிந்தனர்.

நாசா அனுப்பிய விண்கலம், செவ்வாய் கிரகத்தின் மத்திய பகுதியில், கேல் என்ற இடத்தில், மிகவும் புராதனமான, ஏரியின் அடிப்பகுதியில் இருந்துதான், ஆய்வுகளை நடத்தி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## இராணுவ அருங்காட்சியகத்தில் சாவேஷின் உடல் அடக்கம்




மறைந்த வெனிசூலா அதிபர் ஹியூகோ சாவேஸின் உடல், காரகஸில் உள்ள இராணுவ அருங்காட்சியகத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த ஹியூகோ சாவேஸ் (வயது - 58) இம்மாதம் 5 ஆம் திகதி இறந்தார். அவரது உடல் கடந்த 10 நாள்களாக பொது மக்கள் மற்றும் தலைவர்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. மறைந்த ரஷ்ய அதிபர் லெனினின் உடலை அடக்கம் செய்யாமல் பதப்படுத்தி வைத்துள்ளதுபோல் சாவேஸின் உடலும் வைக்கப்படும் என்று கூறப்பட்ட தகவலை வெனிசூலா அதிகாரிகள் வெள்ளிக்கிழமை மறுத்தனர்.

இந்நிலையில், சாவேஸின் உடல் தலைநகர் காரகஸில் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டது. இந்த இறுதி ஊர்வலத்தில் அவரது குடும்பத்தினர், நண்பர்கள், அரசு மற்றும் இராணுவ அதிகாரிகள் பங்கேற்றனர். தொடர்ந்து ஆயிரக்கணக்கான ஆதரவாளர்களும் பொதுமக்களும் வந்தனர். இறுதியில் காரகஸில் உள்ள இராணுவ அருங்காட்சியகத்துக்கு சாவேஸ் உடல் கொண்டு வரப்பட்டது.

அங்கு சிவப்புக் கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. அவ்வழியாக சவப்பெட்டியை இராணுவத்தின் மூத்த கமாண்டர்கள் சுமந்து சென்றனர். பின்னர், அருங்காட்சியகத்தில் சாவேஸின் உடல் இராணுவ மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது.

## ஏவுகணை கட்டமைப்பு; பலப்படுத்தும் அமெரிக்கா




(வோஷிங்டன்)

அமெரிக்காவின் மேற்குக் கரையோரப் பகுதிகளில் ஏவுகணைக் கட்டமைப்பை மேலும் பலப்படுத்தவுள்ளதாக அந்த நாட்டின் பாதுகாப்பு செயலாளர் சுக் ஹேஜில் தெரிவித்துள்ளார்.

வடகொரியாவின் அணுப் பரிசோதனைகளால் எழுந்துள்ள சர்ச்சைகளை அடுத்து அமெரிக்கா இதனைக் குறிப்பிட்டுள்ளது.வட கொரியாவின் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள வேண்டிய தேவை தமக்குள்ளதாகவும் அமெரிக்காவின் பாதுகாப்புத் தலைமையகமான பென்டகன் அறிவித்துள்ளது.

## இராண்டுவ பஸ் விபத்து; 24 வீரர்கள் பலி

(இஸ்லாமபாத்)



பாகிஸ்தானின் வட பிராந்தியத்தில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 24 இராணுவத்தினர் பலியானதுடன் 5 பேர் காயமடைந்துள்ளனர்.

மலைப் பாங்கான பகுதியில் பஸ் விபத்துக்குள்ளானதாக பாகிஸ்தான் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

பஸ் கட்டுப்பாட்டை இழந்தமையால் விபத்துக்குள்ளானதாக தெரிவித்துள்ள பொலிஸார் மீட்புப் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்றுவருவதாகக் கூறியுள்ளனர்.

# யாழ். வர்த்தக நிலையங்கள் ஊழியர் சேமலாபநிதி செலுத்துவதில்லை

## ஊழியர்கள் புகார்

(திருநெல்வேலி)

யாழ்ப்பாண வர்த்தக நிலையங்கள் பலவற்றில் பணிக்கு அமர்த்தப்பட்டிருக்கும் இளம் பெண் ஊழியர்கள் பலருக்கு போதிய ஊதியம் வழங்கப்படுவதில்லை எனவும், மாலை ஆறு மணிக்குப்பின்னரும் அவர்களிடம் வேலை வாங்குவதாகவும், சில நிலையங்களில் அவர்களுக்கு இருப்பதற்குக்கூட இருக்கைகள் வழங்கப்படாமல் இருப்பதோடு எதுவித ஊழியர் சேமலாப நிதியும் கட்டப்படுவதில்லை எனவும் சில வர்த்தகர்களுக்கெதிராகப் பல புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இவ்இளம் பெண் ஊழியர்கள் பலர் தமது குடும்பத்தின் வறுமை நிலை காரணமாகவே வர்த்தக நிலையங்களில் வேலை செய்வதற்கு வந்துள்ள பலரது குடும்பங்கள் இப் பெண்களுக்குக் கிடைக்கும் சிறிய ஊதியத்தினைக்கொண்டே தமது ஜீவனோபாயத்தை நடாத்த வேண்டிய நிலையில் உள்ளார்கள். பல யுவதிகள் காலையில் வந்தே வர்த்தக நிலையங்கள் திறப்பதற்கு முன்பதாக வாசலில் காவல் கிடப்பதைக் காணமுடிகின்றது. பின்னர் இரவு வரை தொடர்ந்து அந்நிலையங்களிலேயே வேலை செய்கின்றார்கள் பலருக்கு வேலைக்கு வராத நாட்களுக்கு சம்பளம் வழங்கப்படுவதில்லை. மேலதிகக் கொடுப்பனவுகளும் கொடுக்கப்படுவதில்லை.

அதிகளவான இவ்இளம் பெண்கள் ஜவுளிக் கடைகளிலும் அழகு சாதன விற்பனை நிலையங்களிலும் வேலை செய்கின்றனர். சிலர் அச்சு இயந்திரசாலைகளிலும் பணியில் உள்ளனர். இவர்களின் நலன்களில் போதிய கவனம் செலுத்தப்படல் வேண்டும் எனப் பலராலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தொழில் திணைக்களம், வணிகர் கழகம், மகளிர் அமைபபுக்கள் மற்றும் பெண்களின் நலன்களில் அக்கறையுள்ள மன்றங்கள் இதில் அதிகளவு கவனம் செலுத்தவேண்டும். எனக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

முன்னர் ஊழியர் சங்கங்கள் செயற்பட்டன. தற்போது அவற்றின் செயற்பாடுகள் செயலற்றுப் போய்விட்ட நிலையில், பல இன்னல்கள் இடர்பாடுகள், நெருக்கடிகள் மத்தியில் பணி புரியும் இவ்இளம் பெண் ஊழியர்களின் துன்பங்கள், துயரங்களைத் துடைத்தெறியும் வகையில் உரியவர்கள் இவர்களின் நலன்களைப்பேணும் முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். எனப் பலராலும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.(137)

# ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்து வவுனியாவில் ஊர்வலம்

(வவுனியா)

யுத்தத்தை நிறைவு செய்து ஐக்கியத்தை ஏற்படுத்திய ஜனாதிபத்திக்கு ஆதரவு எனும் தொனிப்பொருளில் நேற்று இரு கட்சிகள் இணைந்து வவுனியாவில் ஊர்வலமொன்றினை ஏற்பாடு செய்திருந்தனர்.

கண்டி வீதியில் இருந்து ஆரம்பித்து இவ் ஊர்வலம் பஸார் வீதி வழியாக வவுனியா மாவட்ட செயலகத்தை வந்தடைந்தது.

தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் இணைந்து நடத்திய இவ் ஊர்வலத்தினை சிறி ரெலோ கட்சி மற்றும் இலங்கை சுதந்திரக் கட்சி வவுனியா மாவட்ட கிளை என்பன ஏற்பாடு செய்திருந்தன.

பல கிராமங்களில் இருந்தும் பேருந்துகளில் ஏற்றி வரப்பட்டிருந்த மக்கள் ஜனாதிபதி வாழ்க, அமெரிக்காவே எமது நாட்டில் தலையிடாதே, மேலைத்தேச நாடுகளே எமது நாட்டுக்குள் உனக்கு என்ன வேலை, ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக செயற்படுவதை கண்டிக்கின்றோம் என கோசங்களை எழுப்பியதுடன் ஊர்வலத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

இதனையடுத்து வவுனியா மாவட்ட செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சரஸ்வதி மோகநாதனிடம் சிறி ரெலோ கட்சியின் செயலாளர் பி.உதயராசா, சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்களான சுமதிபால மற்றும் செனவிரத்ன ஆகியோர் மகஜரினை கையளித்தனர். (160)

# திருமணத்திற்கு வந்தவர் பேர்ஸை பறிகொடுத்தார்

(திருநெல்வேலி)

நண்பனின் திருமணத்துக்காக வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வந்த குடும்பஸ்தர் ஒருவர் தனது பேர்ஸைப் பறிகொடுத்தார். நேற்று முன்தினம் இச் சம்பவம் இடம்பெற்றது.

கடந்த வெள்ளிக்கிழமை வவுனியாவிலிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணத்துக்கு வந்த இவர் நீராவியடியில் உள்ள உறவினர் ஒருவரின் வீட்டில் தங்கியிருந்தார்.

நேற்றுக் முன்தினம் கொக்குவில் பகுதியில் உள்ள உறவினர் ஒருவரின் வீட்டில் தங்கியிருந்தார். நேற்று முன்தினம் கொக்குவில்ப் பகுதியில் உள்ள கல்யாண மண்டபத்திற்கு மினி பஸ் ஒன்றில் ஏறிச் சென்றபோது பஸ் கட்டணத்தை செலுத்தி விட்டு பேர்ஸை அவர் அணிந்திருந்த ஜீன்ஸின் பின் பொக்கெட்டில் வைத்துள்ளார். கல்யாண மண்டபத்துக்கு சென்று பார்த்த போது பேர்ஸ் காணப்பட வில்லை.

பேர்ஸ"க்குள் 3600 ரூபா பணம், தேசிய அடையாள அட்டை, அடைவுச் சீட்டுக்கள், காணிக்குரிய முக்கிய ஆவணங்கள் போன்றவை இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது பற்றி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (137)

# கோப்பாய் விபத்தில் சகோதரர்கள் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கோப்பாய் பகுதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

கோப்பாய் பருத்தித்துறை வீதியில் நேற்று மதியம் இடம்பெற்ற வாகன விபத்தில் மோட்டார் வைக்கிளில் சென்ற சகோதரர்கள் இருவர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அல்வாயைச் சேர்ந்த த.தர்ஷன் (வயது-24) த.சத்தியா (வயது-22) ஆகிய இருவருமே இவ்வாறு காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுதிக்கப்பட்டுள்ளனர். (இ)

### சர்வதேச தலையீட்டின்...

இதன் காரணமாகவே இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக சர்வதேசம் யோசனையை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் முன்வைத்துள்ளது. இலங்கை அரசாங்கம் போருக்கு முன்னரும் பின்னரும் சர்வதேசத்துக்கு பல உறுதிமொழிகளை வழங்கியது. எனினும் அவற்றை அரசாங்கம் நிறைவேற்றவில்லை.

2012 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அமரவில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட யோசனையின்படி ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானங்களை இலங்கை பின்பற்றவில்லை. விடுதலைப் புலிகளுக்கு அப்பால் காணாமற்போன பல்லாயிரக்கணக்கான மக்கள் தொடர்பில் உரிய தீர்வுகள் வழங்கப்படவில்லை. இந்த நிலையில் நடைமுறை அரசாங்கம் தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வுகாணும் என்பதில் தமக்கு நம்பிக்கையில்லை. ஏற்கனவே ஜனநாயக வழிகளாக காணப்பட்ட பொலிஸ் ஆணைக்கு குழு, இலஞ்ச ஊழல் ஆணைக்குழு மற்றும் ஏனைய ஆணைக்குழுக்கள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளன. எனவே இதற்கு மத்தியில் அரசாங்கம் வடக்கு, கிழக்கு மக்களுக்கு நியாயமான நீதியான தீர்வை வழங்கும் என்று எதிர்ப் பார்ப்பதில் அர்த்தமில்லை. இதன் போது சர்வதேசத்தின் தலையீட்டின் அடிப்படையில் இலங்கையின் அனைத்து மக்களுக்கும் தீர்வு ஒன்று கிடைப்பதற்கான ஏதுநிலைகளே காணப்படுகின்றன. அவ்வாறான நிலையே தற்போது ஏற்பட்டுள்ளது. எனவே சர்வதேச தலையீட்டின் கீழ் இலங்கையின் அனைத்து மக்களுக்கும் உரிய தீர்வு கிடைக்கும் என்று தாம் நம்புவதாக சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

### இன்று...

இதனைத் தொடர்ந்து ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸசீக்குச் சொந்தமான விமானமும் தரையிறங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் பிரியங்கர ஜயரட்ண, பிரதி அமைச்சர் கீதாஞ்சன குணவர்தன, சிரேஷ்ட அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், இலங்கையிலுள்ள சீனத்தூதுவர் உள்ளிட்ட வெளிநாட்டுதூதுவர்கள், விமான சேவைகள் அதிகாரசபைத் தலைவர், விமான நிலைய நிறுவன தலைவர் உட்பட முக்கியஸ்தர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். நாளை முதல் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் வெளிநாட்டு உள்நாட்டு விமான சேவைகள் தொடர்ந்தும் நடைபெறும்.

### இலங்கைக்கு...

வில்லை என்றார். இந்த விவகாரம் தொடர்பாக ஐக்கிய முற்போக்கு கூட்டணி யில் இருந்து தி.மு.க. விலகும் என்று தி.மு.க. தலைவர் கலைஞர் கூறியுள்ளது குறித்து கேட்டதற்கு,

கருனாநிதி தனது கருத்தை கூறியிருக்கிறார். அதை நாங்கள் கவனத்தில் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு (நேற்று) வாக்கெடுப்பு நடைபெறபோவதில்லை. இன்றைக்கே (நேற்று) ஆதரவு விலக்கிக் கொள்ளப்படப் போவதும் இல்லை. தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பின்போது முடிவு செய்யப்படும். ஆலோசனை நடத்தாமல், உடனடியாக முடிவு எடுக்கமுடியாது. அதேசமயம் இந்த விடயத் தில் இறுதிமுடிவு எடுக்கப்படும். தி.மு.க. எங்களுடன் கூட்டணியில் உள்ளனர். அவர்களுடன் இது தொடர்பாக பேசுவோம் எனத் தெரிவித்தார்.

### சர்வதேச விசாரணைக்கு...

பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டும் என்று கூறியுள்ளது. ஐ.தே.க.வும் அதனையே வலியுறுத்துகிறது. அத்துடன், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் கடந்த காலத்தில் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையால் இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணை போன்ற அழுத்தங்கள் தீர்மானமாக முன்வைக்கப்பட்டால், அதனை ஏற்பதைத்தவிர இலங்கைக்கு வேறு வழி எதுவும் கிடையாது. அப்படியான ஒரு சர்வதேச விசாரணை எதுவும் வந்தால், அதற்கு முழுமையான பொறுப்பை தறபோதைய அரசாங்கமே ஏற்கவேண்டும் என்றும் யோகராஜன் தெரிவித்தார்.

### பொருளாதார...

அமெரிக்காவால் கொண்டுவரப்படவுள்ள இலங்கை குறித்த தீர்மானத்தின் இறுதி வடிவம் தாக்கல் செய்யப்பட்ட பின்னரே இலங்கையினால், அது குறித்து ஒரு முடிவுக்கு வரமுடியும். தற்போதைக்கு கடந்த மார்ச் மாதத்தில் நாங்கள் என்ன நிலைப்பாட்டில் இருந்தோமோ அந்த நிலையில்தான் இன்றும் உள்ளோம். இப்படியான தீர்மானம் தேவையற்ற ஒன்று என்பதுதான் தற்போதைக்கு எமது நிலைப்பாடு.

இதுவரை அமெரிக்காவுடன் முறைப்படியான கலந்துரையாடல் எதனையும் நாம் அண்மையில் செய்யவில்லை. இந்தியா இந்த விடயத்தில் என்ன நிலைப்பாட்டை எடுக்கும் என்பது குறித்து எமக்கு எதுவும் தெரியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

### பிரேரணையில்...

நீடிக்குமா என்பது சந்தேகம் நீடிக்காது என்பது உறுதி. மத்திய அரசு நடவடிக்கை எடுக்கத் தவறினால் கூட்டணியில் இருந்து நிச்சயம் வெளியேறுவோம் என்று கூறிய இலங்கைக்கு எதிரான தீர்மானத்தில் திருத்தம் கொண்டுவரப்படா விட்டால் அது இலங்கைத் தமிழருக்கு அநீதி இழைத்ததாகவே அமையும் என மேலும் தெரிவித்தார்.

### கடத்தப்பட்ட...

சொன்னதாகக் கூறி இச் சிறுவனை அழைத்துச்சென்று பூநகரியிலுள்ள கோயிலொன்றில் தங்கவைத்துள்ளனர். இதன் பின்னர் இச்சிறுவனை நேற்றுக் காலை பூநகரியி லுள்ள பாலத்திற்கு அருகில் அவ்விருவரும் விட்டுச் சென்றுள்ளதாக இச் சிறுவன் கூறியதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்நிலை யில் இச்சிறுவன் அங்கிருந்து யாழ். பொலிஸ் நிலையத்திற்கு வந்ததாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

### அமெரிக்க...

இலங்கைப் பிரச்சினை தொடர்பாக மாணவர்கள் போராட்டம் நடத்தி வருவது குறித்து அறிந்தேன். மாணவர்களின் போராட்டத்தை வரவேற்கிறேன். ஜனநாயக நாட்டில் அனைவருக்கும் அந்த உரிமை உண்டு. இலங்கை பிரச்சினை பற்றி தமிழகத்தில் அரசியல் கட்சிகள் எந்த சூழலில் எந்தெந்த கருத்துக்களை தெரிவித்தன என்பது குறித்து அனைவரும் அறிவர்.

தமிழக முதல் அமைச்சர் சட்டசபையிலும், அதற்கு வெளியிலும் என்ன கருத்துக்களைத் தெரிவித்தார் என்பது குறித்து பதிவுகள் உண்டு. தி.மு.க. தலைவர் கருணாநிதி இந்தப் பிரச்சினை குறித்து சட்டசபையிலும், வெளியிலும் என்னென்ன கருத்துக்களை கூறி உள்ளார் என்ற பதிவுகளும் உண்டு.

புலிகள் பற்றி ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும், ஒவ்வொரு விதமான கருத்துக்கள் உண்டு. தற்போது நம்முன் இருப்பது இலங்கை வாழ் தமிழர்களுக்கு சமவாழ்வையும் சம உரிமையையும் பெற்றுத்தருவது ஒன்றே. இதற்காக காங்கிரஸ் கட்சி தொடர்ந்து செயற்பட்டு கொண்டு இருக்கிறது.

ஐ.நா. சபை தீர்மானம் பற்றி கூறினார்கள். ஐ.நா. சபையில் அமெரிக்கா கொண்டுவர உள்ள தீர்மானம் இன்னும் முழுமையாக முடிவடையவில்லை. அதற்கு முன் கருத்து தெரிவிப்பது சரியாக இருக்காது. உலக நாடுகளுக்கு மத்தியில் கொண்டு வரக்கூடிய ஒரு தீர்மானம் மிக கவனத்தோடு தயாரிக்கப்பட வேண்டிய ஒன்று. வருகிற 22 ஆம் திகதி வரவுள்ள தீர்மானத்தின் மீது கடந்த ஆண்டு ஐ.நா.வில் அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானத்தை இந்தியா ஆதரித்தது போல, இந்தமுறையும் ஆதரிக்கும் என நம்புகிறேன். சுதந்திரமான, நம்பகத்தன்மை மிகுந்த விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதை நாம் ஏற்கிறோம். தமிழகத்திற்காக இந்தியா இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கும் என நான் நம்புகிறேன். நான் நம்புவதை நீங்களும் நம்புங்கள். நமது நம்பிக்கையை மாணவர்களுக்கும் ஊட்டுங்கள், தமிழகத்திற்கு இந்தியா நன்மையே செய்யும் என நம்புவோம் எனத் தெரிவித்தார்.

# வடக்கின் காணிப்பிரச்சினைக்கு பத்துவருடம் சென்றாலும் தீர்வில்லை

## – அமைச்சர் குணரத்ன வீரக்கோன் தெரிவிப்பு

(கேப்பாபுலவு)

வடக்கிலுள்ள காணிப்பிரச்சினைக்கு பத்துவருடங்கள் சென்றாலும் தீர்வினைப்பெற்றுக்கொடுக்க முடியாதென மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு கேப்பாபுலவு மாதிரிக் கிராமத்தில் முதற்கட்டமாகு கட்டப்பட்ட 50 வீடுகளை பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

யுத்தக் காலத்தின் போது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த இடங்கள் குறித்த தகவல்கள் தற்போது இல்லாத நிலையில் அவற்றை ஆராய்ந்து காணிகளுக்கான ஆவணங்களை தயாரிப்பதற்கு பல வருடங்கள் செல்லும் எனவும் குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு, கேப்பாபுலவு மாதிரிக் கிராமத்தில் முதற்கட்டமாக கட்டப்பட்ட 50 வீடுகள் நேற்று முன்தினம் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன. அத்துடன் அதே பகுதியில் மேலும் 115 வீடுகளை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வும் நடைபெற்றது.

அமைச்சர் குணரட்னவீரக்கோன், பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் மேஜர் ஜெனரல் மார்க் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

கால் ஏக்கர் நிலப்பரப்பில் இரண்டு அறைகள், வரவேற்பறை, மலசலகூட வசதிகளுடன் சுமார் 7 இலட்சம் ரூபா பெறுமதியான வீடாக ஒவ்வொரு வீடுகளும் அமைந்துள்ளன.

அத்துடன் இந்த வீடுகளில் குடியமர்த்தப்பட்டுள்ள அனைவரினதும் வாழ்வாதாரத்துக்காக அக்கிராம வயல் பகுதியில் செய்கைக்கென காணிகளும் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை, மேலும் 142 குடும்பங்கள் இப்பகுதியில் மீளக் குடியமர்த்தப்படவுள்ளனர். இவர்களில் 126 குடும்பங்கள் பதிவாகியுள்ளன. இவர்களில் 14 குடும்பங்கள் தற்போது இப் பகுதிக்கு வந்துள்ளன.

இந்நிகழ்வில் அமைச்சின் செயலர் ஜனக சுகததாஸ, மேலதிக செயலாளர் நஜிமுதீன், உதவிச் செயலாளர் நிகரில்காந்த், முல்லைத்தீவு அரச அதிபர் என். வேதநாயகன், ஜனாதிபதியின் இணைப்பாளர் கனகரட்னம், சூரியகுமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# நோயாளர் குறித்த தகவல்கள் பணிப்பாளர்களுக்கு தெளிவூட்டல்

நோயாளர்கள் தொடர்பான தகவல்களை உறவினர்களுக்கு வழங்குகின்றமை தொடர்பாக நாடு முழுவதிலுமுள்ள வைத்தியசாலைகளின் பணிப்பாளர்களுக்கு தெளிவூட்டும் நடவடிக்கையொன்றை முன்னெடுக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

வைத்தியசாலைகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்கள் தொடர்பான தகவல்களை அவர்களது உறவினர்கள் வைத்தியரிடமோ அல்லது வைத்தியசாலையின் நிர்வாகத்தினரிடமோ கேட்கும் பட்சத்தில் அதற்கான உரிய பதில் வழங்கப்படுவதில்லை என அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதனால் நோயாளர்களின் உறவினர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிலைமையை தவிர்த்துக் கொள்ளும் வகையில் நோயாளர்களின் உறவினர்களுக்கு தேவையான தகவல்களை வழங்குவது குறித்து முதற்கட்டமாக பணிப்பாளர்களை தெளிவுபடுத்த அமைச்சு தீர்மானித்துள்ளது.

# பிரபல ஊடகவியலாளர் ஜனதாஸ பீரிஸ் காலமானார்




பிரபல ஊடகவியலாளர் ஜனதாஸ பீரிஸ் நேற்றுப் பிற்பகல் காலமானார். கொழும்பு தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே அவர் மரணமடைந்துள்ளார்.

1942 ஜூலை மாதம் 7 ஆம் திகதி பிறந்த ஜனதாஸ பீரிஸுக்கு இறக்கும் போது வயது 71. மொரட்டுவை வேல்ஸ் குமார வித்தியாலயத்தில் பாடசாலைக் கல்வியை பூர்த்தி செய்த அவர் களனி பல்கலைக்கழகத்தின் மக்கள் தொடர்பாடல் தொடர்பில் பட்டம் பெற்றவராவார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் லேக் ஹவுஸ் ஆகியவற்றின் தலைவராக கடமையாற்றிய அவர், அச்சு மற்றும் ஊடகத்துறையில் பிரபல ஊடகவியலாளராகவும் திகழ்ந்தார்.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் காலப்பகுதியில் ஜனாதிபதி ஊடகப் பிரிவின் தலைவராக கடமையாற்றிய இவர், 2004 ஆம் ஆண்டு ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் சார்பில் தேசிய பட்டியல் மூலம் நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவிற்கு எதிராக யாழில் சுவரொட்டிகள்



யாழ்ப்பாணத்தில் அமெரிக்காவிற்கு எதிராக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. இந்த சுவரொட்டிகள் நேற்று முன்தினம் இரவு முதல் ஒட்டப்பட்டுள்ளது.

இந்த சுவரொட்டிகளுக்கு மக்கள் முன்னணி என உரிமை கோரப்பட்டுள்ளது. யாழ். நகரிலுள்ள பருத்தித்துறை வீதி, யாழ். வேம்படி வீதி மற்றும் ஆஸ்பத்திரி வீதி போன்ற பல இடங்களில் இந்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

ஜெனிவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் அமெரிக்காவினால் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. எங்கள் வீட்டுப் பிரச்சினைகளை நாங்கள் பார்த்துக் கொள்வோம், அமெரிக்காவே வாயை மூடு மற்றும் எங்கள் தானைத தலைவர் மகிந்த ராஜபக்ஷவே ஆகிய வாசகங்கள் சுவரொட்டிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. (25)

# சைக்கிளில் சென்றவரை மோதித்தள்ளியது "வடி"

(யாழ்ப்பாணம்)

சைக்கிளில் சென்ற இளைஞரை மோதிவிட்டு வடி வாகனம் தப்பிச் சென்ற சம்பவம் ஒன்று நேற்று முன்தினமிரவு இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் சைக்கிளில் சென்ற இளைஞன் படுகாயமடைந்து யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மிருகவைத்திய அதிகாரிபணிமனையில் பணியாற்றும் சிற்றூழியர் ஒருவரே இவ்வாறு காயமடைந்துள்ளார். இவர் இரவு 7மணியளவில் ரெலிக்கொம் வாயிற்பகுதியால் வந்துள்ளார். பின்னே வந்த வடி வாகனம் இவரை மோதிவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

வித்தகபுரம் தெல்லிப்பழையைச் சேர்ந்த சுப்பிரமணியம் அன்பழகன் என்பவரே இவ்வாறு காயமடைந்தவராவார். (இ)

# மதமாற்ற முயற்சிகளில் இஸ்லாமிய அடிப்படை வாதிகள்

## – பொதுபலசேனா குற்றச்சாட்டு



இஸ்லாமிய அடிப்படைவாதிகள் பௌத்த இளைஞர், யுவதிகளை பல வழிகளில் மத மாற்றம் செய்து வருகின்றனர். அதாவது முஸ்லிம் வர்த்தக நிறுவனங்களில் பௌத்த இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்களை கொடுத்து அவர்களை பல வழிகளில் மத மாற்றம் செய்கின்றனர். இது தொடர்பாக எமக்கு பல தகவல்கள் கிடைத்துள்ளது. இன்னும் 50 வருடங்களில் இலங்கையை இஸ்லாமிய நாடாக மாற்ற மேற்கொள்ளப்படும் விசேட திட்டங்களே இவை. இவற்றை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுபலசேனா அமைப்பின் தலைவர் கிரம விமலஜோதி தேரர் தெரிவிததார்.

நேற்று மாலை கண்டி நகரில் மத்திய சந்தை முன் இடம்பெற்ற பொதுபல சேனாவின் பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் உரையாற்றிய கிரம விமலஜோதி தேரர்,

முப்பது வருட கால யுத்தம் ஒன்றை அனுபவித்த நாங்கள் மற்றுமொரு இனவாத அல்லது மத வாத யுத்தம் ஏற்பட இடமளிக்க மாட்டோம். நாங்கள் 400 வருடங்களுக்கு மேலாக வெளிநாட்டு சக்திகளால் ஆக்கிரமிக்கப்பட்டு இருந்தோம். அக் காலத்தில் நாங்கள் எதிர்நோக்கிய சவால்கள் எண்ணிலடங்காதவை. சிங்கள பௌத்த மக்கள் அன்று முதல் உயிர்த் தியாகம் செய்தே இன் நாட்டை பாதுகாத்தனர்.

தற்போது மீண்டும் எம் நாட்டுக்கு பல்வேறு வடிவில் சவால்களும் ஆக்கிரமிப்புக்களும் வந்த வண்ணம் உள்ளன. இலங்கையில் 400இற்கும் மேற்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில் இஸ்லாமிய அடிப்படைவாதிகள் பௌத்த இளைஞர், யுவதிகளையும் மதமாற்றம் செய்யும் நடடிவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். நாட்டை இஸ்லாமிய நாடாக்கும் விஷேட திட்டத்தில் இதுவும் ஒன்று.

அந்தவகையில் நாங்கள் இந்த அபாயகரமான நிலைமை உணர்ந்து கடந்த மே மாதம் முதல் நடாத்திய போராட்டதின் பாரிய வெற்றிதான் ஹலால் வெற்றியாகும். எங்களில் சிலர் எம் மீது குற்றம் கூறுகின்றனர். நாங்கள் இன யுத்தம் ஒன்றையும் மத யுத்தம் ஒன்றையும் திணிக்க முற்படுவதாக அவர்கள் கூறுகின்றனர். இருந்த போதும் 30 வருடங்களாக அனுபவித்த யுத்தம் காரணமாக நாட்டின் அனைத்து இன மக்களும் பாதிக்கப்பட்டனர். எனவே இன்னுமொரு இனமத மோதலை ஏற்படுத்த நாங்கள் இடமளிக்க மாட்டோம் என கூற விரும்புகின்றோம் என்றார்.

# பிறமாநிலங்களுக்கும் பரவுகிறது போராட்டம்



(சென்னை)

இலங்கைக்கு எதிராக தமிழகத்தில் மாணவர்கள் நடத்தி வரும் போராட்டங்களை ஆதரித்தும், இலங்கையின் போர்க்குற்றங்களுக்கு பன்னாட்டு விசாரணையை வலியுறுத்தியும் ஏனைய மாநிலங்களிலும் போராட்டம் பரவியுள்ளது.

கர்நாடக வாழ் தமிழர்களும் நேற்று ஒரு நாள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர். பெங்களூரில் தகவல் தொழில்நுட்பத்துறையில் பணிபுரியும் ஏராளமான தமிழக இளைஞர்களும், இளம் பெண்களும் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றனர்.

மகாராஷ்டிர மாநில தலைநகர் மும்பையில் தராவி பகுதியில் உள்ள தமிழர்களும் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்பகுதியைச் சேர்ந்த 50இற்கும் மேற்பட்ட தமிழர்கள் நேற்று ஒரு நாள் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் இந்தியாவே தனித் தீர்மானம் கொண்டுவர வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர்

# சர்வதேச விசாரணைகளுக்கு இலங்கை இணங்கவேண்டும்

சர்வதேச விசாரணைகளுக்கு இணங்குமாறு இலங்கையை இந்தியா வலியுறுத்த வேண்டுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கோரியுள்ளது.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் உயர் மட்ட சர்வதேச சுயாதீன விசாரணைகள் நடத்தப்பட வேண்டியது அவசியமானது என இலங்கையை, மத்திய அரசாங்கம் வலியுறுத்த வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் பேசும் மக்களுக்கு நியாயமான அதிகாரப் பகிர்வினை வழங்கி காத்திரமான அரசியல் தீர்வுத் திட்டமொன்றை இலங்கை அரசாங்கம் முன்வைக்க வேண்டுமென கம்யூனிஸ்ட் கட்சி கோரியுள்ளது.

அப்பாவிப் பொதுமக்கள் மீது யுத்தக்குற்றச் செயல்கள் மேற்கொள்ளப்பட்டமைக்கான போதியளவு சாட்சியங்கள் காணப்படுவதாக தெரிவித்துள்ளது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த இலங்கை அரசாங்கம் தவறியுள்ளதாகவும் குற்றம் சுமத்தியுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 மார்ச் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.